ரிஜிஸ்டர் நெ. 2041

தனிப்பிரதி விலை | உள்நாடு 1 அணா
வெளிநாடு 1½ அணா

# குடி அரசு

| | |
|---|---|
| வருட சந்தா முன்பணம் | — ரூ 3—0 |
| 6 மாத சந்தா ,, | — ,, 1 12 |
| வெளிநாட்டிற்கு ,, | — ,, 4—0 |

வாரப்பதிப்பு

ஆசிரியர்: ஈ. வெ. ராமசாமி.

வியாபாரிகள் விளம்பரம்: அங். 1க்கு ரூ. 1
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 5 | சென்னை, சுக்கிலஹு ஐப்பசிமீ 4உ (20—10—29) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 24

இந்தியாவிலும் இலங்கையிலும் நடைபெற்ற அநேக வைத்திய மகாநாடுகளிலும், மருந்து கண் காட்சிகளிலும் முதல்தரமான மருந்தென்று அநேக தங்கபதக்கங்கள் பரிசு பெற்றவரும், வைத்திய சிம்மம், வைத்திய பூபதி, வைத்திய ஆசிரியர், ஸ்பெஷலிஸ்ட் என்ற பல பட்டங்களைப் பெற்றவருமாகிய,

## டாக்டர் டி. சி. சிங்காரம்

அவர்களால் தயார் செய்யப்படும் பிரசித்தி பெற்ற மருந்துகள்.

(ஓர் யோகீஸ்வரரின் அநுபவமுறைப்படி தயார் செய்யப்படுவது.)

### ஆச்சரியமாய் அநேக நோய்களை குணம் செய்கிறது.

### மஹா சந்தன தைலம்

உலகப் பிரசித்தி பெற்றது

கண் பார்வை குறைவாயிருந்த அநேகருக்கு இத்தயிலத்தின் உபயோகத்தினால் நல்ல பார்வை ஏற்பட்டிருக்கிறது.

இத்தயிலத்தால் குணமாகும் நோய்கள்

| | |
|---|---|
| கண் எரிச்சல் | வெட்டை சூடு |
| கண் சிவப்பு | காது நோய் |
| கண்ணில் நீர் வடிதல் | மண்டை இடி |
| கண் அரிப்பு | பீனிசம் |
| கண் பார்வைக்குறைவு | தலைமயக்கம் |
| கண் கூச்சம் | தலைப்பொடுகு |
| கண்ணில் பீளை தள்ளுதல் | சொரி சிரங்கு |
| மேகநீர், வெள்ளெழுத்து | தலைமயிர் உதிர்தல் |
| ஒருத்தலை நோய் | நாள்பட்ட தலைநோய் |
| கைகால் எரிச்சல் | முதலிய பல வியாதிகளை |
| மூலச்சூடு | ஆச்சரியமாய் குணம் செய்யும் |
| அஸ்திகாங்கை | |

### சதலாமிர்த லேகியம்

சிறந்த தாதுபுஷ்டி மருந்து!

மிருந்த பலத்தையும் வீரிய விருத்தியையும் உண்டாக்கும்.

இந்த லேகியத்தை சாப்பிட்டு வந்தால் கைகால் அசதி, இடுப்பு வலி, பலக்குறைவு, ஆயாசம், நரம்புத்தளர்ச்சி, சொப்பன ஸ்கலிதம், சம்போக காலத்தில் ஏற்படும் துரிதஸ்கலிதம் முதலிய கொடிய வியாதிகளைப்போக்கி குறைந்த ஆண் தன்மையை அதிகரிக்கச்செய்து, தளர்ந்த நரம்புகளை கெட்டிப்படுத்தி, வீரியத்தை விருத்தி செய்து நல்ல திடகாத்திர சரீரத்தை உண்டாக்கும். மனதுக்கு உற்சாகத்தையும், சுறு சுறுப்பையும் கொடுக்கும். எவ்வளவு கடின வேலை செய்தாலும் யாதொரு களைப்பும் உண்டாகாது. சம்போக இன்பத்தை முற்றிலும் அநுபவிக்கச்செய்யும். சாப்பிட மதுரமுள்ளது. பத்தியமில்லை.

ஒருசேர் டப்பி விலை ரூ. 2—8—0

சரீரத்திலுள்ள எவ்வித உஷ்ணத்தையும் நீக்கி குளிர்ச்சியைக்கொடுக்கும். ஒரு முறை இத்தயிலத்தை உபயோகித்தவர்கள், அவர்களே மற்றவர்களுக்கும் சிபார்சு செய்து வருகிறார்கள். இதன் உண்மையை நீங்களும் ஒரு முறை பரிக்ஷித்துப்பார்க்கவும். ஆண், பெண் யாவரும் ஸ்நானம் செய்யலாம்.

24 அவுன்ஸ் டின் விலை ரூ. 4—0—0 12 அவுன்ஸ் டின் விலை ரூ. 2—2—0

பாக்கிங், தபால் செலவு பிரத்தியேகம். மலாய் நாட்டு வாசிகள் ஆர்டருடன் முன்பணம் அனுப்பவேண்டும்.

## டி. சி. சிங்காரம் அண்டு கோ.,

(38) தெப்பக்குளம் போஸ்டு, திருச்சினாப்பள்ளி.

## ப கு த் த றி வு

கூடிய விரைவில் "குடி அரசு" பதிப்பகத்தாரால் வெளிவரப் போகும் மாதப்பத்திரிகை.

இதில் பகுத்தறிவில் சிறந்த பல அறிஞர்களின் கட்டுரைகளும் 'சித்திரபுத்திரன்' வேடிக்கை சம்பாஷணைகளும் ஏராளமாக வெளி வரும். இப்பொழுதே ஆயிரத்துக்கு மேற்பட்ட சந்தாதாரர்கள் முன் பணம் அனுப்பித் தங்கள்பெயரைப் பதிவு செய்திருக்கின்றனர். வருடசந்தா அணா 0—8—0 எட்டே. வெளிநாடுகளுக்கு 0 12 0.

(எப்) விலாசம் :— "பகுத்தறிவு" காரியாலயம், 14, மவுண்ட்ரோட், சென்னை

கடவுள் கடவுளென
காசைத்
தொலைக்காதே

## பூவுலக வாழ்க்கைக்கு இன்றியமையாத சிங்கபலத்தைத் தருவதெது?

# அமிர்த சஞ்சீவி லேகியமும் அயக்காந்த செந்தூரமுமே

முறையாய்ச் செய்த அயக்காந்த
செந்தூரத்தைக் காட்டிலும்
தேகபலத்தைத் தரும் ஔடதம்
வேறொன்றுமில்லை

**விளம்பரம்**
**இதைக் கண்ணுறும் கனவான்களே!**



இந்த லேகிய செந்தூரங்கள் சாமான்யமானவையல்ல. அபாரமான பலத்தைத் தரக்கூடிய சக்தி அமைந்துள்ளவை. உறுதியாய் இவற்றை நம்பி வாங்கிச் சாப்பிட்டால் ஒரே தடவையிலேயே இவற்றின் விசேடகுணம் நன்கு விளங்கும்.

## இந்த லேகிய செந்தூரங்களால்

### நிவர்த்தியாகும் முக்கிய வியாதிகளாவன:

தற்காலத்தில் மனிதரின் பால்ய சேஷ்டையாலும், இரத்தப் போக்காலும் அவர்க்கு உண்டான 20 வகை மேகரோகங்கள், குஷ்டரோகம், குன்மரோகம், பித்தப்பாண்டு, கைகால் முடக்கு, ஓலோய்வு, பித்த எப்பம், நெஞ்சு தொண்டை எரிச்சல், வயிற்றுப்பிசம், அஜீரணம், பசியில்லாமை, தாதுஹீனம், தேக உளைச்சல், கண்ணில் நீர்வடிதல், சோம்பல், நித்திரையில்லாமை, தலை சுழற்றல், நீர் இறங்கும்போது பொறுக்கமுடியாத பாதையைத்தரும் நீர்மேகம் முதலியவைகள் ஆச்சரியப்படத்தக்க விதமாய் நீங்கிவிடும். பயங்கரமான மேகசம்பந்த வியாதிகளைப் பத்தே வேளையில் போக்கி சப்த நரம்புகளுக்கும் முறுக்கேற்றி அபரிமிதமான இரத்த விருத்தியைப் பெருக்கி பலத்தைத் தருவதில் இதற்கு மிஞ்சின இலேகிய பஸ்பம் வேறெங்குமில்லை என்று நாம் உறுதியாகச் சொல்லுவோம். இதல்லாமல் தேகத்தைப் புஷ்டியாக்கித் தேகத்தடிப்பு, நகக்கண் வெளுத்திருத்தல் முதலிய வியாதிகளைக் கண்டித்து, தினந்தோறும் மலத்தைத் தாராளமாய்ப் போக்குவதில் இந்த லேகிய செந்தூரங்களே முதன்மையானவை யென்பதை நாம் எமது அனுபவத்தில் கண்டிருக்கிறோம். நிற்க, இந்த லேகிய செந்தூரங்கள், மேற்கண்ட வியாதிகளைக் கண்டிப்பாய் நிவர்த்திக்குமா என்னும் சந்தேகமுடையோர் பரீக்ஷார்த்தமாக முதலில் 48-நாளாவது வாங்கி புண்டால் இவற்றின் அபார குணம் தெரியவரும் தவிர யாங்கள் இம்மகத்துவம் பொருந்திய லேகிய செந்தூரங்களை எவ்வளவு சிறப்பித்துக் கூறியபோதிலும் அது தகும். மேலும் இவற்றை நோய் உள்ளவரேத்தாம் சாப்பிடவேண்டும் என்ற அவசியமில்லை; யாவரும் சாப்பிடலாம். நோய் உள்ளவர்களைவிட நோய் இல்லாதவர்கள் எண்ணிக்கையாக 48-நாள் இந்த லேகிய செந்தூரங்களை யாதும் பத்தியமின்றிச் சாப்பிட அவர்க்கு நல்ல பலம் ஏற்படும். இது தவறாது. இவற்றைத் தருவித்து நண்பர் எண்ணிக்கையாகச் சாப்பிட்டு 10-நாளைக்குள் குணம் இல்லாவிடில் உடனே தெரியப்படுத்தினால் கட்டாயம் இவற்றிற்கு வாங்கிய பணம் வாபீஸ் செய்யப்படும். தவிர மேற்காட்டிய நோய்கள் உடையோர் 48-நாட்கள் சாப்பிடுவோர்களேயானால் அவை முழுதும் நீங்கிவிடும். அப்படி நீங்கிச் குணம் ஏற்படாவிடில் நாங்கள் அதற்கு உத்திரவாதிகளாவோம். யாங்கள் இவ்வளவு அருமையான லேகிய செந்தூரங்களை எவ்வளவோ சிரத்தையுடன் கஷ்டப்பட்டு முடித்துப் பரோபகார்த்தமாக வெளியிட்டோம். இவ்வருமை வாய்ந்த லேகிய செந்தூரங்களுக்குப் பொன் மெடல், வெள்ளி மெடல் பெற்றதல்லாமல் ஆயிரக்கணக்கான யோக்கியதா பத்திரங்களும் பெற்றிருக்கின்றோம். ஆதலின் நமது லேகிய செந்தூரங்கள் யாம் சொன்னபடி குணத்தைக் கொடுக்கும் என்பதைப்பற்றி ஜவாப்தாரியாயிருக்கக் காத்துக்கொண்டிருக்கிறோம்; இது உண்மை. இவற்றை ஒரே தரம் தருவித்துப் பாருங்கள்; எமது உண்மை விளங்கும்.

வாதாதிக்க தோஷத்தினாலாவது, துரப்பியாசத்தினாலாவது, அதிக மனக்கவலையினாலாவது, அடிக்கடி உண்டாகும் நோயினாலாவது, மற்றெந்தக் காரணத்தினாலாவது பல மிழந்தவர்கள் எண்ணிக்கையாக மேற்படி லேகிய செந்தூரங்களைப் புசிப்பார்களானால் இவை தேகாரோக்கியம், வலிமை, அழகு முதலியவற்றை அவர்க்குக் கொடுத்து அவர்களைச் சந்தோஷிக்கச் செய்யுமென்பதில் தடையில்லை. வெளியூர்க் கனவான்கள் இந்த லேகிய செந்தூரங்களில் முழு நம்பிக்கைவைத்து ஒரே ஒருதரம் இவற்றைப் பரீக்ஷிப்பார்களானால், அவர்கள் அவசியம் ஆனந்த மடைவார்கள்.

இந்த லேகிய செந்தூரங்களுக்குப் பத்தியமே கிடையாது. எந்தப் பண்டங்களையும் நீக்குதலின்றி சாப்பிடலாம். மருந்து சாப்பிடும்போது பசி அதிகமாய் எடுக்கும் ஆதலால் பச்சைப்பயற்றுக் குழம்பு, கறி, மார்க்கண்ட ரூப்பு. இவைகளை அதிகமாகப் பசியைத் தணிக்கக்கூடிய விதமாகத் தாமதம் செய்யாமல் சாப்பிட்டுவர வேண்டியது. இவற்றைப் புசிக்கும்போதெல்லாம் பலகாராதிகள் சாப்பிடல் வேண்டும். தயிர், பால், நெய் முதலியவைகள் எவைகளாயிருந்தாலும் சந்தேகமின்றிச் சாப்பிட்டுவரலாம்.

இவ்வருமை வாய்ந்த லேகிய செந்தூரங்களை மட்டும் ஒருவர் தருவித்து எண்ணிக்கையாக 48 நாள் சாப்பிடுவாரேயானால் இவை தேகத்தில் ஊற ஊற, மேகமெல்லாம் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கி அவர் தேகமானது வலுத்துப் புதிய ரத்தம் பரவித் தன் வாழ்நாள் பரியந்தம் இளைக்காமலிருக்கும். இவற்றைப் புருஷன் பெண்ஜாதி இருவரும் ஏககாலத்தில் ஒற்றுமையாய்ச் சாப்பிட்டு வந்தார்களேயானால் அவர்க்கு உதிக்கும் மக்கள் மிகுந்த தேஜஸோடு தோன்றுவார்கள். இது உண்மை. இதை அதிகம் எழுதுதல் அனாவசியம்.

இந்தியா, பர்மா, ஸிலோன் ஆகிய உள் நாடுகளுக்கு 24 நாள் சாப்பிடக்கூடிய லேகியமும் செந்தூரமும் விலை ரூ. 1 12 0. போஸ்டேஜ் அணா 6. ஒரே தடவை 48 நாள் மருந்து வாங்குவோருக்கு போஸ்டேஜ் உள்பட ரூ. 4.

பினாங்கு, சிங்கப்பூர், நெட்டால் முதலிய அயல்நாடுகளுக்கு 24 நாள் சாப்பிடக்கூடிய மருந்து விலை: ரூபா 1 12 0 தபால் கூலி ரூபா 1 4 0

48 நாள் மருந்து வாங்குவோருக்கு போஸ்டேஜ் உள்பட ரூபா 5—8—0. சிங்கப்பூர், பினாங், மலாக்கா முதலிய வெளி நாடுகளுக்கு வி. பி. ஆர்டர் இருந்தாலும் முன்பணம் அனுப்பாதவர்களுக்கு மருந்து அனுப்பப்படமாட்டாது.

(51) விலாசம்:— **கருணாநிதி டிப்போ,** 1/6 வெங்கடேசமேஸ்திரி தெரு, சென்னை.

# எங்கள் விளக்கமும் ஆராய்ச்சியும்

(கைவல்யம்)

3

ஆரியர் என்னும் இனத்தார் இந்தியாவின்மேல் படையெடுத்து வந்து ஜெயித்து வேதத்தை இந்தியாவில் பரப்பினார்களென்று சொல்லுவது ஐரோப்பியர்களின் கற்பனையாகவே யிருக்கட்டும். அதை நம்பவும் வேண்டாம். ஆரிய மறைகள் உண்டானது கங்கை யமுனை நதிகளின் நடுவிலிருக்கும் மத்திய தேசத்தில் என்பதும் சரியாகவே யிருக்கட்டும். மறையென்ற தமிழ்ச்சொல் ஆரியர் கலந்த பிற்காலத்தே வடமொழி வேதத்தையுங் குறிக்க வழங்கியது என்று திரு கா. சுப்பிரமணிய பிள்ளை சொன்னதை மறுக்கும் திரு: சாம்பசிவம் பிள்ளையவர்கள் மறையென்றது ஆரியவேதத்தையே குறித்து நிற்கும் என்று சொல்லுவதையே ஒத்துக்கொள்ளுவோம். அவ்வாரிய வேதத்தில் தென்னாட்டுச் சைவர்களை யெல்லாம் சூத்திரர்களாக்கி யிருப்பதின் ஏற்பாடென்னவென்பதை எங்கள் ஆராய்ச்சியில் உண்டாயிருக்கும் கேள்வி.

திரு நான்மறை விளக்க ஆராய்ச்சி செய்ய வந்த திரு. சாம்பசிவம்பிள்ளையின் ஆராய்ச்சி முடிவுப்பிரகாரமும், அதற்கு அபிப்பிராயம் கூற வந்த வித்வப் பெரியார்களின் மதிப்புரைப் பிரகாரமும் இவர்கள் சூத்திரர்கள். சூத்திரனென்றால் ஆசாரம் கெட்டவன்; ஒழுக்கம் கெட்டவன்; தாசி மகன்; அடிமை என்னும்படியான தன்மையை உடையவன்; என்பது பண்டிதர்களுக்குத் தெரியும். கிலேசமுடைய சூத்திரனுக்கோ நான்மறையில் பிராமணனுக்குச் செய்யும் ஊழியம் தவிர வேறு ஒரு அதிகாரமும் கிடையாது. பிராமணன் சொல்லும் நான்மறையை சூத்திரன் காதில் கேட்டால் கேட்டவனுக்கு தண்டனையும் சொன்னவனுக்கு பிராயச்சித்தமும் உடனே செய்ய வேண்டும். அவ்விதம் செய்யாத க்ஷத்திரியன் அழிந்து போவான்; உலகத்தில் தருமமும் நசித்துப் போகும் என்று நான்மறைகள் சொல்லுகின்றனவென்பதைப் பண்டிதர்களறிவார்கள். உலக தருமமே கெட்டுப்போகும் ஒரு காரியத்தை திரு: சாம்பசிவம் பிள்ளை ஏன் செய்யவேண்டும்?

வால்மீக ராமாயணத்திற்கு தமிழ் உரை யெழுதின திரு: சீனிவாச அய்யங்கார் ஆச்சாரியர்கள் தவிர இராமாயணத்திற்கு யாரும் உரை எழுத அருகரல்லர் என்று எழுதி இருக்கிறார். இதனால் பார்ப்பனர்களின் மனோபாவம் விளங்கும். அப்படி இருக்கையில் திரு நான்மறைக்குச் சூத்திரனை திரு சாம்பசிவம் பிள்ளை ஆராய்ச்சி செய்வதும் அதற்கு வித்வப் பெரியார்கள் உரை காண்பதும் இவர்களைக் கொண்ட நான்மறைக்குப் பொருத்தமில்லையே. பார்ப்பனர்களுடைய தன்னலம் கெட்டுப் போகாமலிருப்பதற்கு அநுகூலமான திரு சாம்பசிவம் பிள்ளையவர்களின் பின்னால் நின்று எழுதத் தூண்டிவிடப்பட்ட நான்மறை விளக்க ஆராய்ச்சியைப் பார்ப்பனர்கள் உண்மையில் மதிப்பதில்லை. நமக்குள்ளாகவே பார்ப்பார்களுடைய மேன்மைகளையும் லாபத்தையும் கொண்டாடப்படும் ஆராய்ச்சிகளையும் அதன் ஆசிரியர்களையும் முகஸ்துதி செய்தாலும் நம் ஆராய்ச்சியாளர்களுடையவும் நமது வித்வப் பெரியார்களுடையவும் இழிவிற்குக் கூடவந்த பார்ப்பனனும் வராமலிருக்கத் திருநான்மறையால் தடுக்கப்பட்டு, நம்மையெல்லாம் சூத்திரர்களாக்கியுமிருக்கிறதே.

பார்ப்பனர்களும் மற்றவர்களும் ஒன்று சேர்ந்திருப்பதற்கு இங்கிலீஷ் சட்டராச்சிய அமைப்புகள் இசைந்தாலும்; பார்ப்பனர்களின் மனோபாவனைகளும் அதன் ஏற்பாடுகளும் இந்து மத சாஸ்திரங்களும் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. ஜீவன் பக்தியோக ஞானங்களால் விருத்தியடைந்து ஈஸ்வர சந்நிதிக்குத் தன்னை பக்குவப்படுத்திக்கொள்ளலாம், என்று இந்து தத்துவ சாத்திரங்களிலும், அதை விளக்கிய ஆசாரிகளின் சில சுலோகங்களிலும், தேவார திருவாசக திருவாய் மொழிகளிலும், தனிப் பெரியவர்களின் தனிப்பாட்டுகளிலும், சில இடங்களில் ஜீவன் ஈஸ்வர சம்பந்தத்தையே கூறப்பட்டுள்ளதென்றாலும், பெரும்பாகம் வருணாச்சிரமத்தின் வழியே வற்புறுத்தப்பட்டிருக்கின்றது. இந்து சமய சாஸ்திரப் பகுதிகளெல்லாம் அதையே ஆதாரமாகக் கொண்டுமிருக்கின்றன. அந்த சாஸ்திரத்தின் ஆதிக்கத்தால் கீழ் மேல் கற்பிக்கப்பட்டு அவை என்றும் நிலைத்திருக்க எல்லா ஏற்பாடுகளும் அநேக காலமாகச் செய்யப்பட்டு வந்திருக்கிறது. அதற்கு அனுகூலமாக அறிவு விருத்தியாகும் இந்தக் காலத்திலும் நமது வித்வப் பெரியார்களின் உரையும் ஆராய்ச்சியுமிருக்குமேயானால், நம்மை நாமே இழிவுப்படுத்திக் கொண்டு உண்மைக்குப் பரிந்து பேசுவோரையும் குற்றவாளியாக்குகின்றோம். நமது வித்வப் பெரியார்களுடைய குருட்டுப் பக்தியின் ஆராய்ச்சியும் அதனுரையும் எத்தனை அழகாகத் தோன்றிய போதிலும், இவர்களுடைய காருண்யம் பயங்கரமானது. நம்மவரை நாமே இகழ்ந்து இழிந்த சூத்திரர்களாக்கி வைத்துக் கொண்டிருப்பதைவிட பெரிய குற்றம் வேறொன்றுமில்லை. நம் வித்வப் பெரியார்களில் ஒன்றிரண்டு பேர்கள் இந்த அசம்பாவிதத்திலிருந்து சமூகங்களை மேன்மைப்படுத்த நினைத்தெழுதும் கருத்துக்களை நம்மவர்களே அற்பலப்படுத்துவது ஈசனுக்குத் திருப்தியளிக்காது.

பிராமணன் சூத்திரனிடம் ஏவல் பணி தவிர சூத்திரனிடமிருந்து உபதேசம் பெற்றாலும், சூத்திரனுக்கு உபதேசித்தாலும் பிராமணத்தன்மை போய்விடுகிறதென்று ஸ்மிருதிகளிலும் அதைப் பின் தொடர்ந்து எழுதப்பட்ட இதிகாசங்களிலும் அதைப் படித்துப் பாடின புராணங்களிலும் பல விதிகளும் பல கதைகளுமெழுதப்பட்டிருக்கின்றன. அதுவே சாஸ்திர சம்மதமான சநாதனக் கட்டளையெனப் பெரியவர்களால் நிச்சயமென்று வழக்கத்திலும் காட்டப்பட்டே வந்திருக்கிறது. இதனாலேதான் சமஸ்கிருதப் பள்ளியில் பார்ப்பனரல்லாத பையன்களுக்கு இலக்கணம் சொல்லிக்கொடுக்க மறுத்ததும்; ராஜா சர். அண்ணாமலைப்பிரபுவின் பள்ளியில் சாஸ்திர வகுப்பில் பார்ப்பனரல்லாதவர்களைச் சேர்த்துக்கொள்ளாததும்; நமது வித்வப் பெரியார்கள் புராணப் பிரசங்கத்தை கேட்க பார்ப்பனர்கள் அதிகம் வாராததும்; அதிலும் வைதீகப் பார்ப்பார்கள் சூத்திரர்களென்று தள்ளிவிடுவதும், சாஸ்திரிகள், அய்யங்கார், ஆச்சாரிகள் சமயப் பிரசங்கம் செய்கையில் வரும் சில சுருதியின் சுலோகங்கள் ரகசியமென்றும் சூத்திரன் கேட்கப்படாதென்றும் அர்த்தம் சொல்லாமல் விட்டுவிடுவதுமான முதலியவைகள் நடந்து வருகின்றன.

சரியை கிரியை யோக ஞானபதங்களில் எவ்வளவு தேர்ச்சி பெற்றாலும் பார்ப்பன ஜாதியில் வந்துதான் மோக்ஷமடைய வேண்டுமென்பதைப் பற்றி ஆரிய வேதங்களி லிருப்பதைப் போலவே, ஆகம சாஸ்திரங்களிலும் இல்லாமலில்லை. நந்தனார்கூட அக்கினியில் மூழ்கி பூணூல் அணிந்த பிராமணனாக வந்த பின்புதான் நடராஜர் அழைத்துக் கொண்டார் என்னும் கதையை கவனித்துப்பாருங்கள். பார்ப்பனர்களெழுதின சைவ சமய சாஸ்திரங்களை கவனித்தால் அதற்குள்ளிருக்கும் உண்மைகளும் பார்ப்பனர்கள் நுழைத்த விஷயங்களும் விளங்கும். தேவாரத்திலும் கடவுள் முப்புரி நூல் அணிந்த பார்ப்பனக்கோலங்கொண்டவராகவே யிருக்கிறார். இதிகாச புராணங்களிலும் கடவுள் பார்ப்பனக்கோலமாகவே வந்து காட்சி கொடுத்த கதைகள் பலப் பல காணப்படும்.

பிரம்மா என்னப்பட்டவர் பார்ப்பனஜாதியென்றும், அவர் உலகத்தைச் சிருட்டித்து, அவர் முகத்திலிருந்து வந்த முதற்பிள்ளைகளான பார்ப்பார்களிடம் அந்த வேதத்தைக் கொடுத்து உலகத்தைக் காப்பாற்றச் சொன்னார் என்கிற சாத்திரப்புரட்டிலிருந்து ஆரம்பிக்கும் ஆராய்ச்சிகள், கடவுள் முப்புரி நூலணிந்த பார்ப்பனக்கோலமாக விருக்கின்றார் என்பதற்குத் தேவாரத்தைக்காட்டுறதும், கடவுள் எந்த கோலமாக விருப்பார் என்றும் அவர் சத்தியை பெருமைப்படுத்துவதற்குப் பார்ப்பனக்கோலமும் ஒன்றாக விருக்கலாம். அந்தக் கடவுள் பார்ப்பனஜாதியாசாரம் முப்புரி நூலணிந்த கோலத்தோடு இருக்கிறார் என்பதை எந்த ஆராய்ச்சியால் சொல்லமுடியும்? கோயில்களில் தெய்வ விக்கிரகங்களுக்குப் பூணூல் போடப்பட்டிருக்கிறது. அம்மனுக்கு இரட்டைத் தாலி கட்டப்பட்டிருக்கிறது. சாம்பசிவம் பிள்ளை திருமறை ஆராய்ச்சித்தெய்வம் பார்ப்பனனாக விருப்பார் என்பதைக் காட்டவே போகிறது. அவ்வழியே ஆராய்ச்சி செய்வதற்கு வேண்டிய நூல்கள் முன்னரே அமைந்திருக்கின்றன. இவைகளை அமைத்த முன் யோசனையின் ஏற்பாட்டைவிட நம்மவர்களே அதற்கிசைந்து வித்வப் பெரியார்களாக நினைத்துக் கொள்ளுவதே பெரிய ஆச்சரியம்.

சுமார்த்தப் பார்ப்பார்கள் சைவக் கோயில்களில் தங்கள் லாபத்திற்கும் தங்களை முதன்மையாளர்களாகக் காட்டிக்கொள்ளுவதற்கும் வருகிறார்களே யல்லாமல்: சைவ சமய ஆசாரிகளிடம் பக்தியோ நாயன்மார்கள் கதைகளில் சிரத்தையோ இருக்கிறதா? தேவாரத்தைப் பண்டாரப் பாட்டென்றும், சமய ஆசாரிகளை சூத்திரர்களென்றும், லிங்கத்தைச் சின்ன தெய்வமென்றும், அவர்கள் நினைத்து மனதில் அலட்சியப்படுத்துகையில், சைவக்கோயில்களின் ஆதிக்கமும் சைவர்களுடைய கிரியை தானங்களில் பாத்தியதையும் சுமார்த்தப் பார்ப்பான் கையில் இனியும் போய் சேருவதற்கே, சைவப்பெரியார்களின் ஆராய்ச்சியும், இவர்கள் ஆராய்ச்சிக்கு மதிப்புரை காணும் வித்வப்பெரியார்களின் சைவப்பற்றும் சைவப்படிப்பும் சைவ சித்தாந்த மதிப்புக்குரியதாகுமா? சைவப்பண்டிதர்களும் பண்டிதர்களல்லாத மற்ற சைவர்களும் தேவார திருவாசக மதிப்பும் பெரிய புராண பக்தியும் இருப்பதுபோலப் பார்ப்பாரத்தமிழ் பண்டிதனுக்கு உண்டா? வடகலை அய்யங்கார்களை விட்டுவிட்டாலும் தென்கலை அய்யங்கார்களில் திருவாய்மொழியைப்பற்றித் தெரிந்தவர்கள் எத்தனைபேர்கள் விஷ்ணு சன்னிதியில் ஆழ்வார்களுக்குப் பாடும் தோத்திரங்களில் சூத்திர ஆழ்வார்களென்று அவர்கள் தோத்திரங்களில் மூக்காலே மூன்று வீசம் பாட்டையும் நிறுத்திவிட்டதே. இதற்கெல்லாம் காரணம் சூத்திரனென்னும் இழிவைக் கற்பித்துக் கொண்டிருப்பதல்லவா?

சூத்திரன் என்னும் இழிவைக் கற்பித்துக் கொண்டிருக்கும் பார்ப்பனருக்கு அதுபோக வேண்டுமானால், மற்றவர்கள் கல்வியிலும் அறிவிலும்

(தொடர்ச்சி 18-ம் பக்கம் பார்க்க)

# இதிகாசங்கள்

## இராமாயணம்—கிட்கிந்தா காண்டம்

(கட்டுரை—9)

(திரு. சந்திரசேகரப் பாவலர்)

(சருக்கங்கள் 53 முதல் 57 முடிய)

சுயம்பிரபை வானரர்களைக் கொண்டுவந்துவிட்ட இடம் பெருங்கடல். அவர்கள் கடற்கரையிலிருந்து மலையடிவாரத்தில் உட்கார்ந்து கொண்டு சுக்கிரீவன் கொடுத்த கெடு (தவணை) நீங்கி விட்டபடியாலும் சீதையைக் காணாமையினாலும் கலங்கினார்கள் அங்கதன் அவர்களை நோக்கி, "நமக்கு சுக்கிரீவன் விதித்த கெடுநீங்கிவிட்டபடியால் நம்மைக் கட்டாயம் கொன்று விடுவான். அங்கே போய்ச் சாவதிலும் இங்கேயே பட்டினி கிடந்து சாவது நலம். உன்னை இளவரசாக்கிய சுக்கிரீவன் இப்பொழுது கொல்வானோ என்றால் அவன் என்னிடத்திலுள்ள அன்பினாலா பட்டங் கட்டினான்? இராமனுடைய ஆணையால் அப்படிச் செய்தான். இப்பொழுது நான் செய்த குற்றத்தைக் காரணமாக வைத்துக்கொண்டு என்னிடத்தில் அவனுக்கு முன்னமேயுள்ள பகையைத் தீர்த்துக் கொள்வான். இதில் ஐயமில்லை. ஆகையால் இக்கடற்கரையில் படுத்துப்பட்டினியிருந்து உயிரை விடுவோம்" என்று கூறினான்.

அதைக்கேட்டு எல்லோரும், "சுக்கிரீவன் மிகவும் கொடுமையானவன். இராமனுடைய கோபத்தைத் தணிக்க விரும்பி நம்மைக் கொன்றுவிடுவான் ஆதலின் சீதையைக் கண்டுபிடிப்போம் இல்லையானால் உயிரை விடுவோம்" என்று கூவினர். அப்போது தாரன், "உங்களுக்கு விருப்பமிருந்தால் மறுபடி அந்தக் குகையுள்ளே போய் வாழ்வோம். அங்கே இராமன் முதலியோர் வரமுடியாது" என்று கூறினான்.

அதற்கு அங்கதன் இடைவது கண்டு, அனுமான் அங்கதனுடைய சிறந்த குணங்களை நோக்கி வாலியைப்போல அரசாளுவதில் நல்லவனாவனெனத் துணிந்தான். அதனால் அனைவரும் அவனுடைய பேச்சைக்கேட்டு நடக்காமலிருக்கும்படி அனுமான் பல பல எண்ணி ஒற்றுமையில்லாமற் போகும்படி அவர்களைக் கலைத்து அவர்களைத் தனக்கு அனுகூலமாக்க முயன்றான். பின் அங்கதனுக்கு அச்சமுண்டாகும்படி அனுமான், "இவர்கள் உன்னோடு நிலைத்திருக்கமாட்டார்கள். இவர்கள் உன்னைக்காட்டிலும் வல்லவர்களானதால் உனக்கு அடங்கி நடக்கமாட்டார்கள். சாம்பவன் நீலன் இவர்கள் சுக்கிரீவனை விட்டு உன்னோடு ஒருநாளும் சேர மாட்டார்கள். மேலும் குகைக்குள் ஒருவராலும் வரமுடியாதென்று எண்ணாதே. இலக்குவனுடைய அம்பு அதைத் தூளாக்கிவிடும். இந்த வானரர்கள் தம்முடைய மனைவிமக்களைப் பிரிந்து எத்தனை நாள் தான் துன்புற்றிருப்பார்? அவர்கள் உன்னை விட்டு ஓடி விடுவர். சுக்கிரீவனே நல்லவன்; உன்னிடத்தில் அன்புடையவன்; உன் தாயிடம் விருப்புடையவன்; ஆதலின் உனக்கு நலமே செய்வான். ஆகையால் நீ அஞ்சாமல் என்னுடன் வா" என்று அழைத்தான்.

இப்படி அனுமான் சுக்கிரீவனைப் புகழ்ந்துரைத்ததைக்கேட்ட அங்கதன், 'அனும! திண்மையும் நல்லெண்ணமும அருளும் ஆண்மையும் சுக்கிரீவனிடத்தில் இல்லை தமயனுடைய மனைவி தனக்குத்தாயல்லவா! அவன் பிழைத்திருக்கும்போதே அவனுடைய மனைவியைக் கைப்பற்றுகிறவனுக்கு நல்லெண்ணமாவது கலக்கமில்லாமையாவது இருக்குமா? என் தந்தை மாயாவியுடன் போர் செய்யும் போது குகையின் வாயிலை மூடினவன் கொடுமையில்லாதவனென்று எப்படிச் சொல்ல முடியும்! நீசான்றாக இராமனுக்குக் கையடித்துக் கொடுத்து அவனிடத்தில் ஒப்பில்லாத உபகாரத்தைப் பெறது அவனுக்குச் செய்து கொடுத்த வாக்குறுதியை மறந்தவன் எவன் செய்த உபகாரத்தை நினைக்கப்போகிறான்? அவனிடத்தில் வஞ்சகமென்ற தன்மை நன்றாக விளங்கவில்லையா? சேனைகளை வரவழைத்து சீதையைத் தேட அனுப்பினது அதர்மத்திற்குப்பயந்து செய்ததல்லவே! இலக்குவனுடைய பாணங்களுக்குப் பயந்து செய்ததல்லவா? இது ஒரு தர்மமா?

சுக்கிரீவன் பாவி, நன்றிபற்றவன், சஞ்சல புத்தியுள்ளவன், மறதியுள்ளவன்; இப்படிப்பட்டவனிடத்தில் மேன்மையான சுவபாவமுள்ள எவனாவது நம்பிக்கை வைப்பானா? நான் அவனுக்குத் தாயாதி; அவனுக்குப் பிறகு பட்டத்தை அடையவேண்டியவன். எனக்குப் பிழைக்க ஆசையிருந்தால் அவனை நம்பலாமா? உன்னை இளவரசாக்கவில்லையோ என்றால் அரசர்கள் தமக்குப்பிறந்த மகனுக்குப் பட்டங்கட்டுவார்கள், அவன் குணசாலியானாலும் குணமில்லாதவனானாலும் கவனிக்கமாட்டார்கள். சத்துரு குலத்தில் பிறந்த என்னை உயிரோடு வைப்பானா? நான் அவனுக்கு அபகாரம் செய்தவன், பலமில்லாதவன், அநாதை, அவனுக்கு விரோதியென் பதைப் பிறருக்குத் தெரியும்படி சொல்லியும் விட்டேன். உங்களுடன் கிட்கிந்தைக்கு வந்து உயிர் தப்புவேனா? சுக்கிரீவன் குரூரன், இரக்கமற்றவன், இரகசியமாகக் கெடுதி செய்பவன்; நாட்டை ஆளுவதற்கு நான் இடையூறாயிருக்கிறேனென்று என்னைக் காவலில் போடுவான். அதைக்காட்டிலும் இங்கேயே பட்டினி கிடந்து உயிரை விடுவது நலமல்லவா? நீங்களெல்லோரும் திரும்பிப் போங்கள்; நான் உங்களுடன் கிட்கிந்தைக்கு வருவதில்லை. இது உறுதி. இங்கேயே உயிரை விடுவேன். இதுவே எனக்கு நன்மை. நீங்கள் நான் இராம லக்குவரையும் எனது சிறிய தகப்பனையும் தாய்மாரையும் கேட்டதாகச் சொல்லுங்கள். என் தாய் எனக்காக வருந்தாதபடி தேற்றுங்கள். நான் இறந்ததைக் கேட்டு அவள்கட்டாயம் இறப்பாள்" என்று கூறி சாம்பவன் முதலிய பெரியோரை வணங்கி பூமியில் தருப்பைகளை விரித்து அழுதுகொண்டே படுத்தான்.

அதைக் கண்டு வானரர்கள் அனைவரும் கண்ணீர் பெருக வாய் விட்டலறி சுக்கிரீவனை இகழ்ந்து, வாலியைப் புகழ்ந்து, அங்கதனைச் சுற்றி தாங்களும் உயிரை விட நிச்சயித்து தருப்பை மேல் கிழக்கு முகமாக இருந்தார்கள். அவர்கள் சடாயுவதையையும் வாலி வதையையும் பற்றிப் பேசினார்கள்.

அப்போது ஒரு குகையிலிருந்து சடாயுவின் அண்ணனாகிய சம்பாதி என்ற கழுகுவெளியேவந்து, "இவர்கள் வலிய வந்து அகப்பட்டார்கள். இவர்களை ஒவ்வொருவராகப் பிடித்துத்தின்று பசியாறுவேன்" என்றான். இதைக் கேட்ட அங்கதன் வருத்தமடைந்து அனுமானை நோக்கி "நாம் சீதையைத் தேடிக் காணாமல் உயிரை விடப் போகின்றோம். சடாயு சீதையை மீட்க இராவணனோடு சண்டை செய்துகொல்லப்பட்டான். அதனால் சுக்கிரீவனுடைய பயத்தினின்றும் நீங்கினான். சடாயு இறந்தாலும், தசரதன் மாண்டாலும் சீதை எடுத்துப்போகப்பட்டதாலும் நம்முடைய உயிருக்கு முடிவுகாலம் வந்துவிட்டது" என்று கூறினான். இந்நிகழ்ச்சிகளைக் கேட்ட சம்பாதி, "என் தம்பியாகிய சடாயுவின் சாவைப்பற்றிக் கூறி என்மனதை நடுங்கச்செய்தவன் யார்? அவன் இறந்தகாரணமென்ன? இவ்வளவு நாட்கழித்து என் தம்பியின் பெருமைகளைக் கேட்டு மகிழ்ந்தேன். எல்லா விவரத்தையுங்கூறுங்கள். நான் சிறகற்றுப்பறக்க முடியாதவனாக இருக்கிறேன் என்னை இறக்கிவிடுங்கள்" என்றான், அவர்கள் அவன் சொல்லை நம்பவில்லையானாலும் விரைவில் இறப்பது நலமென எண்ணினர். அங்கதன்சம்பாதியைக்கீழே இறக்கிவிட்டு, "நான்ரிட்சரஸ் என்ற வானரத்தலைவனுடைய பேரன். என் தந்தையைக் கொன்று என் சிற்றப்பனுக்கு முடிசூட்டிய இராமனால் ஏவப்பட்டு சீதையைத் தேடவந்து முடியாமல் இறக்கத் துணிந்துளோம்" என்றுகூறி சடாயு இறந்த வரலாற்றையும் விரித்துரைத்தான். இவ்வரலாற்றை ஆராய்வோம்.

அங்கதனுடைய உள்ளக்கிடை மேலே கண்ட வாலாற்றால் தெளிவாக விளங்குகிறது. அதனால் சுக்கிரீவனைப்பற்றி வானரர் யாதுநினைத்திருந்தார்கள் என்ற உண்மையும் வெளியாகிறது. சுக்கிரீவன் மிகவும் பொல்லாதவனாகையால் தன்னைக் கொன்று விடுவானென அங்கதன் கூறுகிறான். அதைக் கேட்ட வானரரும் சுக்கிரீவனை மிகவும் தீயவனெனவே கூறி உயிரிழக்கத் துணிகின்றனர். அப்போது தாரன் என்பவன் குகையினுள்ளே போய் வாழலாமெனக் கூறுகிறான். அதற்கு அங்கதன் முதலியோர் இணங்குகின்றனர்.

அனுமான் சுக்கிரீவனுக்கு உயிர் நண்பன். ஆதலின் வானரர்கள் அங்கதனோடு சேர்ந்து சுக்கிரீவனை இகழ்வதைக் கண்டு அவர்களுக்கு வேண்டியபடி பேசி அவர்களுடைய மனைவி மக்களை நினைவுறுத்தி அவர்களைத் தன் வசப்படுத்த முயல்கின்றான். அவர்கள் கொஞ்சம் கொஞ்சம் கலங்கியமை கண்டு அங்கதனையும் வெருட்டுகின்றான்; வெருட்டி சுக்கிரீவனை நல்லவனெனச் சொல்லி அங்கதனைத் தம்மோடு வருமாறு அழைக்கின்றனன். இதனால் அனுமானுடைய சூழ்ச்சி வன்மையும் தீயவனாகிய சுக்கிரீவனுக்காக அவன்பட்ட பாடும் விளங்குகின்றன.

இதன்மேல் அங்கதன் கூறுகின்ற மறுமொழிதான் மிகவும் கவனித்தற்பாலது. அதனை நம் மொழிபெயர்ப்பாளர் சீனிவாசய்யங்கார் எழுதியுள்ளபடியே எழுதியிருக்கின்றோம். அதனை ஒவ்வொருவரும் மறுமுறையும் படிக்கவேண்டுகின்றோம் அதனால் அங்கதனுடைய மனப்பான்மை தெளிவாகிறது. அவன் தனது தாயைச் சுக்கிரீவன் கைப்பற்றியது பற்றி மிகக் கவலைகொண்டிருந்தனன். சுக்கிரீவனுடைய கொடுந்தன்மைகளும் அப்பேச்சால் வெளிப்படுகின்றன. சுக்கிரீவன் மறைவாகச் சூழ்ச்சிகள் செய்து தீமை விளைவிப்பவன். தனது கூடப்பிறந்த அண்ணனை உயிரோடு குகைக்குள்ளே வைத்து மூடிவிட்டு அரசேற்று அவனுடைய மனைவியையும் தன் மனைவியாக்கிக்கொண்டவன். தனது அண்ணனை இராமனால் மறைந்திருந்து கொல்லச் செய்தவன். இராமனுக்கு மிகவும் நல்ல நண்பனைப்போல நடந்து தன் காரியம் முடிந்து அரசனானவுடன் தனது நண்பனாகிய இராமனுக்குச் செய்துகொடுத்த வாக்குறுதியை மறந்து கள்ளிலும் காமத்திலும் ஈடுபட்டிருந்தவன். இலக்குவன் கொன்றுவிடுவனோ என அஞ்சியே வானரரை அனுப்பிச் சீதையைத்

(தொடர்ச்சி 17-ம் பக்கம்பார்க்க)

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

# பெண்மக்கள் பெருமை

தோற்றுவாய்
(சாமி சிதம்பரனர்)

அறிவுள்ள ஒவ்வொருவரும் உரிமையுடனும் இன்பமுடனும் வாழவேண்டுமென்று நினைப்பது இயல்பு. அதற்கான வகையில் முயல்வதும் இயற்கை. இவ்வாறான செய்தி மக்களுக்குத்தான் முதன்மையாக உரியது என்று கூறமுடியாது. பறவைக்கூட்டங்களும் விலங்கினங்களும் உரிமையுடன் வாழவே விரும்புகின்றன. நாம் நமது வீடுகளில் நமது நன்மைக்காககட்டிவைத்து வளர்த்து வருகின்ற ஆடுமாடு முதலியவைகள், கட்டுத்தறியினின்றும் விடுபட்டவுடன் அவைகள் அடைகின்ற மகிழ்ச்சியை ஆரே அளந்து கூறவல்லார். அவைகள் எப்பொழுது தம்மைப்பிணிப்பினின்றும் அவிழ்த்து விடுவார்களெனஎதிர் பார்த்துக் கொண்டிருக்கின்றன அன்றோ? அங்ஙனமே நம்மால்வளர்க்கப்படுகின்ற கோழி, புறா முதலிய பறவையினங்களும், கூட்டினின்று வெளிப்பட்டு உலவுதற்கே ஆசைப்படுகின்றன அன்றோ? மேற்கூறிய விலங்கினங்களையும், பறவைக்கூட்டங்களையும் நமது நன்மைக்காக நாமே அடக்கிவைத்து ஆளுகின்றோமே அன்றி அவைகளாக நம்மிடம் கட்டுப்பட்டிருக்க விரும்பியிருக்கின்றனவோ! பகுத்தறிவு என்னும் சிறப்பறிவு இல்லாதன என்று சொல்லப்படும் விலங்கினங்களும் பறவைக்கூட்டங்களும் விடுதலை வாழ்வையே விரும்பும்போது பெருமை வாய்ந்த பகுத்தறிவைப்பெற்ற மக்கள்விடுதலைவாழ்வுக்குஆசைப்படாமல்இருப்பார்களா? விடுதலை வாழ்வைப்பெற விரும்பாத மக்கள் அறிவுடைய மக்களாயிருக்க முடியுமா?

பல்லாயிரம் ஆண்டுகளாக உரிமை இன்றி இருந்தவர்கள், உயர்ந்தசமூகத்தார் என்பவருக்கு அடிமையாய் இருந்தவர்கள், வாழ்நாள் முழுவதும் இன்பம் இன்றித் துன்பத்திலேயே ஆழ்ந்துகிடந்தவர்கள், மக்கட்பிறப்பின் மாண்பை அறியாமல் இருந்தவர்கள், அனைவரும் இப்பொழுதுவிடுதலைபெற்று உரிமையுடன்வாழவேண்டுமென முயற்சிசெய்கின்றனர். இவ்வுலகில் எந்த மூலையை நோக்கினும், அங்கே இடியோசை போல விடுதலை முழக்கமே கேட்கின்றது. அதுவே இப்பொழுது உலகிற்காணும் காட்சிகளில் முதன்மையானதாக இருக்கின்றதுத் இதுவரையிலும் விடுதலைப்போரில் முனைந்து நின்று உழைத்தவர்கள் தங்கள் முயற்சிக்கேற்ற வெற்றியை அடைந்திருக்கின்றார்கள்; உழைக்கின்றவர்கள் விடுதலை பெறுகின்றார்கள்; உழைப்பவர்கள் விடுதலை பெறுவார்கள் என்பதும் திண்ணம். கூடிய விரைவில் இவ்வுலக மக்கள் அனைவரும் முற்றும் விடுதலை பெறுவார்கள் என்பதில் ஐயமில்லை. இதனை உலக நிகழ்ச்சியை உற்று நோக்குவார் அனைவரும் எளிதில் உணர்ந்து கொள்ளலாம்.

இவ்வாறு விடுதலை பெறுவதற்கு முனைந்து வேலை செய்யும் கூட்டத்தாரில் பெண் மக்களும் ஒரு பகுதியினராவர் ஒரு பகுதியினர் ஆவர் என்று கூறுவதை விட அவர்களே முதன்மையானவர்கள் என்று கூறலாம். பல்லாயிரம் ஆண்டுகளாக உரிமை சிறிதுமின்றிப் பிறர்க்குஅடிமையாகக் கிடந்தவர்களில் பெண் மக்களுக்கு ஈடாக எவரையும் கூறமுடியாது. அவர்களுடைய அடிமைத்தன்மை கப்பமிழங்காலத்திலிருந்து நிகழ்ந்து வருகின்றது.

நாம் இந்திய நாட்டில் பெண்மக்கள் முன்னேற்றத்திற்குத் தடையாக இருப்பனவே மிகுந்திருக்கின்றன பல நூற்றாண்டுகளாக மக்களை ஒருவரோடு ஒருவர் சேர ஒட்டாமற் பிரித்து வைத்திருப்பதும் பகுத்தறிவை அடக்கி ஆளுவதும்மக்களுடைய உரிமைக்கும் முன்னேற்றத்துக்கும், தடையாயிருப்பதும் ஆகிய மதங்களும் சுபாவம் பிடித்த ஆண்மக்களால் எழுதப்பட்ட நூல்களும் பெண்மக்கள் விடுதலைக்குத் தடை செய்வனவற்றுள் முதன்மையானவைகளாகும் இவைகளுடைய ஆட்சி அடங்கினாலன்றி பெண்மக்கள் உரிமையைப் பெறமுடியாது என்பது உறுதி.

மதங்களையும் நூல்களையும் மக்களுடைய நன்மைகளுக்காக முன்னோர்களால் ஏற்படுத்தப்பட்ட ஒழுங்குகள் என்று கொள்ளவேண்டுமேயன்றி, அவைகளைத் தெய்வீகத் தன்மை உடையனவென்று கொள்ளுவதில் ஒருபொருளும் இல்லை. ஆகவே அவற்றைக் கால நிலைக்கேற்றவாறு அமைத்துக்கொள்ளும் உரிமை மக்களுக்கு உண்டு. ஆதலால் பழையனவாகிய அவற்றை— இக்காலப்போக்கிற்கு ஒத்துவராத அழுக்குப்பைகளை, மக்களுடைய அறிவாகிய ஒளியின்மீது திருவேறி மழுங்கச்செய்யும் அவ் அழுக்குகளை, அடியோடு களைந்தெறிந்து புதியனவற்றைப் புகுத்தல்வேண்டும்.

பெண்மக்கள் முன்னேற்றம் அடையாமல் ஆண்மக்கள் எவ்வளவுதான் உரிமைபெற்றாலும், இன்பம் உற்றாலும், கல்வி கற்றாலும், அறிவு பெற்றாலும், திறமை உற்றாலும், நாடு முன்னேற்றம் அடைந்ததாகக் கருதமுடியாது. ஒரு நாட்டில் உள்ள மக்கள் அனைவரும், அந்நாட்டின் உறுப்பினராவர். நாடு ஒரு உடல்; அதில் வாழும் மக்கள் அனைவரும் அதனுடைய உறுப்புக்கள் ஒரு உடலில் உள்ள உறுப்புக்கள் யாவும் ஊனம் இன்றிச் செம்மையாக இருந்தால் அன்றோ அவ்வுடல், குற்றம் அற்ற உடலாகும்? அழகிய உடலாகக் காணப்படும்? ஆற்றல் நிறைந்ததாகத் தோன்றும்? அதுபோல நாட்டின் உறுப்பினராய மக்கள் யாவரும் உயர்வுதாழ்வின்றி ஒரு தன்மையான இன்பமுடனும் உரிமையுடனும் வாழ்ந்தால் அன்றோ அந்நாடும் உயர்ந்த நாடாகத் தோன்றி நிற்கும்? இவ்வுண்மையை ஒரு சிறிதும் மனதிற் கொள்ளாமல், நாட்டில் பாதிக்கு மேற்பட்ட உறுப்பினராயிருக்கின்ற நம்மைப் பெற்று வளர்த்து ஆளாக்கி விட்ட அன்பின் உருவாகிய பெண்மக்கள் ஒருவகையிலும் உரிமையின்றி வருந்திக்கிடக்கும்போது, அவர்களுடைய நிலைமையை ஒரு சிறிதும் நினைக்காமல் ஆண்மக்கள்தங்கள் நலத்தை மட்டிலும் எண்ணி "முன்னேற்றம், முன்னேற்றம்" என்று ஆற்றிக்கொண்டிருப்பதில் என்ன பொருள்இருக்கின்றது?

முன்னேற்றம் அடைந்ததென்று பெயர் பெற்றிருக்கும் எந்த எந்த நாடுகளிலும் பெண்மக்களும், தங்கள் முன்னேற்றத்திற்குத் தடை செய்வனவற்றை ஒழித்து உரிமை பெற்று வருகின்றனர்; அடிமைப்பட்டுக் கிடக்கும் நமது நாட்டில் மட்டும் இன்னும் பெண்மக்கள் விடுதலை பெறாமல் வாடிக்கிடக்கின்றனர். பிற நாட்டினர் இகழ்ந்து பேசக்கூடிய தாழ்வான நிலையில் நமது தாய் மார்கள் இருப்பது நமது நாட்டிற்குப் பெரிய மானக்கேடன்றோ? அமெரிக்க மாதாகிய கன்னி மேயோ அவர்கள் நமது நாட்டைப்பற்றி எழுதிய "இந்தியத் தாய்" என்னும் புத்தகத்தில் பெரும் பகுதி, நம் நாட்டுப் பெண் மக்களின் தாழ்ந்த நிலையைக் குறித்தே கூறப்படுகின்றது என்பதை அதனைப் படித்தார் யாவரும் அறிவார்கள். அவ்வாறு எழுதத்தக்க நிலையில் நமது பெண்மக்கள் இருக்கின்றார்கள் என்பதை "முற்றும் இல்லை" என ஒரேயடியாக மறப்பது முடியாத செயலென்பதே நமது கருத்து. இதுவரையிலும் யாராவது "மேயோ கூறியது முழுதும் பொய்" என்று கூற முன்வந்திருக்கின்றார்களா? பிற நாட்டினர் இந்தியர்களின்கொள்கைகளைப் பழிக்கத்தக்கவாறு "மேயோ" போன்றவர்கள் புத்தகங்கள் எழுதுவதற்கு காரணமாக இருந்தவர்கள் நாம் தாம் என்பதில் ஐயம் என்ன? இனியேனும் பிறர் நம்மைக் கண்டு நகைக்காதிருக்குமாறு நமது நாட்டைச் சீர்திருத்த முற்படுவது நமது கடமை என்பதை உணர வேண்டுமன்றோ?

ஆனால், இப்பொழுது பெண்மக்களே தங்கள் முன்னேற்றத்தின் பொருட்டு ஊக்கத்துடன் வேலை செய்யத்தொடங்கி இருக்கின்றனர். அவர்கள் தங்களுடைய முன்னேற்றத்திற்கான வேலையை ஊக்கத்தோடும் விரைவோடும் செய்துவருவதைக் கண்டு நாம் மிகவும் மகிழ்ச்சியடைவதுடன் அவர்களுக்கு உதவியும் செய்யக்கடமைப்பட்டிருக்கின்றோம். "தன்கையே தனக்குதவி" என்பது நீண்ட நாளைய பழமொழி. பிறர் உதவியைக் கொண்டுதான் மேன்மையடைய வேண்டுமென்று இருப்போர் ஒரு பொழுதும் மேன்மை அடையமாட்டார்கள் என்பதே நமது கருத்து. முயற்சியால் அடையக்கூடாதபொருள் என்ன இருக்கின்றது? "முயற்சி திருவினை ஆக்கும்" என்பது முன்னோர்களால் மொழியப்பட்டதே யாகும். உரிமை பெற முனைந்து நிற்கும் பெண் மக்களுக்கு நாம் செய்யவேண்டிய உதவி மனித சமூகத்தில் அவர்கள் அடைய வேண்டிய உரிமைகள் முழுவதையும் அடைவதற்கு இடம் கொடுப்பதே யாகும் இதனைச் செய்ய முன்வருவதே அறிவுடைய ஆண் மக்களின் முதற்கடமையாகும் அவ்வாறின்றிப், பகுத்தறிவும், பிறர் நலமும் கருதாத வைதிகக்கூட்டத்தாரைப்போல நாமும் அவர்கள் தமது உரிமையைப் பெறுவதற்கு ஒருவகையிலும் தடையாயிருத்தல் கூடாது.

பெண்மக்கள் உரிமை பெறுவதற்குத் தடை கல்லா நிருப்பவர்கள் கூறும் காரணங்களில் முதன்மையானது ஒன்றேயாகும். "பெண் மக்கள் கல்வி கற்று அறிவுடையவர்களாக ஆகிவிட்டால்-உலகப் பொதுச் செய்திகளில் கலந்துகொள்ளும் உரிமையைப் பெற்றுவிட்டால்—நம்மைபோலவே ஆளும் பதவியை அடைந்துவிட்டால், அவர்கள் பிறகு ஆண் மக்களுக்கு அடங்கி நடக்கமாட்டார்கள்" என்று தந்நலங்கொண்டவர்கள் கூறுகின்றனர். இக்கூற்று தந்நலத்தின் பேராசையால் உண்டாகும் கூற்றேயாகும்; பெண்மக்கள் இயற்கையிலேயே ஆண்மக்களை விடத் தாழ்ந்தவர்கள் என்ற எண்ணத்தால் உண்டாயதாகும். பெண் மக்கள் ஆண் மக்களுக்கான ஊழியஞ்செய்து அவர்களுக்கு இன்பம் அளிப்பதற்காகவே தோன்றியிருக்கின்றார்கள் என்ற நினைப்பின் பயனாகும். ஆண் மக்கள் பாலுள்ள இத்தகைய கண் மூடி எண்ணம் மண்மூடிப்போக வேண்டும். அப்பொழுதுதான் ஆண்மக்கள் பெற்றிருக்கும் உரிமைகள் முழுவதையும், பெண் மக்களும் பெறுவதற்கு உதவிசெய்ய வேண்டுமென்னும் எண்ணமும் உண்டாகும். அல்லது அவர்களுடைய முன்னேற்றத்திற்கும், உரிமைக்கும், முயற்சிகளுக்கும் தடையாக இருத்தல் கூடாது என்னும் எண்ணமாவது உண்டாகும்.

அறிவுடையவர்கள் என்று சொல்லப்படுகின்றவர்களிடம் உள்ள சுயநலந்தான் மற்றைய மக்களின் அடிமைக்கும், துன்பத்திற்கும் காரணமாகும். சுயநலம் உடையவர்கள் மற்றவர்களைத் தமக்குக் கீழ்ப்படுத்தி வைத்துக் கொண்டு அவர்கள் மீது ஆட்சி செலுத்தவே நினைப்பார்கள். இப்பொழுது பெண் மக்களையும், மற்றும் பல சமூகங்களையும் முன்னேற ஒட்டாமல் தடை செய்து கொண்டிருக்கின்ற பாழான மதக் கொள்கைகளும் கொடுமையான நூல்களும் அத்தகைய தந்நலம் உடையவர்களால் காணப்பட்டனவே யாகும். நமது சமூகத்தில் நெடுநாளாகப் பொருளில்லாமல் வழங்கி வரும்

பல வழக்கங்களும் இருக்கின்றன. இத்தகைய வழக்கங்களும் பெண் மக்கள் முன்னேற்றத்திற்குத் தடைபுரிந்து நிற்கின்றன.

இனி மேலே கூறப் போகும் பகுதிகளில் பெண் மக்களின் முன்னேற்றத்திற்கும் உரிமைக்கும் தடையாயிருப்பன எவை எவை என்று கூறி முடிப்போம். அவற்றில் பெண் மக்களைப் பற்றி வைதீகர்கள் கொண்டிருந்த கொள்கைகளைப் பற்றியும், அவர்களின் மாண்பைப் பற்றியும் நமது தமிழ் நாட்டுப் பண்டைப் பெண்களை பற்றியும் அவர்கள் தாழ்வுக்குக் காரணமாயிருப்பவைவற்றைப் பற்றியும், உயர்வடைவதற்கான முறைகளைப் பற்றியும் பல பிரிவுகளாகப் பிரித்துக் கூறி முடிப்போம்.

மேலே கூறப்போகும் பகுதிகளில் சிறுபான்மை நூல்களின் ஆதாரங்களைக் கொண்டும், பெரும்பான்மை உலக நிகழ்ச்சியின் துணை கொண்டும், அறிவுக்குப் பொருத்தமான செய்திகளையே கூறுவோம். ஆகையால் அவற்றுள் பல முக்கியமான செய்திகள் மதப்பற்றுடையவர்களுக்கும், தந்நலம் உடையவர்களுக்கும், குருட்டு நம்பிக்கையுடையவர்களுக்கும் இருக்கலாம். பிடிக்காமல் அவர்கள் நம் மீதும் நம்போன்றவர்கள் மீதும் பெண் மக்கள் மீதும் ஆத்திரம் அடையலாம். ஆனால் இவ்வாறு சுயநலக் காரணமாக ஆத்திரமடையும் ஆராய்ச்சியும் இரக்கமும் இல்லாதவர்களைப் பற்றி நாம் ஒரு சிறிதும் பொருட்படுத்தவில்லை. உண்மையில் ஆண்மக்களைப் போலவே பெண் மக்களும் சம உரிமை பெற்று இன்புற வேண்டுமென்பதே நமது நோக்கமாகும். எந்த வகையிலும் ஒருவர்க்கொருவர் உயர்வு தாழ்வு பாராட்டுதல் கூடாதென்பதே நமது எண்ணமாகும். இரு கூட்டத்தாரும் ஒத்த இன்பம் பெற்று உலக வாழ்க்கையை இனிது கழிக்க வேண்டுமென்பதே நமது கொள்கையாகும். ஆகவே இத்தகைய நல்லெண்ணத்துடனேயே பெண் மக்கள் பெருமை என்பது பற்றி எழுதத் தொடங்குகின்றோம்.

(தொடரும்.)


## பெண் தேவை

26 வயதுடைய ஒரு வாலிபருக்கு ஒரு பெண் தேவை. ஷையார் தமிழ் நன்றாய் தெரிந்தவரும் மோட்டார் டிரைவிங் ஆயில் இஞ்ஜின் ஸ்டீம் இஞ்ஜின் டிரைவிங் மற்றும் பல கைத்தொழில்கள் தெரிந்தவரும் மாதம் ஒன்றுக்கு ரூ. 35 முதல் ரூ. 40 வரை சம்பாதிப்பவரும் சுயமரியாதைக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டவருக்கு நல்ல குடும்பத்தில் பிறந்த பால்ய விதவைப் பெண்ணாகிலும் கன்னிப் பெண்ணாகிலும் தேவை. பெண் சுயமரியாதைக் கொள்கைகளை அனுசரித்ததாகவும், கல்வியுள்ளதாகவும், நல்ல குணமும் அழகும் உள்ளதான ஒரு பெண் தேவை. பிரியமுள்ளவர்கள் கீழ்கண்ட விலாசத்திற்கு தெரிவிக்கவேண்டியது. கடிதங்கள் ரகசியத்தில் வைக்கப்படும்.

விலாசம்:—

சுயமரியாதை அன்பன்,

C/o. டாக்டர் நாயர் வாசகசாலை,

237, நாயக்கர் புதுத்தெரு,

மதுரை.


சுயமரியாதை

வாழ்வே

சுகவாழ்வு


## கர்ப்பாசய ரோக நிவாரணி

"சௌரியா"வின் அபூர்வ சக்தியைக்கண்ட பெண்மணிகள் இதைஸ்திரீகளுக்கோர் வரப்பிரசாதினி என்றும், அதி சிரேஷ்டமான அவுஷதமென்றும், விலையில்லா ஆபரணமென்றும் சொல்லுகிறார்கள். ருதுசூலை, அகால பஹிஷ்டி, ருதுசிராவம், பஹிஷ்டை தடைபட்டுப்போவது, வெண் ரத்தப் போக்கு, கர்ப்பஸ்ராவம், அகால பிரசவம், கருப்பை நழுகி விடுதல், ருதுசூலையினால் வயிற்றில் உண்டாகும் கட்டி, மூர்ச்சை, கணைச்சூடு, சந்தானமில்லாமை, மலபந்தம், இருமல், உப்பலம் முதலிய சகல ரோகங்களும் இந்த "சௌரியா"வின் உபயோகத்தினால் சூரியனைக் கண்ட பனிபோல் நிவர்த்தியாகிவிடும்.

புட்டி 1-க்கு விலை ரூ. 3. பாக்கிங் தபால் செலவு வேறு.

கேட்லாக் இனாம், ஏஜண்டுகள் தேவை.

சங்கராம் மெடிகல் ஹால்,

(7) தந்தி விலாசம் "சௌரியா" சேலம்.



## குடி அரசு புத்தகாலயம்

வெளிப்புரட்டை வெளியாக்கும்

| | | |
|---|---|---|
| ஞானசூரியன் 2-ம் பதிப்பு | ... | 0—8—0 |
| இராமாயணத்தின் ஆபாசம் பாலகாண்டம் | | 0—4—0 |
| சுயமரியாதைப் பாடல்கள். | ... | 0—2—0 |
| இராமலிங்க சுவாமி பாடல் திரட்டு. | ... | 0—2—0 |
| சுயமரியாதைத் தாலாட்டு | ... | 0—2—0 |
| சோதிடப்புரட்டு | ... | 0—2—0 |
| சாமிகளின் அடிமைகள் | ... | 0-12—0 |

8 அணாவுக்கு குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது. 5 ரூபாய்க்கு மேற்பட்ட ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணமனுப்பவேண்டும்.

விலாசம்:—

மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,

(எப்) 14, மவுண்ட்ரோட், மதராஸ்





## தாதுபுஷ்டிக்குக் கைகண்டது
## சி. எம். சாமி மன்மத கோலாகல குளிகை

அநேக பரிசுகள் பெற்று உலகெங்கும் புகழப்பட்டது. தாதுபுஷ்டிக்கு நிகரற்றது. ஒரே குளிகையில் பரீக்ஷிக்கலாம். இழந்த ஆண்மையும், பலமும் திரும்பவரும். நல்ல ஜீரணம், ரத்த விர்த்தி, இந்திரியக்கட்டு, போகசக்தி, தாது புஷ்டி இவற்றைத் தரவல்லது. எவ்வித பலஹீனம், தாது நஷ்டம், சுரிதஸ்கலிதம், இடுப்புவலி, உஷ்ண ரோகங்கள் நீங்கும். ஒரு முறை பரீக்ஷித்தவர்களுக்கே இதனரும் குணம் விளங்கும்.

120-குளிகைக்கு ரூ. 10. 60 குளிகை ரூ. 5. 30 குளிகை ரூ. 3. வி. பி. சார்ஜ் வேறு.

குருநாக பஸ்பம் மூலத்திற்கு ஆப்ரேஷன் அவசியமில்லை. மூளை தானே கரையும். சீழ் மூலம், ரத்த மூலம், குத்தல், மூலமுளை, மலபந்தம் முதலிய மூலம் ஒன்பதும் அதிசீக்கிரம் குணமாகும். உத்தரவாதமுள்ள சிறந்த ஔஷதம். 20 நாள் புட்டி 1-க்கு ரூபா 16. மாதிரி புட்டி 1-க்கு ரூபா 4-0-0.

சகல வியாதிகளுக்கும் நம்மிடம் முதல்தரமான தேவ ஔஷதங்களிருக்கின்றன.

மலாய் நாட்டிலுள்ளவர் மருந்திற்கு ஆர்டர் செய்யும்போது முன்பணம் ரூ. 5 அனுப்பவேண்டும்.

நற்சாக்ஷிகளையும், வேறு ஔஷதங்களையும் கியாட்லாக்கில் பார்க்கவும்.

சித்த ஆயுர்வேத வைத்திய ஆசிரியர் சி. மலையப்பசாமி நித்தியானந்த வைத்தியசாலை, பழநி, (தென் இந்தியா),

# ஈரோடு

# உண்மைநாடுவோர் சங்கம்

## ஈ. வெ. ராமசாமியார் உபந்நியாசம்

## மதம் மாறுதல்; சரஸ்வதி பூஜை;

—0—

ஈரோடு உண்மை நாடுவோர் சங்கத்திலும் வளையக்காரத் தெருவு பார்ப்பனரல்லாதார் வாசக சாலையிலும் நடந்த வாராந்திரக் கூட்டத்தில் திருவாளர் ஈ. என். வெங்கிடப்பெருமாள் நாயுடு, திருமதி. ஈ. வி. லட்சுமி அம்மாள் ஆகியவர்கள் தலைமையில் திரு. ஈ. வெ. ராமசாமி பேசியதாவது :— தலைவரவர்களே! சகோதரர்களே! இன்று மூன்று விஷயங்களைப்பற்றி பேச நான் தலைவரால் கட்டளை இடப்பட்டிருக்கின்றேன். ஒன்று சிலையம்பட்டியில் 69 பேர்கள் மகம்மதியரானது, இரண்டு சரஸ்வதி பூஜை, மூன்று நெல்லூர் மகாநாடு.

முதலாவது விஷயமாகிய ஆதிதிராவிடர்கள் மதம் மாறி மகம்மதியரான விஷயத்தைப்பற்றி சில வார்த்தைகள் சொல்லவிரும்புகின்றேன்.

முதலில் மத சம்பந்தமான என்னுடைய அபிப்பிராயம் என்னவென்றால், எந்த மதமானாலும் அதன் கொள்கைகள் எவ்வளவு மாறுபட்ட அபிப்பிராய முடையவையானாலும் அம் மதமும் கொள்கைகளும் மனிதனுடைய இவ்வுலக வாழ்க்கைக்கு அவனுடைய பிரத்தியட்ச அனுபவத்திற்காக வகுக்கப்பட்ட கொள்கைகளுடையவைகள் என்றால் அதைப்பற்றி யோசிக்க நான் எப்போதும் தயாராயிருக்கிறேன். அப்படிக்கின்றி மதமும் அதன் கொள்கைகளும் "மேல் லோகத்திலோ" அல்லது "கீழ்லோகத்திலோ" அல்லது செத்த பிறகு "சூட்சும" சரீரத்துடனேயோ அனுபவிக்கும் அனுபவத்திற்காகவே ஏற்படுத்தப்பட்டது என்றால், அது எப்படிபட்ட மதமானாலும் யார் செய்ததானாலும் அதற்கு என்ன ஆதாரம் சொல்லுவதானாலும் அதனால் என்ன விளைவதானாலும் நான் அதை கடின நேரம் கூட திரும்பிப் பார்க்கமாட்டேன். இது விஷயத்தில் என்னைப்பற்றி யார் எப்படி நினைத்துக் கொண்டாலும் எனக்கு அதைப்பற்றி கவலையில்லை. ஏனெனில், இந்தப்படி நினைப்பதற்கு எனக்கு பூரண சுதந்திரம் இருக்கின்றது என்று நினைத்திருக்கிறேன். அதோடு எந்தலோகத்திலானாலும் இந்த உலக வாழ்க்கை அனுபவத்திற்கு விபரீதமான பலன் இருக்கமுடியாதென்றும் கருதுகின்றேன். இதை அனுசரித்தேதான் இவ்வாரத்தில் சிலையம்பட்டியில் 69பேர்கள் மகம்மதியரானவிஷயத்தைப்பற்றி எனது மகிழ்ச்சியை தெரிவிக்க சில வார்த்தைகள் பேசப்போகின்றேன். சகோதரர்களே! 69 ஆதிதிராவிடர்கள் மகம்மதியர்களாகி விட்டதால் அவர்களுடைய பாவங்களெல்லாம் மன்னிக்கப்பட்டு விட்டதென்றோ, அவர்களுக்கு 'மோட்சலோகம்' கூப்பிடும் தூரத்திற்கு வந்து விட்டதென்றோ, "கடவுளோடு கலந்து விட்டார்கள்" என்றோ கருதி நான் மகிழ்ச்சி அடையவில்லை. இவைகளை நான் ஏற்றுக்கொள்ளுவதும் இல்லை மற்றவர்களை நம்பும்படி சொல்வதும் இல்லை. அன்றியும் ஒரு மனிதன் மதம் மாறுவதால் அவனுடைய செய்கைக்கும், எண்ணத்திற்கும் தகுந்த பலன் அடைவதில் வித்தியாச முண்டென்பதை நான் ஒப்புக்கொள்வதில்லை. எந்த மதக்காரனாயிருந்தாலும் தனது செய்கைக்குத் தகுந்த பலன் ஒன்றுதான் இருக்கும். இந்துவாயிருந்து பசுவைக்கொன்றால் பாவம் என்றும், மகம்மதியனாயிருந்து பசுவைக்கொன்று தின்றால்பாவமில்லை என்றும், மதத்தின் காரணமாகக் கருதுவது மூட நம்பிக்கையே ஒழிய இரண்டு வித அபிப்பிராயத்திலும் அர்த்தமே இல்லை. உலகத்தில் உள்ள சகல மதங்களும் மூட நம்பிக்கையின் மீதே கட்டப்பட்டிருக்கின்றது. ஆகையால் பாவபுண்ணியத்தையும் மோட்ச நரகத்தையும் ஆதாரமாய் வைத்தும் நான் மகிழ்ச்சியடையவில்லை. மற்றென்னவென்று கேட்பீர்களேயானால், இந்துமதம் என்பதிலிருந்து மதம் மாறினதாக சொல்லப்படும் 69 ஆதிதிராவிடர்களும் பிறவியின் காரணமாக அவர்களுக்குள்ள இழிவிலிருந்து விடுதலை அடைந்ததோடு பாமரத்தன்மையும் காட்டுமிராண்டித்தனமுமானமிருகப்பிராயத்திலிருந்தும் அறியாமையிலிருந்தும் சிறிது விடுதலை அடைந்தவர்களானார்கள் என்பதற்காகவே மகிழ்ச்சியடைகின்றேன்.

அதாவது, மேற்கண்ட 69 பேர்களுக்கும் தீண்டாமை என்பது போய்விட்டது. இனி ஒருவன் அவர்களை பறையன், சக்கிலி, சண்டாளன் என்று இழிவாய்க் கூற முடியாது. அவர்களும் மற்றவர்களை சாமி சாமி புத்தி என்று கூப்பிட்டுக் கொண்டு தூர எட்டி நிற்க வேண்டியதில்லை. மற்ற மனிதர்களின் காலில் விழுந்து கும்பிடவேண்டியதில்லை. ஊரை விட்டு வெளியில் குடி இருக்க வேண்டியதில்லை. குளிக்கத் தண்ணீரில்லாமல், குடிக்கத் தண்ணீரில்லாமல் திண்டாட வேண்டியதில்லை. வண்ணான் நாவிதன் இல்லாமல் அழுக்குத் துணியுடனும் சாடிபோல் மயிர் வளர்த்துக்கொண்டும் பார்ப்பவர்களுக்கு அசிங்கமாகத் தோன்றும்படி வாழ வேண்டியதில்லை. இனி எந்த பொதுத் தெருவிலும் நடக்கலாம். எந்த வேலைக்கும் போகலாம். யாருடனும் போட்டி போடலாம். அரசியலில் சம பங்கு பெறலாம். மதசம்பந்தமாகவும் இனி அவர்கள் தங்கள் கோவிலுக்குள் போக தாராள உரிமை உண்டு. வேதம் படிக்க உரிமையுண்டு

இவ்வளவையும்விட இனி அவர் கல்லையும், செம்பையும், கட்டையையும், முறத்தையும்; விளக்குமாற்றையும் கடவுள் என்று வணங்க வேண்டியதில்லை

மற்றும் அவர்கள் பாடுபட்டு சம்பாதித்த சிறிது பணத்தையும் கடவுளுக்கென்றும், கள்ளுக்கென்றும்; கருமாதிக்கென்றும் செலவு செய்ய வேண்டியதில்லை. எனவே, இவர்கள் பொருளாதாரக்கஷ்டத்திலும் அறிவு வளர்ச்சித் தடையிலும், சமூக இழிவிலும், சுயமரியாதைக் குறைவிலும், அரசியல் பங்குக் குறைவிலுமிருந்து ஒருவாறு விடுதலை அடைந்து விட்டார்கள் என்பது போன்றவைகளை நினைக்கும்போது மகிழ்ச்சியடையாமலிருக்க முடியவில்லை. ஏனெனில், தீண்டாமை, நெருங்காமை, பார்க்காமை, பேசாமை முதலாகிய சகிக்க முடியாத கொடுமைகள் முதலானதாக மதத்தின் பேரால், வேத சாஸ்திரங்களின் பேரால், கடவுள்களின் பேரால் உள்ளவைகள் எல்லாம் அடியோடு நீங்க வேண்டும் என்கின்ற தீவிர ஆசையே இம்மாதிரி நினைக்கச் செய்கின்றது. இம்மாதிரி சுமார் ஆயிரம் வருஷங்களாக நினைத்து காரியத்தில் நடந்த பெரியவர்கள்தான் இன்னைய தினம் இந்தியாவில் 8 கோடி மகம்மதியர்களாகவும், ஒரு கோடி கிறிஸ்தவர்களாகவும் இருக்கின்றார்கள். இல்லாவிட்டால் இந்தியாவில் இவ்வளவு மகம்மதியர்களும், கிறிஸ்தவர்களும் எங்கிருந்து வந்தார்கள்? இந்த எண்ணிக்கையைப் பார்த்து பயந்தே நானும் திருவாளர்கள் தங்கபெருமாள், ஈஸ்வரன், மாரியப்பன் முதலியவர்களும் கோயம்புத்தூர் ஜெயிலிலிருக்கும்போதே ஜெயிலில் இருந்து விடுதலையானதும் தீண்டாமையை அடியோடு ஒழித்து விடுவதுடன், இந்து மதத்திலிருந்து கிறிஸ்தவமதத்திற்குப், போனவர்களை எல்லாம் திரும்பவும் இந்துக்களாக்கும் முயற்சியில் வேலை செய்வது என்று முடிவு கட்டிக் கொண்டு வந்தோம்.

நாங்கள் வெளிவந்ததும் திரு. காந்தி கைது செய்யப்பட்டு சிறைசென்று விட்டதால் இந்த சமயத்தில் ஒத்துழையாமையை விட்டுப் போகக்கூடாது என்று சில பார்ப்பனத் "தலைவர்கள்" கேட்டுக்கொண்டதால் மறுபடியும் காங்கிரஸ் வேலையை செய்தோம். பிறகு "குருகுல நடவடிக்கையையும் அது சம்பந்தமாக பார்ப்பனத் தலைவர்கள் மனப்பான்மையையும் அவர்களது உள்எண்ணத்தையும்தெரிந்தபிறகு "இந்து" மதமே அடியோடு அழிக்கப்பட வேண்டும் என்கின்ற முடிவுக்கு வந்து விட நேர்ந்தது. அதன்பேரில் இந்து மதத்தை விட்டாலும் பிறகு தங்களுக்கு ஏதாவது ஒருமதம் இருந்துதான் தீரவேண்டுமென்று கருதும், மக்களுக்குக் கிறிஸ்துவமதத்தை சிபார்சு செய்யலாமா? மகம்மதிய மதத்தை சிபார்சு செய்யலாமா என்று கருதி யோசித்துப்பார்த்தேன். கடைசியாக கிறிஸ்தவ மதமும் நமது நாட்டில் நான் பார்த்தவரை அதுவும் மற்றொரு பார்ப்பனீய மதமாகவே காணப்பட்டது. கிறிஸ்துவ மதப் பிரசாரத்தின் கருத்தெல்லாம் அரசியல் விஷயத்தை அடிப்படையாகவும், அந்தரங்க லட்சியமாகவும் கொண்டு செய்யப்படுகின்றதே ஒழிய மக்கள் சமத்துவத்தையோ ஒற்றுமையையோ கொண்டதாகத் தெரியவில்லை என்கின்ற முடிவிற்கு வரவேண்டியதாயிற்று. எப்படியென்றால், இன்னையதினமும் கிறிஸ்துவ மதத்தில் பறக் கிறிஸ்தவன், சக்கிலிக் கிறிஸ்தவன், வேளாளக் கிறிஸ்தவன், உடையார் கிறிஸ்தவன், நாயுடு கிறிஸ்தவன், நாடார் கிறிஸ்தவன், பார்ப்பனக் கிறிஸ்தவன், என்கின்ற பாகுபாடுகளும், குடியிருப்பு வசதி வித்தியாசங்களும் சர்ச்சு முதலிய பிரார்த்தனை இடங்கள் வித்தியாசமும் காணப்படுவதை பார்ப்பதால் நன்றாய் தெரியவரும். ஆகையால் மகம்மதிய மதத்தைத் தழுவினால்தான் தீண்டாதவர்களுக்கு இது சமயம் சீக்கிரத்தில் உடனேயே சமூக சமத்துவத்தை யளிக்கக் முடியும் என்று கருதுகிறேன். இந்த நிலைமை நமக்கு ஏற்படாமல் இருக்கவேண்டும் என்பதற்காக நான் எவ்வளவோ பாடுபட்டுப் பார்த்தேன்.

ஈரோடு தேவஸ்தானத்தில் சகல இந்துக்களுக்கும் கோயில் நுழைவு தீர்மானம் நிறைவேறப்பட்டதின் பேரில் சில மேல் ஜாதிக்காரர்கள் எங் பலர்களும், வெள்ளைக்கார அதிகாரிகளும், பார்ப்பன அதிகாரிகளும், கொண்ட மாதிரியானது எனக்குத் தீண்டப்படாத மக்களுக்கு சமத்துவம் கொடுப்பதற்கு அவசரமாய் இதைவிட வேறுவழியில்லை என்கின்ற முடிவு ஏற்படுத்தச்செய்து விட்டது நமது நாட்டில் ஜாதி வித்தியாசம்ஒழியவும் சமத்துவம்ஏற்படவும் வெள்ளைக்காரர்களும் சிறப்பாக பாதிரிமார்களும் சுலபத்தில் சம்மதிக்கமாட்டார்கள்.

ஆகையால் தீண்டாமை முதலிய கொடுமை ஒழியவேண்டும் என்கின்ற கருத்துள்ளவர்களுக்கும்ஒற்றுமையை எதிர்பார்க்கும் கருத்துள்ளவர்களுக்கும் மக்களுக்கு சுயமரியாதை உணர்ச்சியை ஊட்டவேண்டும் என்னும், கருத்துள்ளவர்களுக்கும் நமது நாட்டில் இப்போது உள்ள முக்கியவேலை

முதலில் தீண்டப்படாதவர்கள் மகம்மதியராவதை ஆக்ஷேபியாதிருப்பதேயாகும் என்பது எனது தாழ்மையான தும்கண்ணியமான துமான அபிப்பிராயம். சிலர் மகம்மதியமதம் முரட்டு சுபாவத்தை உண்டாக்குகின்றது என்று எனக்கு எழுதியிருக்கிறார்கள். அது வாஸ்தவமானால் தீண்டப்படாதவர்களுக்கு அவர்களது தீண்டாமை ஒழிய மகம்மதியமதத்தை சிபார்சு செய்வதற்கு அதுவே ஒரு நல்லகாரணம் என்றே கருதுகிறேன்.

இப்பொழுது நமது தீண்டப்படாதவர்கள் தங்கள் தீண்டாமை நீங்கும்படி தாங்களாகவே அளவுக்கு மீறி ஒடுங்குகிறார்கள். காலில்விழுந்து கும்பிடுகிறார்கள். அடிக்க அடிக்க ஒடுகிறார்கள், கீழ்ப்படியாமை துக்கங்களை கடவுள்பிறப்பித்திருப்பதாய் கருதுகிறார்கள். எவ்வளவு திட்டினாலும் ரோஷப்படுவதே இல்லை. கோபிப்பதேயில்லை. "முரட்டு சுபாவம் இல்லாத இந்து மதம்" இவர்களை இப்படிச்செய்து விட்டால் தங்களை பிறர் இழிவு படுத்துவது தங்களுக்குத் தெரிவதில்லை.

ஆதலால் மகம்மதிய மதம் முரட்டு சுபாவத்தை உண்டாக்குவது உண்மையானால் அதில் சேர்ந்த இவர்கள் இனிமேலாவது இவ்வளவு தாழ்மையாக நடந்து கொள்ள மாட்டார்கள் அல்லவா? மற்றவர்களும் அவர்களது முரட்டு சுபாவத்தைக்கண்டு பயந்து மரியாதையாய் நடந்து கொள்ள இடமேற்படும் அல்லவா? அன்றியும் மகம்மதியர்களைப்பற்றி இந்துமதத்தின் சார்பாய் இந்துக்கள் நினைத்துக் கொண்டிருந்ததென்னவென்றால், துருக்கியர் மிலேச்சரென்றும், மிக்க தாழ்ந்தவர்கள் என்றும் கருதிக்கொண்டிருந்தார்கள். அதற்கு ஆதாரமாய் இப்போதும் இந்து சாஸ்திரமும் நிகண்டும் இருக்கிறது. ஆனால், தீண்டப்படாதவர்களைப் போலவே மகம்மதியர்களும் ஒடுங்கி இருந்திருப்பார்களானால் இந்தியாவில் இந்திய தீண்டப்படாதார் 6 கோடியும், மகம்மதியர் தீண்டப்படாதார் 8 கோடியுமென்று சொல்ல வேண்டியதாய் இருந்திருக்கும். இப்போது அந்த நிலை மாறியிருப்பதற்கு மகம்மதியர்களின் முரட்டு சுபாவம் என்று சொல்லக்கூடாதானாலும், ஒடுக்கமுடியாத்தாழ்மையையும் இழிவையும் ஒப்புக்கொள்ள இஷ்டமில்லாத தைரிய சுபாவம் என்றாவது சொல்லியாக வேண்டும். அந்த சுபாவம் இப்போதுள்ள தீண்டப்படாதவர்கள் என்பவர்களுக்கு வந்துவிட்டால் கூடப் போதுமானது என்றும், மதம் மாற வேண்டிய அவசியமில்லை என்றும் சொல்லலாம். ஆனால், அவர்கள் இந்துக்களாக இருக்கும் வரை சுலபத்தில் அவர்களுக்கு அந்த சுபாவம் வராது என்பதோடு மேல் வகுப்புக்காரர்கள் என்பவர்கள் சுலபத்தில் வர விடமாட்டார்கள் என்றே சொல்லுவேன்.

ஆகையால் இந்து சமூகத்தில் உண்மையான சமத்துவமும் நற்றுமையும் ஏற்படும் வரை தீண்டப்படாதவர்கள் கும்பல் கும்பலாய் மகம்மதியர் ஆவதைத் தவிர வேறு மார்க்கமில்லையாதலால் நாம் அதை ஆக்ஷேபிக்க முடியாதவர்களாய் இருக்கின்றோம். தவிரவும் மதத்தினிடத்திலோ இந்து சமூகத்தினிடத்திலோ கவலையுள்ளவர்களுக்கு இதனால் ஏதாவது சங்கடம் இருப்பதாயிருந்தால் அவர்கள் தாராளமாய் வெளிக்கிளம்பி வந்து தீண்டப்படாத மக்களுக்கிருக்கும் கொடுமையையும் இழிவையும் நீக்க முன் வரட்டும். அவர்களோடும் எப்போதும் ஒத்துழைக்கத் தயாராயிருக்கிறேன். அப்படி வீண் சோம்பேறிகளாய் பேசிக் கொண்டிருப்பதனால் இனி யாதொரு நன்மையும் அடைய முடியாது. அந்தக் காலம் மலையேறிவிட்டது. ஆதலால் 'உண்மை நாடுவோர் சங்கத்தின் இன்றைய கூட்டமானது சிலையம்பட்டியில் இந்துக்களில் உயர்ந்த வகுப்பார் எனபவர்களின் கொடுமையைச் சகிக்கமாட்டாமல் மகம்மதியமதத்தை தழுவினதின் மூலம் தங்கள் இழிவிலிருந்து விலகிய 69 ஆதிதிராவிடர்களை மனமாரபாராட்டுகின்றது' என்கின்ற தீர்மானத்தை நான் பிரேரேபிக்கின்றேன் என்று பேசி அமர்ந்தார்.

பிறகு திருமதி லட்சுமி அம்மாள் அவர்கள் மகம்மதிய மதத்தில் பெண்களுக்கு உள்ள பெருமையையும் சுதந்திரத்தையும் எடுத்துச் சொல்லி ஆமோதித்தார்கள். மத்தியில் ஒருவர் மகம்மதிய மதத்தில் உள்ள கோஷா முறையைப்பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன என்று ஒரு சீட்டு எழுதி அனுப்பினார்கள். அதற்கு திரு. ஈ.வெ. ராமசாமி தான் பதில் அளிப்பதாக முன் வந்து கோஷா முறையை தான் ஒப்புக்கொள்ளுவதில்லை என்றும், சில படித்த மகம்மதிய கனவான்கள் கோஷா முறை குரானில் இல்லை என்று சொன்னார்கள் என்றும், தான் இங்கு குரானைப் பற்றி ஒருவார்த்தையும் பேசவில்லை என்றும், தனக்கு அதைப் பற்றி ஒன்றும் தெரியாதென்றும், இந்த நாட்டில் கோஷா இல்லாத மகம்மதிய பெண்கள் அநேகர் இருக்கிறார்கள் என்றும், மலையாளத்தில் 100க்கு 75 மகம்மதிய பெண்களுக்கு கோஷா இல்லையென்றும், தஞ்சை, திருச்சி, திருநெல்வேலி, ராமநாதபுரம் இந்த பக்கங்களில் காடுகளில் வேலை செய்வதைப் பார்த்ததாகவும், தனக்குத்தெரிந்தவரை கோஷா ஒரு அந்தஸ்தாக கருதப்படுகின்றதே தவிர முழுதும் மதக் கட்டளையாகக் கருதுவதாகச் சொல்லமுடியாதென்றும், இப்பொழுது அந்த மதத்தில் சேர்ந்த பெண்கள் கோஷாவாயில்லாவிட்டால் தள்ளிவிட மாட்டார்கள் என்றும், விதவாவிவாகம், கல்யாணரத்து, பெண்கள் படிப்பு, சொத்துரிமை ஆகியவைகள் பெண்களுக்கு அந்த மதத்தில் இருப்பதால் கோஷா ஒரு சமயம் இருந்தாலும் அந்த கஷ்டத்தைவிட பல மடங்கு மேற்பட்ட அதிக லாபமிருக்கின்றதென்றும் துருக்கியை போலும் ஆப்கானிஸ்தானத்தைப் போலும் இங்கும் சமீபத்தில் சீர்திருத்தம் ஏற்படலாம் என்கின்ற நம்பிக்கை இருக்கின்றதென்றும், என்றும் சொன்னார். கரகோஷத்தினிடையே தீர்மானம் நிறைவேறியது.

## சரஸ்வதி பூஜை என்பதைப் பற்றி பேசியதாவது

சரஸ்வதி பூஜை என்பது ஒரு அர்த்தமற்ற பூஜை. கல்வியையும், தொழிலையும் ஒரு பெண் தெய்வமாக்கி அதற்குச் சரஸ்வதி என்று பெயர் கொடுத்து அந்த பூஜை செய்தால் கல்வி வரும், வித்தை வரும் என்றும் சொல்லி நம்மை நமது பார்ப்பனர்கள் ஏமாற்றி கல்விக்குச் சொந்த முயற்சி இல்லாமல் சாமியையே நம்பிக்கொண்டு இருக்கும்படிசெய்துவிட்டு நாம் அந்த சாமி பூஜையின் பேரால் கொடுக்கும் பணத்தைக்கொண்டே அவர்கள் படித்து பெரிய படிப்பாளிகளாகிக் கொண்டு நம்மை படிப்புகாமுடியா மக்குகள் என்று சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். முதலாவது சரஸ்வதி என்னும் சாமியின் சொந்த யோக்கியதையை கவனித்தால் அது பார்ப்பனர்கள் புராணக் கதைகளின்படியே மிக்க ஆபாசமானதாகும். அதாவது சரஸ்வதி என்கிற ஒரு பெண் பிரம்மனுடைய சரீரத்தில் இருந்து உண்டாக்கப்பட்ட பிறகு அவளுடைய அழகைக் கண்டு அந்த பிரம்மனேயே மோகிக்கப்பட்டு அவளைப் புணர அழைக்கையில் அவள் பிரம்மனை தகப்பன் என்று கருதி அதற்கு உடன்படாமல் பெண்மான் உரு எடுத்து ஓடவும், பிரமன் தானும் ஒரு ஆண்மான் உருவெடுத்து அவளைப் பின்தொடர்ந்து ஓடவும், சிவன் வேட உருவெடுத்து ஆண் மானைக் கொல்லவும், பிறகு சரஸ்வதி அழுது சிவபிரானும் மறுபடியும் உயிர்ப்பிக்கச்செய்து, பிரம்மனுக்கு மனைவியாக சம்மதித்ததாக சரஸ்வதி உற்பவக்கதை சொல்லுகிறது. அதாவது தன்னைபெற்றெடுத்த தகப்பனையே மணந்துகொண்டவள் என்று ஆகிறது. மற்றொரு விதத்தில் பிரம்மாவுக்கு பேத்தி என்று சொல்லப்படுகின்றது. அதாவது பிரம்மா ஒரு காலத்தில் ஊர்வசியின்மீது ஆசைப்பட்டபோது வெளியான இந்திரியத்தை ஒரு குடத்தில் விட்டு வைக்க அக்குடத்திலிருந்து அகத்தியன் வெளியாக அவ்வகத்தியன் சரஸ்வதியைப்பெற்றான் என்று சொல்லப்படுகின்றது. இதனால் பிரம்மனுக்குச் சரஸ்வதி மகன்வயிற்றுப்பேத்தி ஆகிறாள். எனவே சரஸ்வதியின் பிறப்பும் வளர்ப்பும் நடவடிக்கையும் மேற்படி பார்ப்பனப் புராணப்படி மெத்த ஆபாசமும் ஒழுக்க ஈனமுமானதாகும்.

நிற்க, இந்த யோக்கியதையுடைய அம்மாளை எதற்காக மக்கள் பூசை செய்கிறார்கள் என்பது இதைவிடமிகவும் வேடிக்கையான விஷயமாகும். அதாவது, சரஸ்வதி வித்தைக்கு அதிபதியான தெய்வமாதலால் வித்தையின் பயன் தொழிலென்றும், தொழிலுக்கு ஆதாரமானது ஆயுதங்கள் என்றும் கருதிக்கொண்டு, சரஸ்வதி பூஜை என்றும், ஆயுதபூஜை என்றும் ஒரு நாளைக் குறித்துக்கொண்டு அந்த நாளை விடுமுறையாக்கி புஸ்தகங்களையும் ஆயுதங்களையும் வைத்து பூசை செய்கிறார்கள். இந்தப் பூசையில் அரசன் தனது ஆயுதங்களையும், வியாபாரி தனது கணக்குப் புத்தகங்கள், தராசு படிக்கல், அளவு மரக்கால்படி, உழக்கு பெட்டி முதலியவைகளையும், தொழிலாளிகள் தங்கள் தொழில் ஆயுதங்களையும், இயந்திரசாலைக்காரர்கள் இயந்திரங்களையும், மாணாக்கர்கள் புத்தகங்களையும், குழந்தைகள் பொம்மைகளையும், தாசிகள் தங்கள் ரவிக்கைகளையும் சேலைகளையும் நகைகளையும், வாத்தியக்காரர்கள் வாத்தியக்கருவிகளையும் மற்றும் இதுபோலவே ஒவ்வொருவர்களும் அவரவர்கள் லட்சியத்திற்கு ஆதாரமாக வைத்திருக்கும் சாமான்களை வைத்து பூஜை செய்கின்றார்கள். இதனால் அந்த தினத்தில் தொழில் நின்று அதனால் வரும் வரும்படிகளும் போய் பூஜை ஒப்பு முதலிய ஆடம்பரங்களுக்காக தங்கள் கையில் இருக்கும் பணத்திலும் ஒரு பாகத்தை செலவு செய்தும், போதாவிட்டால் கடன் வாங்கியும் செலவு செய்வதை விட யாதொரு நன்மையும் ஏற்படுவதாக சொல்லுவதற்கே இல்லாமல் இருக்கின்றது. ஆயுதத்தை வைத்து பூசை செய்து வந்த வருகின்ற அரசர்கள் எல்லாம் இன்றையதினம் நமது நாட்டில் ஆயுதத்தை வைத்து பூஜை செய்யாத வெள்ளைக்கார அரசனுடைய துப்பாக்கி முனையில் மண்டி போட்டு சலாம் செய்து கொண்டு இஸ்பேட் ராஜாக்களாக இருந்து வருகின்றார்களே ஒழிய ஒரு அரசனாவது சரஸ்வதி பூஜை ஆயுத பூஜை ஆகிய பூஜையின் பலத்தால் தன் காலால் தான் தைரியமாய் நிற்பவர்களைக் காணோம்.

சரஸ்வதி பூஜை செய்யும் வியாபாரிகளில் ஒரு வியாபாரியாவது சரஸ்வதிக்கு பயந்து பொய் கணக்கு எழுதாமலோ, தப்பு நிறை நிறுக்காமலோ குறை அளவு அளக்காமலோ இருக்கிறார்கள் என்று சொல்ல முடியாது. அதுபோலவே கைத்தொழிலாளிகளும் தங்கள் ஆயுதங்களிடத்தில் வெகு பக்தியாய் அவைகளைக் கழுவி விபூதி சந்தனம் குங்குமப் பொட்டு முதலியவைகள் போட்டு விழுந்து கும்பிடுவார்களே தவிர ஒருவராவது நாணயமாய் நடந்து கொள்கின்றார்கள் என்றாவது அல்லது அவர்களுக்கு தாராளமாய் தொழில் கிடைக்கின்றது என்றாவது சொல்லுவதற்கு இல்லாமலே இருக்கின்றார்கள். அது போலவே புஸ்தகங்களையும் பென்சிலையும் கிழிந்த காகிதக்குப்பைகளையும் சந்தனப்பொட்டு போட்டு பூசை செய்கின்றார்களே அல்லாமல் காலோ கையோ பட்டுவிட்டால் தொட்டு கண்ணில் ஒத்திக் கும்பிடுகின்றார்களே அல்லாமல் நமது நாட்டில் படித்த மக்கள் 100-க்கு 5-பேர்களுக்குள்ளாகவே இருந்து வருகின்றார்

கள். இவ்வளவு ஆயுத பூஜை செய்தும், சரஸ்வதி பூஜை செய்தும் இவ்வளவு விரதங்கள் இருந்தும் நமது அரசர்கள் அடிமைகளாக இருக்கின்றார்கள். நமது வியாபாரிகள் நஷ்டமடைந்து கொண்டு வருகிறார்கள். நமது தொழிலாளர்கள் தொழிலில்லாமல் பிழைப்பைக் கருதி வேறு நாட்டிற்கு குடி போகின்றார்கள். நமது மக்கள் நூற்றுக்கு ஐந்துபேரே படித்திருக்கிறார்கள். சரஸ்வதியின் ஜாதியைச் சேர்ந்த பெண்கள் ஆயிரத்திற்கு ஒன்பது பேரே படித்திருக்கிறார்கள்.

இதன் காரணம் என்ன?

நாம் செய்யும் பூசைகளை சரஸ்வதி தெய்வம் அங்கீகரிக்க வில்லையா? அல்லது சரஸ்வதி செய்வத்திற்கும் இந்த விஷயங்களுக்கும் ஒன்றும் சம்பந்தமில்லையா? அல்லது சரஸ்வதி என்கின்ற ஒரு தெய்வமே பொய் கற்பனையா? என்பவையாகிய இம்மூன்றில் ஒரு காரணமாகத்தான் இருக்கவேண்டும்.

என்னைப் பொறுத்தவரையில் இவைகள் சுத்த முட்டாள்தனமான கொள்கை என்பதே எனது அபிப்பிராயம்.

வெள்ளைக்கார தேசத்தில் சரஸ்வதி என்கின்ற பேச்சோ கல்வி தெய்வம் என்கின்ற எண்ணமோ சுத்தமாய்க் கிடையாது.

அன்றியும் நாம் காகிதத்தையும் எழுத்தையும் சரஸ்வதியாய் கருதி தொட்டு, கண்ணில் ஒத்திக் கொண்டும், நமக்குகல்விஇல்லை. ஆனால் வெள்ளைக்காரன்மலஉபாதைக்குப் போனால் சரஸ்வதியைக் கொண்டே மலம் துடைத்தும், அவர்களில் நூற்றுக்கு நூறு ஆண்களும் நூற்றுக்கு அறுபது பெண்களும் படித்திருக்கிறார்கள். உண்மையிலேயே சரஸ்வதி என்ற ஒரு தெய்வமிருந்திருக்குமானால் பூசை செய்பவர்களை தற்குறிகளாகவும் தன்னைக் கொண்டு மலம் துடைப்பவர்களை அபார சக்திவாய்ந்த அறிவாளிகளாகவும்; கல்விமான்களாகவும் செய்யுமா என்பதை தயவு செய்து யோசித்துப் பாருங்கள்.

உண்மையிலேயே யுத்த ஆயுதம் கைத்தொழில் ஆயுதம், வியாபார ஆயுதம் ஆகியவைகள் உண்மையிலேயே சரஸ்வதி என்னும் தெய்வ அம்சமாயிருக்குமானால் அதை பூசை செய்யும் இந்த நாடு அடிமைப்பட்டும் தொழிலற்றும் வியாபார மற்றும், கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கவும், சரஸ்வதியை கனவிலும்கருதாததும் சரஸ்வதிபூசை செய்கின்றவர்களைப் பார்த்து முட்டாள்கள், அறிவிலிகள், காட்டுமிராண்டிகள்என்று சொல்லிக் கொண்டிருக்கும் நாடு சுதந்திரத்துடனும், வியாபாரிகள் அரசாக்ஷியுடனும், தொழிலாளர் ஆதிக்கத்துடனும் இருக்கமுடியுமா என்பதையும் யோசித்துப்பாருங்கள். இந்த பூஜையின் மூலம் நமது முட்டாள்தனம் எவ்வளவு வெளியாகின்றது பாருங்கள்.

ராஜாக்கள் கொலுவிருப்பது, பொம்மைகள் கொலுவிருப்பது, சாமிகள் கொலுவிருப்பது, இதற்காக ஜனங்கள் பணம் செலவு செய்வது, நேரம்செலவு செய்வது, அறிவுசெலவு செய்வது, பத்து லட்சக்கணக்கான ரூபாய்களுக்கு பொம்மைகள் சந்தனம் குங்குமம் கர்ப்பூரம் சாம்பிராணி கடலைபொரி சுண்டல்வடை மேளவாத்தியம், வாழைக்கம்பம், பார்ப்பனர்களுக்கு தட்சணை, சமாராதனை, ஊர்விட்டு ஊர் போக ரயில் சார்ஜு ஆகிய இவைகள் எவ்வளவு செலவாகின்றது என்பதை எண்ணிப்பாருங்கள். இவைகள் எல்லாம் யார் வீட்டு பணம்? தேசத்தின் செல்வமல்லவா என்று தான் கேட்கின்றேன். ஒரு வருஷத்தில் இந்த ஒரு பூஜையில் இந்த நாட்டில் செலவாகும் பணமும் நேரமும் எத்தனை கோடி ரூபாய் பெறுமானது என்று கணக்குப் பார்த்தால் மற்ற பண்டிகை உற்சவம் புண்ணியதினம் அர்த்தமற்ற சடங்கு என்பவைகளின் மூலம் செலவாகும் தொகை சுலபத்தில் விளங்கிவிடும். இதை எந்த பொருளாதார இந்திய தேசிய நிபுணர்களும் கணக்குப் பார்ப்பதே இல்லை

### புரட்டாசி சனிக்கிழமை

இனி அடுத்தாற்போல் வரும் புரட்டாசிசனிக்கிழமை உற்சவங்களும், திருப்பதி முதலிய நூற்றுக்கணக்கான சனிக்கிழமைப் பெருமாள்கள் உள்ள ஊர்களின் உற்சவங்களும், சனிக்கிழமை பிடிப்பதன் மூலம் அவரவர்கள் வீட்டில் ஏராளமாய் சமைத்துக் கொண்டு சோம்பேறிகளையும் அயோக்கியர்களையும் மெனக்கட்டுத் தேடிப்பிடித்து வந்து அவர்களுக்கு வயிர் நிறையவும் போட்டு மற்றும் மூட்டை கட்டிக்கொண்டும் போகக்கூடிய அளவு மேல்கொண்டும்போட்டு கஞ்சாவுக்கோ கள்ளுக்கோ சூதாட்டவோ கையில் பணமும் கொடுத்து, இவ்வளவும் போராமல் அந்தநாளெல்லாம் பட்டினிகிடந்து அந்த சோம்பேறிகளின் காலிலும் விழுந்து மாலை 3 மணி 4 மணி சுமாருக்கு சாப்பிடும் பண்டிகையிலோ விரதத்திலோ கடுகளவு அறிவு இருக்கின்றதா என்று கேட்கின்றேன். புரட்டாசி சனிக்கிழமை வந்தால் எத்தனை பேர்கள் தங்களுக்கும் பட்டை நாமம் போட்டுக்கொண்டு, சொம்புக்கும் நாமத்தை குழைத்து போட்டுக்கொண்டு, துளசியை அரளிப்பூவையும் அந்த சொம்புக்கு சுத்திக்கொண்டு, "வெங்கிடாசலபதி கோவிந்தா" என்றும், 'நாராயணா கோவிந்தா' என்றும்கூப்பாடுபோட்டு அரிசியோ காசோ வாங்கிக்கொண்டு போவதில் ஏதாவது பலனுண்டா என்றுதான் கேட்கின்றேன்.

மற்றும் திருப்பதிக்குப் போகிறேன்என்று சொல்லிக்கொண்டு, தலைமயிரும்தாடிமயிரும்வளர்த்து வெரும் மஞ்சள் நனைத்த துணிகட்டிக்கொள்வதும், மேளம் வைத்துக் கொள்வதும், பெண்டு பிள்ளைகள் சுற்றத்தார்களை அழைத்துக்கொள்வதும், வருஷமெல்லாம் பணம்போட்டு மொத்தமாய் பணம் சேர்ப்பதும் அல்லது வேண்டுதலையின்மேல் இவ்வளவு டணம் என்று கடன் வாங்கியாவது எடுத்துக்கொள்வதும் அல்லது வியாபாரத்திலோ வேறு வரும்படியிலோ லாபத்தில் இத்தனை பங்கு என்று கணக்குவைத்துசேர்த்துஎடுத்துக்கொள்வதும், ஆன பணமூட்டைகை கட்டிக்கொண்டு கடைவாயிலும் நாக்கிலும் வெள்ளி கம்பியை குத்திக்கொண்டு போதாக்குறைக்கு தெருவில் கூட்டமாய் கோவிந்தா-கோவிந்தா-கோவிந்தா என்று கூப்பாடு போட்டு வீட்டு வீட்டுக்கு கடைகடைக்கு காசுபணம்வாங்கி ஒரு பகுதியை ரயிலுக்கு கொடுத்து திருப்பதி போவதும், அங்கு முழங்கால் முறிய மலை பேறுவதும், ஆண்களும், பெண்களும் தலைமொட்டைஅடித்துக்கொள்வதும் அந்த மலைசொனைத்தண்ணீரில்குளிப்பதும். அந்த பட்டைநாமம் போட்டுக்கொள்வதும், கொண்டுபோன பணத்தை கடாரத்தில் காணிக்கையாகக் கொட்டுவதும், ஆண்களும் பெண்களும் நெருக்கடியில் இடிபடுவதும், பிடிபடுவதும், வெந்ததும்வேகாததுமான சோற்றை தின்பதும், மற்றும் பல சோம்பேறிகளுக்கும், மேகவியாதிகாரருக்கும் வேக வைத்ததோ விலைக்கு வாங்கியோ போடுவதும், விறகுக் கட்டையிலும், வேர்களிலும் செய்த மாமணிமாலைகளை வாங்கி கழுத்தில் போட்டுக்கொள்ளுவதும், மலைக்காய்ச்சலோடு மலையைவிட்டு இறங்கிவருவதும், வீட்டுக்குவந்து மகேஸ்வரபூசை "பிராமண சமார்த்தனை" செய்வதும், தவிர மற்றபடி இவைகளால் ஏதாவது செய்தவனுக்கோ, கூடப்போன மக்களுக்கோ, நாட்டுக்கோ, ஒழுக்கத்திற்கோ, மதத்திற்கோ கடுகளவு நன்மை உண்டாகுகின்றதா என்று கேட்கின்றேன்.

திருப்பதிக்கு போய்வந்தபிறகாவது யாராவது தங்கள் துர்க்குணங்களையோ கெட்டசெய்கைகளையோவிட்டு விட்டதாகவாவதுஅல்லது திருப்பதி யாத்திரையானது இம்மாதிரி குணங்களை விடும்படி செய்ததாகவாவது நம்மில் யாராவது பார்த்திருக்கின்றோமா என்று கேட்பதுடன் இம்மாதிரி அறிவீனமான காரியத்திற்காக நமது நாட்டில் வருஷத்திற்கு எத்தனை கோடி ரூபாய் செலவாகின்றது என்பதை எந்தப் பொருளாதார இந்திய தேசிய நிபுணராவது கணக்குப் போட்டார்களா என்று கேட்கின்றேன்.

### தீபாவளி.

இனி அடுத்த மாதம் தீபாவளி பண்டிகை என்று கஷ்டமும் நஷ்டமும் கொடுக்கத்தக்க பண்டிகை ஒன்று வரப்போகின்றது; அதிலும்ஏதாவது அறிவுடைமைஉண்டா என்று கேட்கின்றேன் தீபாவளிபண்டிகையின்கதையும் மிக்க ஆபாசமானதும், இழிவானதும், காட்டுமிராண்டித்தனமானதுமாகும். அதாவது விஷ்ணு என்னும் கடவுள் பன்றி உருக்கொண்டுபூமியைப்புணர்ந்ததன் மூலம்பெறப்பட்டவனானநரகாசூரன் என்பவன் வருணனுடைய குடையைப்பிடுங்கிக்கொண்டதால்விஷ்ணு கடவுள் கிருஷ்ணவதாரத்தில் கொன்றாராம். அந்த தினத்தைக் கொண்டாடுவதற்கு அறிகுறியாக தீபாவளி பண்டிகை கொண்டாடுவதாம்.

சகோதரி சகோதரர்களே! இதில் ஏதாவது புத்தியோ மனிதத் தன்மையோ இருக்கின்றதா என்று பாருங்கள். விஷ்ணு என்றும் கடவுள் பூமியைப் புணருவது என்றால் என்ன என்றாவது அதுஎப்படி என்றாவது நரகாசூரன் என்றால் என்ன? வருணன் என்றால் என்ன? வருணன் குடை என்றால் என்ன என்பதாவது, அப்படிஒன்று இருக்க முடியுமா என்றாவது, இவைகள் உண்மையா என்றாவதுகருதிப்பாருங்கள். இப்படி பொய்யானதும் அர்த்தமற்றதுமான பண்டிகையினால் எவ்வளவு கஷ்டம், எவ்வளவு ரூபா நஷ்டம்; எவ்வளவு கடன்; எவ்வளவு மனஸ்தாபம்; எவ்வளவுபிரயாணச்செலவு; என்பவைகளை ஒரு சிறிது கூட நமது மக்கள் கவனிப்பதில்லையே. அப்பண்டிகையை உத்தேசித்து ஒவ்வொருவனும் தனது யோக்கியதைக்கும் தேவைக்கும் மேற்பட்ட பணம் செலவு செய்து துணிவாங்க ஆசைப்படுகிறான்; தன்னிடம் ரூபா இல்லாவிட்டாலும் கடன் வாங்குகிறான்; கடன் என்றால் வட்டி அல்லது ஒன்றுக்கு ஒன்றரை பாகு கிரையம் ஏற்பட்டுவிடுகின்றது. இதுதவிர மாமனார் வீட்டுச்செலவு எவ்வளவு; தவிர சுத்த முட்டாள்தனமான பட்டாசு கொளுத்துவது; எவ்வளவு மற்றும் இதனால் பலவித நெருப்பு உபாதை ஏற்பட்டு வீடு வேகுதலும், துணியில் நெருப்பு பிடித்து உயிர் போதலும், பட்டாசு சுடுவதாலும் செய்வதாலும் மருந்து வெடித்து உடல் கருகி கண், மூக்கு, கை கால் ஊனமடைதுமான காரியங்கள் எவ்வளவு நடக்கின்றது. இவ்வளவும் அல்லாமல் இந்தப் பண்டிகை கொண்டாடுவதற்கு அறிகுறியாக எவ்வளவு பேர்கள் கள்ளு சாராயம் குடித்து மயங்கி தெருவில் விழுந்து புரண்டு மானம் கெடுவது. எவ்வளவு மேலும் இதற்காக இனாம் இனாம்என்று எத்தனை பாமர மக்கள் பிச்சை எடுப்பது அல்லது தொந்தரவு கொடுத்து பணம் வசூல் செய்வது ஆகிய இந்தக் காரியங்களால் எவ்வளவு டணம், எவ்வளவு நேரம், எவ்வளவு ஊக்கம், எவ்வளவு பணம் செலவாகின்றது என்று கணக்குப் பாருங்கள் இவைகளைஎல்லாம் எந்த இந்திய பொருளாதார தேசிய நிபுணர்களாவது கவனிக்கின்றார்களா என்றுகேட்கின்றேன். தவிரவும்இந்த மதத்திலேயே அற்பிசி துலாஸ்நானமென்று புதுத் தண்ணீர் காலத்தில் நதிகளில்போய் அழுக்குத் தண்ணீரில் தினம் தினம் காலையில் குளிப்பதும், புதுத் தண்ணீர் ஒத்துக் கொள்ளாமல் கஷ்டப்படுவதும், இதற்காக ஊரைவிட்டு ஊர்பயணம் செலவுசெய்துகொண்டு போய் கஷ்டப்

(தொடர்ச்சி 14-ம் பக்கம் பார்க்க)



"அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே"


# குடி அரசு

சென்னை 1929 அக்டோபர் 20உ


## பார்ப்பனரின் தேசியம்

குழந்தைவிவாகத்தைத் தடைப்படுத்தும் சாரதா மசோதா இந்திய சட்ட சபைக்கு வந்தது முதல் அது நிறைவேறும் வரை நமது பார்ப்பனர்கள் செய்த தடைகளும் சூழ்ச்சிகளும் கொஞ்ச நஞ்சமல்ல என்பது யாவரும் அறிந்ததாகும். இவ்வளவு தடைகளையும் சமாளித்து சர்க்கார் தயவினாலேயே அது நிறைவேற்றப்பட்டு ராஜப்பிரதிநிதி அநுமதியும் பெற்று சட்டமான பிறகு மறுபடியும் நமது பார்ப்பனர்கள் ஊர் ஊராய் கூட்டங்கூடி அச்சட்டத்தை கண்டித்து கூட்டம் போட்டு பேசிவருகின்றார்கள். நூற்றுக்கு தொண்ணூறு பார்ப்பனர்களுக்கு இனிமேல்தாங்கள் இவ்விஷயத்தில் ஒன்றும் செய்யமுடியாது என்பது தெரிந்திருந்துங்கூட அடுத்த தேர்தலில் பார்ப்பனர்கள் ஒன்று சேர்வதற்கும் தேர்தல் கிளர்ச்சிக்கு ஒரு வழிகண்டுபிடிப்பதற்கும் இதை உபயோகித்துக் கொள்ளலாமா என்கின்ற சூழ்ச்சியின் பேரிலேயே இந்த சாரதா மசோதா கண்டனம் என்னும் செத்த பாம்பை ஆட்டி வருகின்றார்கள். தங்களுக்கு உதவியாக மடாதிபர்களையும் கிளப்பிவிட்டு அடுத்த தேர்தலுக்கு அவர்களை தங்களுடன் சேர்த்துக் கொள்ளலாமா என்றும் சூழ்ச்சி செய்கின்றார்கள். இது கடைசியாக கிலாபத்து கமிட்டியினால் பார்ப்பனர்கள் எவ்வளவு லாபம் அடைந்தார்களோ அதுபோலவும் அது கிலாபத்திற்கு எவ்வளவு பயனளித்ததோ அதுபோலவும் தான் முடியுமே ஒழிய, ஜாக்கிரதையும் முன் யோசனையும் உள்ள மகமதிய மக்கள் இதிலெல்லாம் ஏமாந்து போக மாட்டார்கள். இவர்களாகவே வேண்டுமானால் கூட்டங்கள் கூடி வானமளாவப் பேசியதாகவும், அபிப்பிராயங்கள் கொடுத்ததாகவும், சத்தியாக்கிரகங்கள் செய்வதாக தீர்மானித்ததாகவும் பத்திரிகையில் எழுதிக் கொள்ளலாமே தவிர, மற்றபடி இவர்களுக்கு காரியத்தில் ஒரு காரியமும் செய்ய யோக்கியதை இல்லை என்பது நமக்கு நன்றாய்த் தெரியும். ஏனென்றால், இந்தக் கூட்டத்தார்களும் திரு. சத்தியமூர்த்தி முதலிய சாஸ்திரிகளும் மூன்று வருடத்திற்கு முன் இந்துதேவஸ்தான சட்டம் செய்யப்படும்பொழுது "மதத்திற்கு ஆபத்து வந்துவிட்டது" "மதத்தில் சர்க்கார் பிரவேசித்துவிட்டார்கள்" "இந்த சர்க்காரை ஒழித்துவிடவேண்டும்" ஆதலால் "எங்களுக்குஓட்டுக்கொடுங்கள்" என்று கூக்குரல்போட்டு, அந்த சட்டத்திற்கு விரோதமாக பாமர மக்களின் கையெழுத்து வாங்கி அனுப்பும்படி அச்சுப் பாரங்களை பார்ப்பன பத்திரிகைகள் மூலம் ஊர் ஊராய் அனுப்பி பொய்க் கையெழுத்துகள் லட்சக்கணக்காய் போட்டு வைசிராயிக்கனுப்பி மடாதிபதிகள் பணத்தையும் லட்சக்கணக்காய் கொள்ளையடித்து வயிறு வெடிக்கத் தின்றுவிட்டு மேடை மீது ஏறி எவ்வளவோ வீரம் பேசியகூட்டத்தார், இப்போது அந்த சட்டத்திற்கும் அந்த இலாக்காவுக்கும் குலாம்களாய் இருப்பதோடு சிறிதும் மான வெட்கமில்லாமல் நேற்றைய சட்டசபை கூட்டத்தில் திரு. சத்தியமூர்த்தி சாஸ்திரியாரே 'தேவஸ்தானக் கமிட்டிக்கு ஏன் பார்ப்பனர்களை நியமிக்கவில்லை' என்று அந்த இலாக்கா மந்திரியை கேள்வி கேட்டு, தகுந்த யோக்கியதையுடைய பார்ப்பனர்கள் கிடைக்கவில்லை என்று மந்திரியும் சொல்லி, இந்தக் கேள்வி வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ தத்துவத்தைக் கொண்டு கேட்கப்படுகின்றதா என்று கேட்டதற்கும் பதில் சொல்லாமல் மந்திரியைக்கொண்டு ஆம் என்று சொல்லச்செய்த வீரராகிய திரு. சத்தியமூர்த்தி அவர்கள் மறுபடியும் சாரதா மசோதாவைப்பற்றி சென்னையில் பேசியிருப்பதைப் பார்க்கும்போது நாளைக்கு இவரே ஏன் அது சம்பந்தமான உத்தியோகங்கள் தங்கள் கூட்டத்தாருக்குக் கொடுபடவில்லை என்று கேட்பதில் சந்தேகப்பட இடமுண்டா என்று கேட்கின்றோம். எனவே, இப்பொழுது இவர் என்ன பேசியிருந்தபோதிலும் இந்த சத்தியமூர்த்தி கூட்டத்தாரே ஆண், பெண் அடங்கலும் நாளைக்கு இந்த சட்டத்தை அமுலில் கொண்டுவரும் உத்தியோகங்களுக்கு பல்லை கெஞ்சப் போகிறார்கள் என்பதிலும் இவர்களே சட்டத்தை சரிவர நடத்திவைக்கப் போகிறார்கள் என்பதிலும் நமக்கு சிறிதும் சந்தேகமில்லை.

நிற்க, திரு. சத்தியமூர்த்தி சாரதா மசோதா விஷயமாகப் பேசியிருப்பவைகளை கவனிப்போம்.

அதாவது, சர்க்கார் சமூக சம்பந்தமான சட்டம் செய்யக் கூடாதென்றும், பார்ப்பனர்களின் ஒத்துழைப்பை சர்க்கார் இழந்துவிடக்கூடும் என்றும், பார்ப்பனர்கள் இச்சட்டத்திற்கு பணிந்துவிடாமல் மீறி சத்தியாக்கிரகம் செய்யவேண்டும் என்றும் பேசி இருக்கின்றார். இந்தப் பேச்சுக்கு தலைமைவகித்தவர் சென்னை மாகாண வருணாசிரம கமிட்டி தலைவர் திரு. டி. ஆர். ராமச்சந்திர அய்யர் ஆவார். திரு. சத்தியமூர்த்தியோ பூரண சுயேச்சைக்கட்சி காரியதரிசியாவர். எனவே, பூரண சுயேச்சைக்கும் வருணாசிரம தருமத்திற்குமுள்ள இரகசிய சம்பந்தமும் சூழ்ச்சியும் இந்தக் கூட்டுறவால் நன்கு விளங்கும். தவிரவும் திரு. சத்தியமூர்த்தி பேசும்பொழுது அதுவும் ஒருகட்டிடத்திற்குள் பேசும்பொழுது கூட்டத்தில் குழப்பம் ஏற்பட்டுபோலீசுக்கு சொல்லி அனுப்பி இரண்டு போலீஸ்சேவகர்களைத்தருவித்து வைத்துக்கொண்டு பேசிஇருக்கின்றார். இதிலிருந்து இவருடைய சமூகசீர்திருத்தமும் தேசியமும் சுயராச்சியமும் வெள்ளைக்காரர் நீங்கிய சுயேச்சையும் எவ்வளவு வீரமுள்ளது என்பதை வாசகர்களே உணர்ந்து கொள்ளலாம்.

மிருகப் புணர்ச்சியைவிட மிகக்கேவலமான குழந்தை புணர்ச்சியைத் தடுக்க இவர்களாலும், இவர்கள் மதத்தாலும், இவர்கள் காங்கிரசாலும், தேசியத்தாலும், பூரண சுயேச்சைப் பிரசாரத்தாலும், ஆயிரக்கணக்கான வருஷங்களாக செய்துவரும் சீர்திருத்தத்தாலும், முடியாத ஒரு காரியத்தை சர்க்கார் செய்தால் சர்க்கார் செய்யக்கூடாதென்றும், அதற்கு மக்கள் கீழ்ப்படியக் கூடாதென்றும், அந்த சட்டத்தைமீற வேண்டும் என்றும், சர்க்காரோடு பார்ப்பனர்கள் ஒத்துழைக்கக் கூடாதென்றும் சொல்லும் இவரின் ஒத்துழையாமையும் தேசியமும் என்ன கருத்துக்கொண்டது என்பதை வாசகர்களையே யோசித்துப் பார்க்கவேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

இந்தக் கூட்டத்தாரின் தேசியத்தின்கீழும் காங்கிரசின்கீழும் இந்திய மக்கள் என்றைக்காவது மனிதத் தன்மையை அடைய முடியுமா என்பதையும் யோசித்துப் பார்க்கும்படி வேண்டுகின்றோம்.

தேவஸ்தான மசோதா, மத விரோதம் தேவதாசிகளை ஒழிக்கும் மசோதா மதவிரோதம், விபசாரிகளை ஒழிக்கும்மசோதா மதவிரோதம், பச்சைக்குழந்தைகளைப் புணரும் கொடுமையை ஒழிக்கும் மசோதா மத விரோதம் என்பதானால், அப்படிப்பட்ட அயோக்கிய ஒழுக்க ஈனமான இழிவான மதங்களை இந்தபிரிட்டிஷ் சர்க்கார் தயவில்லாமல் அழிக்கவோ ஒழிக்கவோ முடியுமா என்றுதான் தேசிய வீரர்களையும், காங்கிரஸ் பக்தர்களையும், ஒத்துழையாமை தியாகிகளையும், சீர்திருத்த மகாத்மாக்களையும் கேட்கின்றோம்.

உலகம் போய்க்கொண்டிருக்கின்ற வேகத்தில் அதாவது ஆகாயத்தில் பறப்பதற்கு சட்டமும், தண்ணீருக்குள் பறப்பதற்கு சட்டமும் செய்து கொண்டிருக்கின்ற காலத்தில், மனிதனையும் குதிரைகளையும் யந்திரத்தினால் செய்து கொண்டிருக்கும் காலத்தில், ஒரு அவுன்சு எடை சூரணத்தினாலும் ஒரு அவுன்சு எடை திராவகத்தினாலும் பதினாயிரக்கணக்கான மக்களை கொல்ல வழி கண்டு பிடித்திருக்கின்ற காலத்தில் பதினாயிரம் மயிலுக்கு அப்பால் இருந்து மத்தியில் கம்பி இல்லாமல் பேசவும் கம்பியில்லாமல் விளக்கு எரிய வைக்கவும் வேலை செய்து கொண்டிருக்கும் காலத்தில் ஆணை பெண்ணாக்கி, பெண்ணை ஆணாக்கி பரீக்ஷை பார்கின்ற காலத்தில் நமது நாட்டில் குழந்தைகளை புணரக்கூடாது என்று சட்டம் செய்யும் வேலையில் ஒரு கூட்டம் ஈடுபடவும், அதை மீறி நடக்க ஒரு கூட்டம் வீரர்கள் அதுவும் 'தேசியவீரர்கள்' ஒத்துழையாமைக்குத் தயாராகவும் இருந்தால் நமது நாட்டின் பெரு

மையையென்ன என்று சொல்லுவது என்பதும் நமக்கே விளங்கவில்லை. இந்த வீரர்களை எப்படி மதிப்பது, எப்படி பின்பற்றுவது, என்பதும் நமக்கு விளங்கவில்லை. நம்மைப் பொறுத்தவரை இந்த மாதிரி வீரர்களைப்பற்றி கவலை இல்லையானாலும் ''சுயமரியாதை இயக்கத்தின் எல்லா கொள்கைகளையும் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால் சர்க்காரோடு ஒத்துழைப்பதாகமாத்திரம் ஒப்புக்கொள்ள முடியவில்லை'' என்று சொல்லும் ஒத்துழையாமை தியாகிகளுடையவும்,

''சுயமரியாதை இயக்கக் கொள்கையெல்லாம் சரிதான்; ஆனால் அதில் தேசியமில்லை'' என்கின்ற தேசீய வீரர்களுடையவும்,

''சுயமரியாதை இயக்கம் நாட்டுக்கு நல்லதுதான்; ஆனால் அது மதத்தை எதிர்க்கின்றது'' என்கின்ற மதபக்தர்களுடையவும்,

''சுயமரியாதை இயக்கம் வேண்டியதுதான்; ஆனால் அது தனது கொள்கையை நிறைவேற்ற சர்க்கார் தயவை எதிர்பார்க்கின்றது'' என்கின்ற தேசீயசீர்திருத்த மகான்களையும் உடைய அறிவையும் யோக்கியதையையும் எண்ணத்தையும் நினைக்கும்போதுதான் நமது நாட்டின் அயோக்கியத்தனமும் வெளியாவதோடு, இந்த மாதிரியான கூட்டத்தாரைவிட திருவாளர்கள் சத்தியமூர்த்தி, எம். கே. ஆச்சாரி, ஏ. ரங்கசாமி அய்யங்கார், சி. ராஜகோபாலாச்சாரி டி. ஆர். ராமச்சந்திரய்யர் முதலியவர்கள் யோக்கியர்கள் என்றே தோன்றுகின்றது. ஏனெனில், சர்க்கார் இல்லாமல் சட்டம் செய்ய முடியுமா? சட்டமில்லாமல் காரியம் நடக்குமா? காரியம் நடக்கும்போது மதங்களையும் மனுதர்ம சாஸ்திரங்களையும் பராசர ஸ்மிருதிகளையும் கொண்டு வந்து குறுக்கே போட்டால் எடுத்தெறியாமல் சும்மா இருந்தால் அனுபவத்தில் நடத்த முடியுமா என்று கேட்கின்றோம். அதுமாத்திரமல்லாமல் திரு. சத்தியமூர்த்தி அவர்கள் இந்த சட்டம் கொண்டுவந்த சாரதா அவர்களை கடவுள் தான் காப்பாற்றவேண்டும் என்று பேசி இருக்கிறார். எனவே திரு. சாரதா, அவர்கள் திரு. சத்தியமூர்த்தியின் கடவுளுக்கு பயந்திருந்தால் இந்த சட்டமுடிந்திருக்குமா என்றும் கேட்கின்றோம். நிற்க,

இது விஷயத்தில் ''பச்சை தேசிய''ப் பத்திரிகையாகிய அதாவது சர்க்காரைக் கண்ணால் பார்த்தால் கண்ணை லோஷன் போட்டு கழுவவேண்டும் என்றும், சர்க்காரைப்பற்றி காதில் கேட்டால் காதில் புருஷை விட்டுத் துடைக்கவேண்டும் என்றும் மனதில் நினைத்தால் மனதை விளக்குமாற்றால் தேய்த்து கழுவவேண்டும் என்றும் கருதிக்கொண்டிருக்கும் தேசிய பத்திரிகையாகிய தமிழ்நாடு பத்திரிகை திரு. சத்தியமூர்த்தியின் இந்த தேசீயப் பிரசங்கத்தைப் பற்றி எழுதுவதாவது:—

சமூகங்களுக்கு ஏற்பட்டுள்ள கொடுமைகளை நீக்க சர்க்கார் சட்டமும் சவுக்கடியும் இல்லாமல் முடியாது.

''புத்தபகவான் சர்வத் தியாகங்கள் செய்து நாடெங்கும் சுற்றிப் பிரசாரம் செய்தும் முடியாமல் போன அநேக காரியங்கள் சர்க்கார் சட்டத்தினாலேயே நடத்த முடிந்திருக்கிறது.''

''விதவைகளை உயிருடன் நெருப்பிலிட்டுக்கொளுத்தியதும், உயிர் இருக்கும் போதே கங்கையில் தூக்கிப்போட்டதும், குழந்தைகளையும் கர்ப்பிணிகளையும் கோயிலில் நரபலி இட்டதும், கீழ் ஜாதியாரை மேல் ஜாதியார் கொன்றாலும் கேள்வி இல்லை என்று இருந்த சாஸ்திரீதியும், பிராமணனைத் தவிர மற்றவன் படித்தால் பாபம் என்று இருந்த தடையும் சர்க்கார் சட்டம் செய்த பிறகே நீங்கின.''

''வழக்கங்களிலும் மதக் கொள்கைகளிலும் சர்க்கார் தலையிடக்கூடாது என்று வைதீகர்கள் வாதிப்பது முற்றிலும் தவறாகும்.

''இந்தியா சுயராஜ்ஜியமடையவேண்டும் எனபதில் முன்னணியில் இருக்கும் சத்தியமூர்த்தி சமூக தர்மத்தைத க்க அடிக்கடி கிளம்பிவிடுவது ஆச்சரியமாயிருக்கின்றது.''

என்பதாக எழுதி இருக்கின்றது. இனி மற்ற தேசீய வீரர்களுக்கும் தேசாபிமானிகளுக்கும் ஒத்துழையாமை தியாகிகளுக்கும் என்று இந்த மாதிரி புத்தி வருமோ தெரியவில்லை. முடிவாக நாம் ஒன்று சொல்லுகின்றோம். அநேகமாக இந்தப்பிரச்சினையையே ஒரு சமயம் அடுத்த தேர்தல்பிரச்சினையாகக்கொண்டு வரலாமா என்று நமது பார்ப்பனர்கள் கருதிக்கொண்டிருப்பதாகத் தெரிகின்றது. ஏனெனில், இது சமயம் அவர் கைவசம் எவ்வித திட்டமும் இல்லாமல்போய் விட்டது. அதாவது கதர் சங்கதியும், தீண்டாமை சங்கதியும் மதுவிலக்கு சங்கதியும் வெறுத்துப் போய்விட்டது. சர்க்காரை எதிர்ப்பதும் உத்தியோகம் ஏற்றுக் கொள்ளாததும் முட்டுக்கட்டை போடுவதுமான சங்கதிகளும் போன தேர்தல் முடிவில் அதாவது மந்திரிகளை நியமித்ததில் வெளியாய்விட்டது.

சைமன் கமிஷன் பகிஷ்காரமும், திருவாளர்கள் காந்தியும் நேருவும் எல்லோரையும் சட்டசபையைவிட்டு வெளியேறும்படி கேட்டும் எல்லா இந்தியகாங்கிரஸ் கமிட்டி தீர்மானித்தும் யாரும் வெளியேறாததினாலும், சென்னையில் தேசீய பூசை நடந்ததினாலும், அதற்குமயோக்கியதை இல்லாமல் போய்விட்டது. மற்றப்படி வகுப்பு வாதத்தைப்பற்றிச் சொல்வதற்கும் யோக்கியதை இல்லாமல போய்விட்டது. ஏனெனில், பார்ப்பனர்களே வகுப்புவாதம் பேச வேண்டி வந்துவிட்டதால் அதுவும் போய்விட்டது. கடைசியாக சுயமரியாதை இயக்கம நாஸ்திக இயக்கம், மதத்துரோக இயக்கம், சாஸ்திர மறுப்பு இயக்கம் என்று சொல்லி வெளியில புறப்படலாம் என்று கூலி கொடுத்து ஆஸ்திகச் சங்கம் ஏற்படுத்தி காங்கிரஸ் பணம் இரண்டுமூன்று ரூபாயும் கொடுத்து பிரசாரம் செய்து பார்த்து, அதுவும் நரிதின்றகோழி கூப்பிடுவது போல் ஆகிவிட்டது.

இனி அவர்களுக்கு இதைத்தவிர வேறு ஒரு கதியும் இல்லை. ஆகையால் பொது ஜனங்கள் ஜாக்கிரதையாய் தேர்தலில் இந்தக் கூப்பாடு பலிக்காமல் பார்த்துக்கொள்ளவேண்டுமாய் எச்சரிக்கை செய்கின்றோம்.

## தீபாவளி பண்டிகை பார்ப்பன சூழ்ச்சி

தீபாவளி பண்டிகை என்பது அர்த்தமற்றதென்றும், அதற்கு ஆதாரமான கதைகள் பொய்யும் புளுகும் ஆபாசமுமானதென்றும், அதற்காக பண்டிகை கொண்டாடுவது பார்ப்பனனுக்கு நம்மை அடிமை ஆக்கவும் பார்ப்பனனின் ஆதிக்கத்தை பலப்படுத்தவும் ஏற்படுத்தப்பட்டதென்று சொல்லி வந்திருக்கின்றோம். அன்றியும் புராணங்களை பொய்யென்றும் ஆபாசமென்றும், பார்ப்பன சூழ்ச்சி என்றும் தீர்மானித்துவிட்ட மக்கள் மறுபடியும் அதே புராணக் கதையாகிய தீபாவளி பண்டிகையை கொண்டாடுவதென்பதும், பட்டாசு வாங்கி சுடுவதென்பதும், அறியாமையும் மூட நம்பிக்கையும், சுயமரியாதைக் கொள்கைகளுக்கு விரோதமுமாகும்.

உஷார்! உஷார்!! உஷார்!!!

## கார்ப்பொரேஷன் தேர்தல்

ஜஸ்டிஸ் கட்சி முனிசிபல் கவுன்சில் பார்ட்டியின் கூட்டம் ஒன்று 16—10—29 தேதி இரவு 8 மணிக்கு தியாகராய மெமோரியல் கட்டட மேல் மாடியில் கூடிற்று. 19 அங்கத்தினர்கள் விஜயமாயிருந்தார்கள். திருவாளர்கள் ஜி. நாராயணசாமி செட்டியாரும் அவர் குமாரரும், மற்றுமிரண்டொருவரும் வரவில்லை என்பதாகத் தெரிகின்றது. கூட்டத்தில் இரகசியமாய் ஓட்டு எடுத்ததில் திரு. ராமசாமி முதலியாருக்கு 15 ஓட்டும் டாக்டர் நடேச முதலியாருக்கு 2 ஓட்டும் கிடைத்தன. அப்படி இருந்தும் இருவரும் தேர்தலை போட்டி போடப் போவதாகவே முடிவு செய்து கொண்டு போயிருக்கிறார்கள். ஏறக்குறைய இருவருமே சுயராஜ்ஜியக் கட்சி கவுன்சிலர்களின் ஓட்டுகளை நம்பிக் கொண்டிருப்பதோடு சுயராஜ்ஜியக் கட்சி கவுன்சிலர்கள் வீட்டுக்கும் தலைவர்கள் வீட்டுக்கும் இரு அபேட்சகர்களும் நடந்தவண்ணமாய் இருக்கின்றார்கள். வெள்ளைக்காரர்கள் ஓட்டுகளையும் இருவரும் நம்பிக் கொண்டிருக்கின்றார்கள். ஜஸ்டிஸ் கட்சி கவுன்சிலர்கள் ஓட்டு அநேகமாய் சரிசமமாய்ப் பிரியாவிட்டாலும் இரண்டுபேருக்குமாகத்தான் பிரியக்கூடும் போல் தெரிகின்றது. சுயராஜ்ஜியக்கட்சி ஓட்டுகளும் அதே மாதிரிதான் பிரியும்போல் தெரிகின்றது. வெள்ளைக்காரர்களின் ஓட்டுகள் நாலில் மூன்று பாகம் ஒருவருக்கும் ஒரு பாகம் ஒருவருக்குமாக பிரியலாம். மற்ற ஓட்டுகளும் சரிசமமாகப் பிரியலாம். எனவே, தேர்தலில் இருவர் போட்டியும் பலமாக இருக்கக்கூடும். நம்மைப் பொறுத்தவரை முடிவைப்பற்றி கவலையில்லாவிட்டாலும், அதன் பயனாய் ஏற்படக்கூடிய கக்ஷிபிளவு பார்ப்பனரல்லாதார் கட்சியையும் அக்கட்சியின் அடுத்த சென்னை சட்டசபைத் தேர்தல்களையும் பாதிக்காமல் இருக்க முடியாதென்றே கருதி கவலைப்படுகின்றோம். தேர்தல்கள் வரும்போதெல்லாம் நிலைமையையும் நியாயத்தையும்

உரிமையையும் சிறிதும் லட்சியம் செய்யாமல் பலத்தையும் தந்திரத்தை யும் சண்டித்தனத்தையும் ஆதார மாக வைத்தே முடிவு செய்ததாயி ருந்தால், அந்தக்கட்சிக்கு எந்த விதத் தில் யோக்கியதையும் நம்பிக்கையும் இருக்க முடியும் என்பது நமக்குப் புரியவில்லை. அநேகமாக 5, 6,மாதத் திற்குள் சட்டசபை தேர்தல் வரக் கூடுமாதலால் திரு.ராமசாமி முதலி யாரைப் போன்றவர்கள் கார்ப்பொ ரேஷன் தலைவராயிருந்தால் கக்ஷி தேர்தலுக்கு அனுகூலமாயிருக்கக் கூடும் என்னும் காரணம் திரு. ராம சாமி முதலியாருக்கு அனுகூலமாக சொல்லிக் கொள்ளப்படுகிறது. டாக்டர் நடேசமுதலியார் இந்த கட் சியில் சேர்ந்த காலம் முதல்கொண்டு கஷ்டப்படுகின்றவரானதினாலும் ஒவ் வொரு சமயத்திலும் இம்மாதிரி சாக்குகள் வந்தே அவருடைய உரி மை நழுவ விடப்படுவதாலும் அவ ரும் இதனாலேயே அடிக்கடி கோபித்துக் கொண்டு கட் சியில் கலகம் விளைவிப்பதும் வெளி யில் போவதும் மறுபடி சமாதான மும் ஆசையும்சொல்லி அழைக்கப்படு வதாலும், ஏதாவது ஒருதடவை அவ ருக்கும் விட்டுக் கொடுக்க வேண்டிய து ஒற்றுமையை உத்தேசித்தாவது அவசியம் என்கின்ற விஷயம் டாக்டர் நடேசமுதலியாருக்கு அனு கூலமான காரணமாக சொல்லிக் கொள்ளப்படுகிறது. இரண்டு கார ணங்களும் சரி என்று வைத்துக் கொண்டாலும் திரு.நடேசமுதலியா ருக்கு விட்டுக் கொடுப்பது இந்தத் தடவையா அல்லது அடுத்த தடவை யா என்பதை வேண்டுமானால் மற்ற தலைவர்களும் சேர்ந்து யோசனை செய்து ஒரு முடிவு கட்ட வேண்டிய தான விஷயம். அப்படிக்கில்லாமல் எப்படியோ போகட்டும் என்று மற்ற தலைவர்களும் இயக்கத் தலைவரும் அலக்ஷியமாயிருப்பதும் சிலர் இரு வருக்கும் நல்ல பிள்ளை போல் நடந்து கொள்ளுவதும் உள்ளுக்குள் அவ ரவர்களுக்கு இஷ்டமானவர்களுக்கு வேலை செய்வதுமான காரியங்களா னது, அவற்றின் பலன் எப்படியானா லும், அவை தலைவர்களின் பொறுப் பற்ற தன்மையையும் கோழைத்தன த்தையும் சுயநலத்தையுமே காட்டுவ தாகும். நெல்லூர்மகாநாட்டு நடவடிக் கை ஒருவாறு நமது இயக்கத்தில் உள்ள கட்சிகள் இவ்வளவு என்ப தைக் காட்டிவிட்டது. ஆனால் அடுத்து வரும் கார்ப்பொரேஷன் தலைவர் தேர் தலானது அக்கட்சிகளின் தனித்தனி வேலைகளைக் காட்டக்கூடியதா கிவிடுமோஎன்றே பயப்படுகின்றோம்.

ஆகையால் ஜஸ்டிஸ் கட்சித்தலை வர் உடனே ஒரு கூட்டத்தைக் கூட் டி இருவரையும் தருவித்து இன்னார் தான் நிற்க வேண்டும் என்று தீர் மானம் செய்ய வேண்டியது அவரு டைய முக்கியமானதும் கடமையான துமான வேலையாகும். அப்படிக்கில் லாமல் அலட்சியமாயிருப்பதோ அல் லது தனது தலைவர் ஸ்தானம் கவுர விக்கப்பட மாட்டாது என்பதோ காரணம் கொண்டு சும்மா இருப்பதா னால் அவரும் பொறுப்பை உணராத தலைவர் என்றுதான் சொல்லித்தீரவே ண்டியிருப்பதற்கு வருந்துகின்றோம்.


சிலிண்டர் கிலிட்டு கெடியாரத்தை ரூ. 5, 6 கொடுத்து வாங்கி மோசமடையாதீர்கள்.

வந்து விட்டது லீவர் கை கெடிகாரம்:—

ரிஜிஸ்டர் FIDO-LEVER No. 5.

அநேக பேர் வேண்டுகோளின்பேரில் சுவிட்லாண்டு பாக்டரிக்கு எங்கள் ஆர்டரின் பேரில் மேல்கண்ட மேக்கர் டயலின் பேரில் இருப்



பதால் அதைக் கவனித்து வாங்கவும். லீவர் சாமான்களாலும் சரியான காலத்தை காட்டக் கூடியதும் 10, 15 வருஷம் உழைக்கும். இது வரை 2000 கெடியாரங்கள் செலவாகி வக்கீல் ஜமீன்தார்களிடமிருந்து அநேக சர்டிபிகேட் வந் திருப்பதால் இதை ஒரு முறை தருவித்துப் பார்த்தால் மறுபடி எந்த கெடியாரத்தையுமே இச்சிக்கார். கைவசம் கொஞ்சம். ஆர்டருக்கு முந் துங்கள். குறைந்த விலை ரூ. 6-8-0. இம்மாதம் வரை தான். லீவர் பாக்கெட் வாச் ரூ. 4-15-0.

NOBLE WATCH Co., (K) PAREL-BOMBAY (12)



இனாம்! இனாம்!

லேடி போட்டோ காலண்டர்

இன்ப லீலா படங்கள்

64 வகை சிற்றின்ப ரசிய உருவ ஒரிஜினல் மாதர் போட்டோ படங்கள்

ஆல்பம் உள்பட விலை ரூ. 5.

வெளிநாட்டு ஆர்டர்களுக்கு போஸ்டேக்காக முன்பணம் ரூ. 1½ அனுப்பவும்.

K. G. STORES, VEPERY, MADRAS.


## க்ஷேமநிதி சீட்டு

இந்த சீட்டானது இந்த மாதம் 19-ந் தேதி எடுப்பதாக முன்னமே விளம்பரப்படுத்தி இருந்ததில், சீட்டுகள் விற்றவர் கள் எல்லோரிடத்தி லிருந்தும் சீட்டு விற்ற பணமும், சீட்டு புஸ்தகங்களும் வந்து சேராத தாலும் அந்த சீட்டுகள் லாட்ட ரியில் சேரவேண்டி யிருப்பதா லும் குறித்த 19-ந் தேதி சீட்டு எடுக்க முடிகிறதில்லை. ஆகை யால் 1929-ம் வருஷம் நவம்பர் மாதம் 3ந் தேதி சீட்டு எடுக்க ஏற்பாடு செய்யப் பட்டிருக் கிறது. யாது காரணத்தைக் கொண்டும் இனிமேல் காலம் தள்ளிவைக்கப் படமாட்டாது. சீட்டு விற்றவர்கள் பணத்தை யும் கவுண்டர் பைல் புஸ்தகங் களையும் நாளது மாதம் 21-ந் தேதிக்குள் என் கையில் கிடைக் கும்படி அனுப்ப வேண்டியது. அவைகள் தாமதித்து அனுப்பு வதால் சீட்டில் சேராமல் போனால் அதற்கு கமிட்டியார் ஜவாப்தாரியல்ல.

கஸ்தூரி ரங்கப்பநாயக்கர்,
செக்ரெட்டரி,
பொன்னேரிபள்ளிக்கூட
க்ஷேமநிதி கமிட்டி,
15-10-29. பொன்னேரி போஸ்டு.


மகா மன்மத சிந்தாமணி லேகியம்

அபாரமான தாதுபுஷ்டி, ஜீரண சக்தி, திடகாத்திரம், புத்தி கூர்மை, பரமானந்தம் சுறுசுறுப்பு, ஞாபக சக்தி, போக போக்கியம், புத்திர சந்தானம், சதா உற்சாகம் முதலியனதேவையுள்ளவர்கள் நமது ஒப்புயர்வற்ற இம்மகாமன்மத சிந்தாமணி லேகியம் ஒன்றினாலேயே அடையக்கூடும்; எல்லா இடங்களி லும் கிடைக்கும். முதல் நெம்பர் முதல்தரம் அதிக திடமுள்ளது.

1-சேர் டின் (8-டலம் அல்லது 24-ரூ. எடை) விலை ரூ. 3-0-0.

இதர எல்லா வியாதிகளுக்கும் நம்மிடம் உயர்ந்த உத்தரவாதமுள்ள சிறந்த மருந்துகள் கிடைக்கும்.

சில முக்கியமான மருந்துகள்

| | | | | |
|---|---|---|---|---|
| அஜீர்ணத்தைப் போக்கும் அமிர்தம் 1-சேர் டின் | ... | ... | ரூபா | 2—0—0 |
| வலிகளைப் போக்கும் அமிர்த ரசம் 1-புட்டி | ... - | ... | ரூபா | 1—8—0 |
| போக சக்தியைப் பூர்ணமாகக் கொடுக்கும் தங்கரேக் மன்மத குளிகை 100-க்கு ரூ. 15—0—0, 50-க்கு ரூ 8—8—0, 25-க்கு | | | ரூபா | 5 0—0 |
| விபசார வியாதிகளை ஒழிக்கும் ப்ரமேக நிவாரணி 1 புட்டி | ... | ... | ரூபா | 2—4 0 |
| சிரசைப் பற்றிய தீமைகளை ஒழிக்கும் வில்வாதி தைலம் 12-அவுன்ஸ் புட்டி 1-க்கு ரூபா 2-4-0, 6-அவுன்ஸ் புட்டி 1க்கு | | | ரூபா | 1—3—0 |
| சர்ம வியாதிகளுக்கு படை மருந்து புட்டி 1-க்கு | ... | ... | ரூபா | 0 8-0 |
| தண்டபாணி பற்பொடி டப்பிகள் டஜன் 1க்கு | ... | ... | ரூபா | 1—8—0 |

எல்லா விவரமும் அடங்கிய பெரிய கேட்லாக்கிற்கு எழுதவும்.

குறிப்பு:—நமது வைத்தியசாலையில் கூலிக்கு வேலை செய்து கொண்டிருந்தவர்களிற் சிலர், தம்மை பெரிய டாக்டர் என்றும், தமது மருந்துகள் பணத்திற் குறைந்தும், குணத்திற் சிறந்தும் விளங் குவதாகவும், புதிய வைத்தியசாலைகளின் பெயரால் போலி மருந்துகளை நமது மருந்துகளுக்கு சமம் என்று விளம்பரப்படுத்தி விற்பனை செய்வதாகத் தெரியவருகிறது. பொது ஜனங்கள் ஏமாறாமல் இருக் கும் பொருட்டு எச்சரிக்கை செய்கிறோம்.

அறிவிப்பு: சிலோன், பர்மா, மலாய், பினாங்கு, சிங்கப்பூர் முதலிய இடங்களில் நமது வைத்திய சாலைக்கு சுமார் 500 ஏஜண்டுகள் வரையில் இருக்கிறார்கள். ஏஜண்டுகள் இல்லாத ஊர்களில் தேவை யுள்ளவர்கள் எழுதினால் ஏஜன்சி நியமிக்கப்படும்.

தண்டபாணி வைத்தியசாலை,

தபால் பெட்டி 292, ... ... ... மதராஸ்.

உலகத்தில் நீங்கள் உயர்பதவி யடையவேண்டாமா ?

சகலவித வசிய மர்மங்களை நீங்கள் தெரிந்துகொள்ளவேண்டாமா ?

## இவை எப்படி அடைவது ???

## கீழே கவனித்து வாசியுங்கள் !!!

பூலோகத்தின்கண் புண்ணிய கீர்த்தியாய் விளங்க—உயர்பதவி—சுயமரியாதை—கௌரவம்—மஹத்துவம்—புகழ்ச்சி—ஆதிக்யம்—அதிர்ஷ்டம்—ஜீவசக்தி—கார்யசித்தி—ஹிப்னடிசம்—மேஸ்மரிஸம்—முதலானவைகளை அனுபவிக்கவேண்டிய அபூர்வ ரகஸ்யங்களை சுலபமாக அறிந்து அனுஷ்டிப்பதற்கு—
ஸ்வாமி ப்ரேமானந்த யோகீஸ்வரர் அவர்களினால் லோகோபகாரமாய் எழுதப்பட்ட




என்னும் அதியற்புத கிரந்தத்தை உடனே விலைக்கு வாங்கி வாசித்து லாபம் அடையுங்கள் ! இதில் கோரிய பெண்ணை மணமுடித்தல், மணமகன் மணமகளுடைய காதலை விருத்திசெய்தல், கன்னிகை வசீகரணம், மனமில்லா மணத்தை மகிழ்வுபெறச் செய்தல், ப்ரேமாபி விர்த்தி, கிரந்தரமான நட்பைப்பெறல், மணத்திற்குமுந்தி மணப்பெண்ணின் ப்ரீதியைப் பெறல், ஸ்திரீகளிடத்தில் கௌரவம்பெறுதல், பிரிவுற்ற தம்பதிகள் கூடுதல், வேண்டுமளவு சந்ததி பெறல், கணவனின் கெட்ட நடத்தைகளை திருத்துதல், பெண்களின் துர்நடத்தைகளை நிறுத்துதல், தனவந்தனை தன்வயமாக்கிக்கொள்ளல், உருக்கமற்ற உறவினரின் உருக்கத்தை பெறுதல், பேய் பிசாசுகளை ஓட்டுதல், சூன்யம் திருப்புதல், பைத்தியம் போக்கடித்தல், மானஸ வசியம், ஜீவஜந்துக்களின் வசியம், ஜனகர்ஷணம், களாகர்ஷணம், ஜனாகர்ஷணம், மோஹனம், ஸ்தம்பனம், உச்சாடனம், வித்வேஷணம், மாரணம், சாந்தி முதலாக 100 ப்ரயோகங்கள், சிறுவர் முதல் பெரியவர் ஈராக அறிந்துகொள்ளும்படியான சுலபமான நடையில்—இனிய மொழியில் எழுதப்பட்டன.

**மேற்சொன்ன விஷயங்களெல்லாம் இப்புத்தகத்தில் இல்லையென்று எவரேனும் நிரூபித்தால் அவருக்கு இப்புத்தகத்திற்கு வாங்கிக்கொண்ட விலையை யாதொரு ஆக்ஷேபனையின்றி திருப்பிக்கொடுத்து விடப்படும். இன்னும் இதைவிட திடமாக வேறு என்ன உறுதி சோல்லலாம்?**

இப்படிப்பட்ட புகழ்வதற்குரிய மகோன்னத கிரந்தத்தை வாங்கிப்படித்து அதனால் பலனடைந்தவர்களின் அபிப்பிராயமென்ன ?

“ஒவ்வொரு மனிதனுக்கும் சுதாவாய் ஏற்பட்டிருக்கும் ஒருவித மறைந்த—கண்களுக்கு தென்படாத—அபூர்வ சக்தியால், திடசித்தம், வைராக்கியம், தன் நம்பிக்கை முதலியவற்றை இப்புத்தக உதவியால் வெகு சீக்கிரத்தில் தன் வயமாக்கிக்கொண்டு எல்லாவித சுகபோகங்களை அனுபவிக்கலாமென்றும், உலகத்தையே அடக்கி ஆளமுடியுமென்றும், மனிதனுக்குள் மறைந்திருக்கும் சர்வசக்தியை வெளிப்படுத்த இப்புத்தகம் ஒரு வழி காட்டியென்றும், இப்புத்தகம் எடைக்கு எடை பொன்விலை பெறுமென்றும்,” இன்னும் இவைபோன்ற நற்சாட்சிப் பத்திரங்கள்—பொன்போல் போற்றத்தக்க நற்சாட்சிப் பத்திரங்கள்—எமக்கு தினந்தோறும் வந்து குவிந்துகொண்டேயிருக்கின்றன.

**அதிர்ஷ்டம் உள்ள வர்கட்கே இப்புத்தகம் கிடைக்கும்! நாளை எழுதலாம் என்று காலம் தள்ளாமல் மறந்து விடுமுன் இன்றே—இப்பொழுதே—ஒரு புத்தகத்திற்கு—ஆர்டர் செய்து வாங்கிப் படித்து அதிலுள்ள இன்பத்தைக் கண்டு களி கூருங்கள் !!**

இவ்வளவு மகா புதுமையான அற்புத சக்தி—அலங்கார நடை—இனிய மொழி—முதலியவைகளுடன் கூடிய இம்மகோன்னத கிரந்தத்திற்கு ஏற்பட்டிருக்கும் விலை என்ன ?

இதற்குரிய விலையை எம்மால் மதிப்பிடமுடியாது! செல்வத்தில் மிதந்துகொண்டிருக்கும் வெள்ளைக்கார நாடாகிய மேல் நாட்டினர் இம்மாதிரி போன்ற புத்தகம் ஒன்றை பிரசுரப்படுத்தினால் அதற்கு மனம் கூசாமல், இருபது அல்லது முப்பது ரூபாய் என்று விலை வைத்துவிடுவார்கள். அப்படி அப்புத்தகம் அதிகமான விலையுள்ளதாயிருந்தாலும், லட்சக்கணக்கான புத்தகங்கள் சில மாதங்களில் விற்பனையாகிவிடும்? ஆனால், அந்தோ! நம் இந்து தேசத்தில் அம்மாதிரி விற்பனையை கனவிலும் காண்பதரிது. அதனாலன்றோ, எம்முடைய வசீகரண தந்த்ரம் பிரசுரமான ஒருமாத காலத்திற்குள் 3460 பிரதிகள் செலவாய் விட்டனவென்பது ஆச்சரியமே என்கிறோம்! ஏழை முதல் தனவந்தர் வரையில் எல்லோரும் ஜாதிமத வித்தியாசமின்றி வாங்கிப் படித்து மேலான பதவியடையவேண்டி லோகோபகாரமாய் எழுதிய இப்புத்தகத்திற்கு மிகச் சொற்பமாக ஏற்பட்ட விலை ரூபாய் இரண்டே! (தபால் செலவு 0-5-0.)

குறிப்பு:—இரண்டு புத்தகத்திற்கு ஒரே தடவையில் ஆர்டர் செய்பவர்கட்கு தபாற்செலவு இனாம் !

**எம். எஸ். ராமுலு கம்பெனி,** புத்தக வியாபாரிகள், 88, மன்னார்சாமி கோயில் தெரு, ராயபுரம், மதராஸ்.

M. S. Ramulu & Co., Book-sellers, 88, Mannarsamy koil Street, Rayapuram, Madras.

(9-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

படுவதும், ஒன்று இரண்டு தண்ணீரில் இழுத்துக்கொண்டு போகப்படுவதும், குளித்து முழுகிவிட்டு கரையில் இருக்கும்பார்ப்பனர்களும் அரிசி பருப்பு பணம் காசு கொடுத்து அவன்காலில்விழுவதுமான காரியங்கள் செய்வதும், ஆதிமுதல் அந்தம்வரை அத்தனையும் பொய்யும் ஆபாசமுமான காவேரிப்புராணம் படிக்கக் கேட்பதும் அதற்காக அந்தப் பொய்யையும் கேட்டுவிட்டு பார்ப்பானுக்கு சிலை வேஷ்டி சாமான் பணம் கொடுத்து காலில் விழுவதுமான காரியம் செய்கின்றோம். காவேரியை பெண் தெய்வமென்பதும் அதில் ஆண்கள் குளிப்பதுமான காரியம் ஆபாசமல்லவா?

### கார்த்திகை தீபம்

இனி அதற்கு அடுத்த மாதமாகிய கார்த்திகை மாதம் வந்தால் கார்த்திகை பண்டிகை என்று வீணாக ஆயிரக்கணக்கான தீபம் கொளுத்துவதின் மூலம் எண்ணெயையும், நெய்யையும் பாழாக்கி புகைப்பதும், மலைகளின் பேரில் கட்டைகளையும் விறகுகளையும் போராய்க் குவித்து அதில் நெய்யையும், வெண்ணெயையும் டின்னு டின்னாய் குடம் குடமாய் கொட்டி கொளுத்துவதும், இந்த வேடிக்கை பார்க்க திருவண்ணாமலை, திருச்செங்கோடு முதலிய மலைக்கோயில் உள்ள ஊர்களுக்கு ஜனங்கள் லட்ச லட்சமாய் பணம் செலவு செய்து ரயில் சார்ஜ் கொடுத்து நெருக்கடியில் சிக்கிக்கஷ்டப்பட்டு கண்ட ஆகாரத்தைப் புசித்து வயிற்றைக் கெடுத்துகொண்டு ஊர் வந்து சேருவதும், விளக்கு நெருப்பில் பல பெண்குழந்தைகள் துணியில் நெருப்புப்பிடித்து உடல்வெந்து சாவதும், ஆகிய காரியங்கள் இல்லாமல் அவைகளால் வேறு ஏதாவது பலன் உண்டா என்று கேட்கின்றேன். முன்போலவே இந்தப்பண்டிகை மூலமும் வருஷம் ஒன்றுக்கு இந்த நாட்டில் எவ்வளவு ரூபாய்கள் செலவாகிறது என்றும் எவ்வளவு, நேரமும் அறிவும் செலவாகின்றது. என்றும் எந்த இந்திய தேசிய பொருளாதார நிபுணர்களாவது கணக்குப்பார்த்தார்களா என்று கேட்கின்றேன்.

### வைகுண்ட ஏகாதசி பூசம்

இனி அதற்கு அடுத்த மார்கழி மாதம் வந்தால் வைகுண்ட ஏகாதசி என்று கூட்டம் கூட்டமாய் சிரங்கம் முதலிய ஊர்களுக்குப் பணம்செலவு செய்து கொண்டு போவதும், தை மாதம் வந்தால் பூசம் என்று காவடிகளைத் தூக்கிக்கொண்டு பழனி முதலிய மலைகளுக்குப் போவதும், பொய்யையும் புளுகையும் காவடிக்கதையாய்ச் சொல்வதும், அறுத்துச் சமைத்த பாம்பும் மீனும் கோழியும் உயிர் பெற்று விட்டது என்பதும், மண்ணு சக்கரையாகி விட்டது என்பதும், வெட்டித் துண்டாக்கப்பட்ட குழந்தை உயிர்பெற்றுஎழுந்து விட்டதென்பதும், இன்னும் இது போல பல பொய்களை வெட்கமில்லாமல்சொல்லுவதும், அழுக்கு குளங்களில் குளித்து அழுக்கு தண்ணீரை சாப்பிட்டு பஞ்சாமிர்தம் என்னும் ஒரு அசிங்கமான வஸ்துவை கண்டபடி சாப்பிட்டு வயிற்றுப் போக்கெடுத்து காலரா ஏற்பட்டு திரும்பிப் போகும்போது வழியில் சாவதும், சிலர் அந்த காலராவை தங்கள் தங்கள் ஊருக்குக் கொண்டு போய் பரவவிட்டு அங்குள்ளவர்களை கொல்லுவதும், அவர்கள் நதி வாய்க்கால் ஓரங்களில் குடி இருந்தால் அந்த காலரா அசிங்கம் வாய்க்கால்களில் கலந்து கரை ஓரங்களில் இருக்கும் ஊர்களிலெல்லாம் பரவி மக்கள் நூற்றுக்கணக்காக சாவதுமான் காரியங்கள் வருஷந் தோறும் நடைபெறுகின்றது. சாதாரணமாக சிரங்கம் வைகுண்ட ஏகாதசி உற்சவத்திலும், பழனி தை பூசஉற்சவத்திலுமே ஏற்பட்ட சுகாதாரக் கேடுகளால் ஒவ்வொரு வருஷமும் முதல் முதல் அங்கு காலரா உற்பத்தியாகி பிறகு இரண்டு மூன்று மாதம் தென்னாடெல்லாம் பரவி ஊரு 1-க்கு இரண்டு மூன்று ஆயிரம் பேருக்கு குறைவில்லாமல் கொள்ளை கொண்டு போகின்றது. இதன் உண்மையை ஒருவரும் அறியாமல் பேதியாயி மாரியாயி ஓங்காளியாயி ஊருக்கு ஒருகுடம் எண்ணெய்கொண்டு வந்து ஆளுக்கு அரை சண்டி கொடுத்து விட்டாள் என்று சொல்லி ஊரிலுள்ள மக்களில் சிலபாகம் செத்து காலரா தானாக ஒழிந்தபின் ஓங்காளியின் பொங்கலும் காளி பூசையும் செய்து பேதியை நிறுத்திவிட்டதாக வெட்கமில்லாமல் பேசிகொள்வதும், அன்றியும்

### கிராம தேவதை

கிராமங்களிலெல்லாம் மார்கழி, தை மாதங்களிலேயே மாரியம்மன் பண்டிகை கொண்டாடிகொண்டும்வேகாதபொங்கலும், பச்சைமாவும்,சரியாய் சுத்தம் செய்யாதவேகாத மாமிசமும் கண்டபடி புசிப்பதால் அஜீரணம், காலரா முதலிய வியாதிகள் உண்டாவதையும் பார்க்கின்றோம். பொதுவாகவே நமது நாட்டில் கூட்டம் சேர்ந்தாலே அசுத்தம் உண்டாகி வியாதிகள் ஏற்படுவதை அனுபவத்தில்பார்த்துவருகின்றோம்.

### சிவராத்திரி

இனி அதற்கடுத்த மாசி மாதம் வந்தால் சிவராத்திரி என்று கண்டபடி கிழங்கு வகைகளையும், தானியவகைகளையும், பலகாரவகைகளையும் ஒரே நாளில் செய்து அளவுக்கு மேல் தின்று குழந்தைகளையும் தின்னச்செய்து அஜீரணத்தையும் வயிற்று வலியையும் உண்டாக்கிக் கொள்வதோடு இதனால் ஏற்படும் செலவு எவ்வளவு என்பதை யாராவது யோசித்துப் பார்க்கின்றார்களா என்று கேட்கின்றோம். இப்படியே ஒவ்வொரு மாதமும் உற்சவமும் பண்டிகைகளும், விரதங்களும் சடங்குகளும் ஏற்பட்டு மொத்தத்தில் வருஷத்தில் எவ்வளவு கோடி ரூபாய்கள் செலவு, எவ்வளவு வியாதிகள் வரவு, எவ்வளவு உயிர்கள் போக்கு என்பவைகளை யார் கவனிக்கின்றார்கள். இந்த பணம் எல்லாம் தேசிய பணமல்லவா? ஏழை தேசம், தரித்திர தேசம், அடிக்கடி பஞ்சம் வரும் தேசம், வேலையில்லாமல் தொழிலில்லாமல் கூலிக்காரர்கள் கும்பல் கும்பலாய் பட்டினி கிடந்து மடிவதுடன் பெண்டு பிள்ளை குழைந்தைகளுடன் வெளி நாட்டிற்கு கூலிக்காக கப்பலேறும் தேசம் என்று சொல்லி கொண்டிருக்கின்ற நாம் எத்தனை நாட்களை, எத்தனை ரூபாய்களை, எத்தனை ஊக்கங்களை இந்தப் பாழும் அர்த்தமற்ற பொய்யான ஒரு காசுக்கும் உதவாதான நமக்கு இழிவையும் அவமானத்தையும் தருவதான பண்டிகைக்கும் உற்சவத்திற்கும் பூசைக்கும் சடங்குக்குமாக ஒவ்வொருவரும் செலவு செய்கின்றோம் என்பதை கவனித்தால் இந்த நாடு பணமில்லாத நாடா அல்லது புத்தி இல்லாத நாடா என்பது நன்றாய் விளங்கும்.

### இது யார் சூட்சி

எனவே இப்படிச்செல்லாம் சொல்வதைப் பார்த்தால் இந்த பண்டிகைகளையும் உற்சவம் முதலியவைகளையும் ஏற்படுத்தியவர்கள் எல்லோரும் அறிவில்லாதவர்களா என்கின்ற கேள்வி பிறக்கலாம். நான் அவர்களை அறிவில்லாதவர் என்று சொல்ல இஷ்டப்பட மாட்டேன். மற்றபடி போனன்றால், பெரும்பாலும்அவர்கள், சுயநலக்காரர்களும், தந்திரக்காரர்களும் அதிகார ஆசை உடையவர்களுமாயிருக்கவேண்டுமென்றே சொல்லுவேன்.

என் புத்திக்குப்பட்ட வரையில் இந்த பண்டிகை உற்சவம் முதலியவைகள் எல்லாம் புரோகிதர்களான பார்ப்பனர்களும் ஆக்ஷிகர்களான அரசர்களும் கலந்து கண்டுபிடித்து செய்த தந்திரமெனபதே எனது அபிப்பிராயம். உலகத்தில் மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் அறியாமைக்கும் கொடுமைக்கும் புரோகிதர்களும் அரசர்களுமே சேர்ந்து கூட்டுப்பொறுப்பாளர்களாவார்கள்.

சாதாரணமாக உலக சரித்திரத்தில் கொடுமைக்காரர்களும் சூழ்ச்சிக்காரர்களுமாய் இருந்தவர்களே புரோகிதர்கள் என்கின்ற உயர்ந்த ஜாதிக்காரர்களாகவும் கொள்ளைக்காரர்களும் மூர்க்கர்களுமாயிருந்தவர்களே அரசர்களாகவும் ஏற்பட்டு இருக்கிறார்கள்.

இவ்விருவர்களும் ஜனங்களை ஏய்த்து ஆதிக்கம் செலுத்த வகைகண்டு பிடிக்கவேண்டிய அவசியமுடையவர்கள்.

அந்தப்படி மக்கள்மீது ஆதிக்கம் செலுத்தி வாழவேண்டுமானால், அந்த மக்களை அறிவினாலும் செல்வத்தினாலும் தாழ்மைப் படுத்தி வைத்திருந்தால்தான் முடியும். ஒரு மனிதன் அறிவுடையவனாயிருப்பானானால் புரோகிதனுக்கு ஏமாற மாட்டான் செல்வமிருக்குமானால் அரசனுக்கு பயப்பட மாட்டான். ஆகையால் அறிவும் செல்வமும் இல்லாமல் செய்வதற்கே கோயில் உற்சவம் பண்டிகை சடங்கு ஆகியதான செலவுக்கு ஏற்ற வழிகளை ஏற்படுத்தி இருக்கிறார்கள். மக்கள் சம்பாதிக்கும் பணங்களில் கணக்குப் பார்த்தால் பெரும்பாகமும் இவைகளுக்கே செலவு செய்யும்படியாகவும் மேல்கொண்டுமீதிஆவதெல்லாம் இவர்கள் சமூகத்திற்கே பயன்படும்படியாகவும் மற்றும் மேல்கொண்டு ஒவ்வொரு குடும்பமும் அதாவது நூற்றுக்கு தொண்ணூறு குடும்பங்கள் இவைகளின் பயனாய் கடன்காரர்களாக இருக்கவுமே இருந்து வரப்படுகின்றது. எனவே நமது நாடு என்றைக்காவது அறிவுள்ள நாடாகவும், செல்வமுள்ள நாடாகவும், சுயமரியாதை உள்ள நாடாகவும் இருக்க வேண்டுமானால் முதலில் உற்சவம், பண்டிகை, சடங்கு, கோயில் பூசை ஆகியவைகள் ஒழிந்தாகவேண்டும். இவைகளை வைத்துக்கொண்டு மலைகளை எல்லாம் தங்கமும் வைரமுமாக வாங்கினாலும் சமுத்திரங்களையெல்லாம் பாலும் நெய்யும் தேனுமாக ஆக்கினாலும் மேல் கண்ட உற்சவம் சடங்கு கோவில் பூசை பண்டிகை ஆகியவைகளே சாப்பிட்டு விடும். ஆதலால் இனிமேலாவது இம்மாதிரியான காரியங்களுக்கு அடிமையாகி வீண் செலவு செய்யக்கூடாது என்பதே எனது ஆசை என்று பேசி விட்டு செல்லூர் மகாநாட்டைப்பற்றியும் அரை மணி நேரம் பேசினார். பிறகு திருமதி ரங்கம்மாள் அவர்கள் மேல் கூறிய விஷயங்களை அநுசரித்து சில வார்த்தைகள் பேச தலைவர் திருமதி லக்ஷ்மி அம்மாள் அவர்கள் முடிவுரை கூற திரு. மாரியம்மாள் வந்தன உபசாரம்சொல்லசபை இரவு 9 மணிக்கு இனிது முடிந்தது.


## இனாம் !

கிளேஸ் பேப்பரில் இரண்டு கலரில் அச்சிட்ட, தமிழ் இங்கிலீஷ் தெய்திகளடங்கிய 1930-ம் வருஷத்து காலண்டர் இனாம். விலாசம் தெளிவாய் எழுதவும்.

சரஸ்வதி அன் கோ.,
கோவில்பட்டி, S. I. Ry.

நறுமணம்! பெருங்குணம்!!
காப்பிக் குடியை ஒழிக்கும்

## றேப்பி பவுடர்

Registered No (3108)

டலஹீனம், தாகம், உஷ்ணம், பித்தம், மலக் கட்டு இவைகளை நீக்கிப் புஷ்டியைத் தருவதில் நிகரற்றது. வி. பி. வேறு. அயல் நாட்டுக்கு முன் பணம்.

| | | | | |
|---|---|---|---|---|
| ½ சோர் டின் 3, | ரூ. | 1 | 0 | 0 |
| டஜன் ½ | ரூ. | 1 | 12 | 0 |
| ¼ பவுண்டு டஜன் 1, | | 3 | 0 | 0 |

S. V. ராஜப்டா,
றேப்பி பாக்டரி, பழனி, S. I.

# புராண ஆபாசங்கள்

## மாறுவேடம் பூண்டு புராண ஆபாசத்தை வெளியாக்கும் இரு இளைஞர்கள்

[தரும பரீக்ஷை என்னும் பண்டைய ஓலைச் சுவடியிற் கண்டது]

(முன் தொடர்ச்சி)

நான்காம் நாள்

சன்மார்க்க சீலர்கள், சகல கலா வல்லவர்கள், பொதுஜன ஊழியர்களான மனோவேகன் வாயுவேகன் இருவரும் நான்காம் நாள் சடைதாரிகளாகி பாடலீபுரத்து மேற்கு கோபுர வாயிலாக பிரம்மாலயம்புக்கு பேரிகை கொட்டி சிம்மாதனத்தில் வீற்றிருந்தார்கள். பட்டின முழுமையும் சப்தம் கேட்டு பாமர ஜனங்களும் பார்ப்பன வித்வாம்சர்களும் வந்து சேர்ந்தார்கள். இரண்டு மூன்று நாளாய் தோல்வியடைந்த பிராமணர்கள் இன்று வந்துள்ள ரிஷிகளைக் கண்டவுடன் மனதில் பயமதிகரித்து இன்றாகட சரியான ஆசாமிகளாகத் தானிருக்கிறார்கள், எவ்வாறாயினும் இவர்களை ஜெயித்தாலன்றி நமக்குக் கௌரவம் வாராதென்றுறுதி விப்பிரர்கள் எழுந்து "ஹே ரிஷிகளே! எங்களை வாதத்தில் ஜெயிக்காமல் சிம்மாதனத்திலமர்வதும் பேரிகை அடிப்பதும் இவ்விடத்து நீதிக்கு விரோதமாகும். உங்களுக்கு தீட்சை பண்ணிவைத்த குரு யார்? உங்களால் எங்களை வாதத்தில் வெல்ல முடியுமா? கூறுங்கள்" என்றனர். உடனே போலி வேடதாரிகளான மனோவேகன் வாயுவேகனிருவரும் சிம்மாசனத்தை விட்டிறங்கி "எங்களுக்கு குரு யாருமில்லை, எங்கள் தபசின் விருத்தாந்தம் சொன்னால் பித்த சுரமுள்ளவர்களுக்குப் பாலும் சர்க்கரையும் கலந்து கொடுத்தால் உட்கொள்ளுவார்களா? அது போன்றே எங்கள் விருத்தாந்தம், உங்களுக்குப் பிடிக்காது. வாதம் பண்ணவேண்டுமானால் ஏதோ சிறிது செய்யத் தயாராக இருக்கிறோம் என்றனர். இதைக் கேட்ட விப்பிரர்கள் வாதம் ஆரம்பிப்பதற்கு முன் உங்கள் முழு விருத்தாந்தம் இந்தச் சபையாருக்கு அறிவிக்கப்படவேண்டும். ஆகையால் உங்கள் விருத்தாந்தங்களைச் சொல்லுங்களென்றனர். உடனே மனோவேகன் எழுந்து சொல்லுகிறான்.

"அயோதபுரமென்னும் நகரத்தில் தனதத்தனென்கிற வைசியருக்குத் தேவதத்தை என்கிற அழகிய பெண் இருந்தாள். அவளை அநேக வைசிய வாலிபர்கள் மணக்க ஆவல்கொண்டு கடையாக சுதத்தனென்கிற ஒரு வைசியருக்கு மணமுடிக்க ஏற்பாடாகி முகூர்த்தத்தினன்று அவ்வூர் அரசனுடைய பட்டத்து யானை மதங்கொண்டு கர்ஜித்து ஜனங்களைத் துரத்தியடிக்க அதைக்கண்டு பயந்தோடும் ஜனங்களுடன் முகூர்த்த பந்தலிலுள்ளவர்களும், மணமகனும் மணமகளும் ஓடும்போது கணவன் காம மனைவியின் வயிற்றில் பட அம்மணமகள் அதுவே கர்ப்பமாயினாள். அப்போது கர்ப்பமாயிருந்த தேவதத்தை தன் தாய் வீட்டில் நவமாசபரிபூரணமாகியிருக்குங்காலத்தில் தட்சணத்திலிருந்து சில யாத்ரீகர்கள் அவள் வீட்டுத் திண்ணையில் வந்தமர்ந்தார்கள். அப்பொழுது தேவதத்தை யாத்ரீகர்களைக்கண்டு நீங்கள் யார்? எவ்விடத்து வந்தீர்கள்? எங்குபோகின்றீர்கள்? என்று வினவினாள். அதற்கவர்கள், நாங்கள் தட்சணதேசத்திலிருந்து வந்தோம்; அங்குப் பஞ்ச காலம் வந்துவிட்டபடியால் வடக்கே போகின்றோம் என்றார்கள். ஆனால், இவ்வூரிலேயே இருங்கள் என்று அவ்வம்மைப் பகர்ந்தனள். அதற்கவர்கள், "இவ்விடத்தும் பஞ்சம் வரப்போகின்றது, அது பன்னிரண்டு வருஷம் நீடித்திருக்கும், ஆகையால் நாங்கள் இன்னும் வடக்கே போய் விடுகின்றோம்" என்றனர்.

அதைக்கேட்ட தேவதத்தை "நீங்கள் பன்னிரண்டு வருஷமும் எங்கள் வீட்டிலேயே இருங்கள், நாங்கள் காப்பாற்றுகின்றோம்" என்றனள். அவர்களும் அவ்வாறே சம்மதித்தனர். இந்த விருத்தாந்தத்தைக் கேட்டிருந்த அவள் வயிற்றிலுள்ள இரு குழந்தைகளும் பஞ்சத்திற்குப் பயந்து, பன்னிரண்டு வருஷமும் வயிற்றிலேயே தங்கி பஞ்சம் நீங்கி யாத்ரீகர்கள் விடைபெற்றுக்கொண்டு போனவுடன் அவ்விரண்டும் வாயினால் ஜெனித்து தாயினுடைய மயிரை பிடித்துக்கொண்டு போஜனமளிக்கச் சொல்லிச் சிரசைக்கடித்தன. இதைக்கண்ட தாயார் ராக்ஷஸக் குழந்தைகளென்று பயந்து ஓடிவிட்டாள். பட்டினத்திலுள்ள மற்ற ஜனங்களும் அவர்களை துரத்தியடித்தார்கள். அவர்கள் ஊரைவிட்டு ஓடி, தலை மயிருக்குத் தைலமின்றி கட்டுத்துணியின்றி ஜடாதாரியாகவும் கௌபீனதாரியாகவும் சுற்றினார்கள். அந்த இருபிள்ளைகள் தாம் நாங்கள். எங்கள் மாதா பிதாக்களுக்கு விவாகமானமையால் அதைபார்த்து விட்டு இப்போது இங்கு வந்தோம். இது தான் எங்கள் தபசுக்குக்காரணம்" என்றனன். இதைக்கேட்ட விப்பிரர்களும் பொது ஜனங்களும் ஒருவர்க்கொருவர் பார்ப்பவரும் மூக்கின் மேல் கையை வைத்துக்கொண்டு கலகலவென்று நகைப்பவரும், கை கொட்டுபவர்களுமாய் ஆச்சரியமுற்றார்கள். விப்பிரர்கள், "ஐயா தபசர்களே! உங்கள் புளுகுக்குச் சடைபுளுகு என்றுபெயரா? திடீர்புளுகாயிருக்கிறதே! சொல்லுபவர் சொன்னாலும் கேட்பவருக்கு மதியில்லையா? என்றபடி எங்களை மதியீனர்களென்று நினைத்து விட்டீர்களா? உங்கள் வார்த்தைகளில் ஒரு சத்தியம் கூட காண முடியவில்லையே? புருஷனுடைய காம ஸ்திரீயின்மேல் பட கர்ப்பமாவதும், கர்ப்பத்திலிருந்த சிசு க்ஷாமங்கேட்டு பயந்து பன்னிரண்டுவருடம் கர்ப்பத்திலேயே தங்குவதும், பிற்பாடுவாயினால் பிறப்பதும் உடனே தாயாரை ஆகாரங் கேட்பதும் முதலாகிய அண்டப் புளுகுகள் யார் சொல்லுவார்கள்; யார் நம்புவார்கள் என்று நகைத்தனர்கள்.

ஐயா விப்பிரர்களே! உங்கள் மத புராணங்களில் இத்தகைய அபத்தங்கள் ஒன்றுமில்லையோ? சொன்னால் அப்பொழுதாவது நம்புவீர்களா? கேளுங்கள்; என்று மனோவேகன் சொல்லுகிறான் :- அயோத்திமா நகரின் சகன் ஜீரிதரஸ் என்ற அரசனுடைய தங்கைமார்களிருவரும் ஒருவரோடொருவர் அணைத்துக் கொண்டு நித்திரை செய்கையில் ஒருவளுக்கு அதுவே கர்ப்பமாகி லோகப்பிரசித்தமான பகீரதன் ஜனித்தான் என்றும், சௌரிய புராதிபதி அந்தகவிருஷ்ணியின் சகோதரனுடைய புத்ரி காந்தாரியை திருதராஷ்டிரனுக்குக் கொடுக்க அவளும் இஷ்ட விஷயகாம போகங்களை அனுபவித்து வருகையில் ஒரு நாள் வீட்டுவிலக்காகி (மாதாந்தர ருது) நான்காம் நாள் ஸ்நானத்திற்கு வனப்ரதேசம் வருகையில் திருதராஷ்டிரனை நினைத்து அங்குள்ள ஒரு விருக்ஷத்தை ஆலிங்கனம் செய்ய அவளுக்கு அதுவே கர்ப்பமாகி வமாதஞ்சென்று துரியோதனாதிகள் பிறந்ததாக உங்கள் மத புராணத்தில் கூறப்பட்டிருக்கவில்லையா? மரத்தை ஆலிங்கித்து மக்களைப் பெறும்போது புருஷன் கைமனைவி பேரில் பட்டு எங்கள் மாதா எங்களை பெற்றிருக்க மாட்டாளா? (பிறக்கலாம் என்ற இரைச்சல்)

இதைக்கேட்ட விப்பிரர்கள் மிரள மிரள விழித்துக்கொண்டிருக்க அங்குள்ள ஜனங்கள் அம்மாதிரியான கதைகள் நிறையயிருக்கின்றன. பாவம் பிராமணோத்தமர்கள் தங்கள் தோல்விக்காக வெட்க முறுகிறார்கள் என்று ஊத்திக் கூவினார்கள். உடனே பிராமணர்கள் எழுந்து இது வரை சொன்னவைகள் அவசியம் உண்டு இல்லையென்று மறுக்கவில்லை. கர்ப்பத்திலிருக்கும் சிசு வெளியில் நடக்கும் சமபாஷணைகளைக் கேட்டது என்பது எவ்வாறு பொருந்துமென்று வினவினார்கள்.

மனோவேகன், "சரி; உங்கள் சர்வ வல்லமையுள்ள நாராயணன் கிருஷ்ணாவதாரத்தில் தன் தங்கை சுபத்திரையை அர்ச்சுனனுக்கு விவாகஞ் செய்துகொடுத்து அவள் கர்ப்பிணியாகி வீட்டிற்கு அழைத்து வரப்பட்டபின் கர்ப்பவேதனையால் அவள் கஷ்டப்பட, அப்பொழுது கிருஷ்ணன் சக்கிரவியூக விருத்தாந்தத்தைச் சொல்லிக்கொண்டுவர, அவளும் ஆவலுடன் கேட்டு கர்ப்பநோய் தெரியாது தன்னை மறந்து நித்திரையில் ஆழ்ந்திருந்தாள் அப்பொழுது அவள் வயிற்றிலிருந்து சிசுதாய்க்குப்பதிலாக "ஊம் ஊம்" என்று கதைக்கேட்டு உற்பத்தியாயிற்று. அவனே அபிமன்யு குமாரன் என்று கூறப்பட்டிருக்கிறதே. நாங்கள் சப்தஞ் செய்யாமல் சங்கதியை மாத்திரம் கேட்டிருந்தோமென்றால், எங்களைப் பொய்யரென்கிறீர்களே" என்றான். ஜனங்கள் ஆமாம் ஆமாம் நேற்று கடைத்தெரு பாரதத்தில்கூட இக்கதை விஸ்தாரமாக சொல்லப்பட்டது என்று இரைச்சலிட்டனர். விப்பிரர்கள் ஒன்றும் சொல்ல முடியாமல் சற்றுநேரம் யோசித்து, "சரி ரிஷிகளே! கர்ப்பத்தில் பன்னிரண்டு வருஷம் இருந்ததாக பகர்ந்தீர்களே! இது உண்மையா? இதற்குப் பதிலுரைக்காவிடில் உங்களை ஊரைவிட்டு ஓட்டிவிடுவோம் என்று கோபாவேசத்துடன் கேட்டனர். மனோவேகனும் புன்சிரிப்புடன் "ஓ பிராமணோத்தமர்களே! எங்களுடைய கொள்கையை நீங்கள் அறியமாட்டீர்கள். உங்களிடத்தில் தோல்வியடைந்தால் உயிரை விட்டுவிடுவது என்று உறுதிகொண்டு இருக்கின்றோம். எங்களை நீங்கள் ஊரை விட்டு ஓட்டு முன் நாங்கள் உடலை விட்டு ஓடுவோம். சோபமின்றி சாந்தமாகக் கேளுங்கள் மயனென்ற ஓர் தாபசன் நித்திரை செய்யுங் காலத்தில் இந்திரியம் ஸ்கலிதமாகி கௌபீனம் நனைந்தபோது அதை அங்குள்ள ஒரு தடாகத்துத்தண்ணீரில் கசக்கிப் பிழிய அந்த இந்திரியத்தை ஒரு மண்டூகம் புசிக்க அதுகர்ப்பமாகி மானிடப் பெண்ணைப் பிறக்க அது கண்ட மண்டூகம் அப்பெண்ணைகண்டுபயந்து கமலபுஷ்பத்தின் மத்தியில் விட்டு விட்டுப்போய் விட்டது. அக்குழந்தை நாலா திக்குகளிலேயும் பார்த்து திகைத்துக்கொண்டிருக்க, அச்சமயம் அந்த ரிஷி சந்தியாவந்தனத்திற்கு வர, அங்குள்ள பெண்குழந்தையைக் கண்டு அது தன்னுடைய இந்திரியத்தால் பிறந்த குழந்தையென்றறிந்து எடுத்துக் கொண்டுபோய் மண்டோதரியென்று நாமமிட்டு வளர்த்துவந்தார். ஒருநாள் ரிஷிக்கு இந்திரியம் ஸ்கலிதமாகி கௌபீனத்தில் பட அதை அவிழ்ந்து செடியின்பேரில் போட்டுவிட்டு வேறொரு துண்டை கட்டிக்கொண்டு தபசிலிருக்க, அந்தப்பெண் செடியிலிருந்த கௌபீனத்தை எடுத்துக் கட்டிக்கொண்டதால் இந்திரியம் ஒட்டிக் கர்ப்பமாயினாள். அவள் கர்ப்பமானதை யறிந்த ரிஷி அது சிந்தையாகுமென்று 700 வருஷம் கர்ப்பத்தை ஸ்தம்பித்தனர். பிறகு இலங்காபுரி மன்னனாகிய இராவணேஸ்வரனுக்கு மணம் புரிவித்து அனுபவ இருவரும் சுகபோகங்களை அனுபவித்து 700 வருஷமாக தங்கியிருந்த கர்ப்பம் பிரசவமாகி புத்திரனைப் பெற்றுக் கக்கவும் இந்திரஜித்து என்ற நாமம்

கொடுத்தார்கள். அப்பிள்ளை 700 வருஷமாக மாதாவயிற்றில் தங்கி இருந்ததென்றால் நாங்கள் பன்னிரண்டு வருஷம் தங்கியிருக்கக்கூடாதா? கூறுங்கள். எங்களை எப்படிப் பொய்யரென்றும் புகலலாம்'' என்றனன். உடனே விப்பிரர்கள் நாழிகையாய் விட்டது, இனி நாளைக்கு வாதிக்கலாம் என்று எழுந்தனர். அங்குள்ள ஜனங்கள் கூடாது கூடாது இன்னும் மூன்று கேள்விகள் தாம் இருக்கின்றன. அதையும் வாதித்து விடுங்கள். இப்போது சபை கலையக்கூடாது என்று ஆக்ஷேபித்தனர் விப்பிரர்கள் ஒன்றும் பேச முடியாமல் எழுந்து மனோவேகனைப்பார்த்து கூறினதாவது:-ஐயா! ரிஷிகளே! வாயினால் பிறந்தோமென்பதும், பிறந்ததும் தாயை ஆகாரங் கேட்டதென்பதும், பிள்ளையிருக்கத்தாய்க்குக்கலியாணமாயிற்றென்பதாகிய மூன்று அபத்தங்களுக்கும் தக்க சமாதானம் கூறுங்கள்'' என்றனர்.

மனோவேகனும்வரிசையாகச்சொல்ல ஆரம்பித்தான்:-

1. ''வாயினால் பிறந்தனம் என்பதை பொய்யென்று புகலும்நீங்கள், உங்கள் புராணத்தில் குந்தியினுடைய ஜேஷ்டப்புத்திரன் கன்னத்தினால் பிறந்தான் என்பதை நம்பும்போது நாங்கள் வாயினால் பிறக்கக் கூடாதா?

2. பிறந்ததும் தாயாரை இரசைக் கடித்து ஆகாரங்கேட்டதென்பதற்கும், உங்கள் புராணத்தில் பராசரமுனி கங்கையிலிறங்கி நீந்தி ஓடக்காரனைத் தேடுகையில் அங்கே ஓடக்காரனின்புத்திரியைக்கண்டு மோகித்தானாக அவளை அழைக்க அவள், ''நான் ஈனக்குலத்தாள்நீரோ உயர்ந்த குலத்தார். ஆகையினால் இது தகாதென'' பராசரும் ''காமத்திற்குக்கண்ணில்லை. வந்து கூடுவாயானால் உனக்கு அநேக நன்மையை செய்வேன் பயப்படாமல் வா'' என்று அழைக்க அவளும் அருகில் வந்தனள். உடனே பராசரன் அவளை அணைக்குந் தருவாயில் அவள் சரீரத்தில் பரிமளம் வீசுவதைக் கண்ட அப் பெண் இம்மாதிரியான பரிமளம் என் தேகத்திற்கு உண்டானால் கூடுவேன் என்றனள். உடனே பராசரும் அவ்வாறே பரிமள முண்டாக்கி அதில் இருவருஞ் சுகித்திருக்கையில் உடனே நவமாச கர்ப்பபூர்த்தியாகி ஜடை, கௌபீனத்தோடு கூடிய வியாசன் பிறந்து பராசரனைப் பிடித்துக் கொண்டு அப்பனே எனக்கு பிழைப்பருள்வாய் என்று கேட்க, பராசரும் என்னைப் போன்று ரிஷியாக இரு என்று விடையளித்ததாக கூறப்பட்டில்லையா?

3. தனயனிருக்கும்போது தாய் கன்னிகையாக விருந்தாளென்பதற்கு உஹூஹ முனியென்பான் கங்கையில் ஸ்நானஞ் செய்து இந்திரியம் ஸ்கலிதமாக தன் கௌபீனத்தை ஒரு தாமரை புஷ்பத்தில் பிழிய, அதை சுபோத்யா புராஜிபதியான ரகுவின்புத்ரி சந்திரமதி இந்திரியந்தங்கிஇருந்தக் கமலபுஷ்பத்தைப்புசிக்க அதுவே கர்ப்பமாகிவிட, வீட்டிலுள்ள தாய் தந்தையர்கள் அறிந்து காரணம் விசாரிக்க அப்பெண் பயந்தவளாகி ''நான்யாருடனும் கூடினதில்லை. ஒரு கமல புஷ்பத்தைப் புசித்தேன். அன்று முதலே இந்த விபரீதம் விளைந்ததெ''ன்று அழுதனள். இதைக் கண்ட அரசன் இரகசியமாக காப்பாற்றி நவமாசமானவுடன் பெற்ற பிள்ளையை வீட்டிலேயே வளர்த்து வந்தான். இவ்வாறாக ஒருநாள் உஹூஹமுனி அவ்வீட்டிற்கு பிக்ஷைக்கு வந்து அப்பிள்ளையைப்பார்த்துத் தன் இந்திரியத்திற்குப் பிறந்தவனென்றறிந்து உண்மையை அரசனாகிய ரகு ராஜனிடத்தில் உரைத்து, அப்பெண்ணை விவாகஞ் செய்துகொண்டானென்றும் உங்கள் முழுப்புரட்டு புராணத்திலிருக்க எங்களை அபத்தர்களென்று கூறுகின்றீர்களே!'' என்று முடித்தனன். இதைக்கேட்டுக்கொண்டிருந்த விப்பிரர்கள் ஒருவர் பின் ஒருவராக நழுவி விட்டார்கள். பொது ஜனங்கள் இவர்களைப் புகழ்ந்து ஜெயவாதிகளென்று சிறப்பித்து சிம்மாசனத்திலமர வைத்துக்கொண்டாடி தங்கள் தங்கள் இல்லம்போய்ச் சேர்ந்தார்கள். (தொடரும்)


வெளியாகி விட்டது! வெளியாகி விட்டது!

## சாமிகளின் அடிமைகள்

சாமிகளின் அடிமைகள் என்னும் மொழி பெயர்ப்பு நூல் இப்பொழுது விற்பனைக்குத் தயாராய் உள்ளது. இதன் விலை 1-8-0 ரூபாய் என்று நாம் குறிப்பிட்டிருந்தோம். ஆனால் பலர் இவ்விலையைச் சிறிது குறைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டதின் பேரில் நாம் பிரதி ஒன்றை 12 அணாவிற்கே கொடுப்பதாக உத்தேசித்துள்ளோம்.

விலை ரூபாய் 0—12—0.

திராவிடன் புத்தகாலயம்,

14, பௌன்டட் ரோட், சென்னை.

தனிப்பிரதி விரும்புவோர் 14-அணா காலணா ஸ்டாம்பு அனுப்பவும்.


## வேற்றுமை விருக்ஷம் வேரோடு வீழ்க!


அசல்

## தாம்பர பஸ்பம்

மூன்றே வேளையில் குணம் தெரியும்.

குணமில்லாவிடில் பணம் வாபீஸ்.

கொடிய ரோகமாயிருந்தபோதிலும் சரியே நமது அசல் தாம்பர பஸ்பத்தை 12 நாள் சாப்பிட்டால் போதுமானது. மற்ற மருந்துகளைப்போல் நம்பிக்கையில்லாமல் நினைத்து தருவித்து சாப்பிடாமல் நோயால் கஷ்டப்படாதீர்கள். நம்பிக்கையுடன் தருவித்து சாப்பிட்டு குணத்தை அடையுங்கள். நிச்சயமாய் குணமுண்டாகும்.

சாப்பிடுங்கள்; கைகண்ட மருந்து.

குஷ்டம், குறை நோய், தடிப்பு, திமிர், மதமதப்பு, செம்மேகப் பற்று, கருமேகப் பற்று, கருங் குஷ்டம், வெண் குஷ்டம், அரிப்பு, நமைச்சல், கிரந்தி, ஆறாத ரணங்கள், குழிப்புண்-புரை, கண்டமாலை, பவுத்திரம், கன்னப் புற்று, யோனிப் புற்று, குன்மம், சூலை முதலிய கொடிய வியாதிகளும், தீராதென கைவிடப்பட்ட இதர நோய்களும் அவசியம் குணமாகின்றன.

### உங்கள் கவலை தீர்ந்துவிட்டது!

உங்களைப்போலிருந்து கவலை ஒழித்த மனிதன் கூறுவதைக் கவனியுங்கள்:—

**நற்சாக்ஷி:** கோலாலம்பூர், கண்டக்கர்பு ரோட்டு, பஜனை மடம், ஸ்கூல்மாஸ்டர், எல். குழந்தைசாமி பிள்ளை 31-10-1928-ல் எழுதுவதை பாருங்கள்:—

ஐயா, தாங்களனுப்பிய தாம்பர பஸ்பத்தை 12 நாள் என் மகனுக்குக் கொடுத்ததில் வளைந்திருந்த விரல்கள் நிமிர்ந்துவிட்டன. நெருப்புப் பட்டபோதிலும் தெரியாமல் சொரணையற்றிருந்த இடங்களில் சொரணையும் கை விரல்களில் கெட்டியும் உண்டாகிவிட்டது.

12 நாள் சாப்பிடக்கூடிய அனுபானம் உள்பட ரூ. 15—0—0.

ஆரண்மனை வைத்தியர் S. T. மாணிக்கம் பிள்ளை,

ஆயக்குடி போஸ்டு, (Via.) திண்டுக்கல் S. I. R.

குறிப்பு:—நம்மிடம் சகல வியாதிகளுக்கும் உயர்ந்த மருந்துகளிருக்கின்றன. மலாய் நாட்டுவாசிகள் மருந்துக்கு ஆர்டர் செய்யும் போது ரூபா 5 அட்வான்சு அனுப்பவேண்டும்.

(49)

(4-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

தேடச் செய்தவன். இத்தகைய கொடும் பாவியினிடத்தில் கருணையையாவது இரக்கத்தையாவது அன்பையாவது பெருந்தன்மையையாவது எவ்வாறு எதிர்பார்க்க முடியும் என அங்கதன் வினவுகிறான். இவ்வளவையும் கூறி அழுது தன்னால் கிட்கிந்தைக்கு வர முடியாதெனப்பகன்று உயிர்விடத்துணிகிறான் அங்கதன்.

இத்தனையையும் கேட்ட மாத்திரத்தில் வானரர்களெல்லோரும் மெய்மைக்குக்கட்டுப்பட்டவர்களாகி அங்கதனோடு இறக்கத்துணிகின்றனர். அவர்கள்வாலியை வாயாரப்புகழ்ந்து வாழ்த்தி சுக்கிரீவனைப்பலவாறு இகழ்ந்து பேசுகின்றனர். உண்மையே என்றும் நின்று நிலவுமல்லவா? அனுமான் செய்தசூழ்ச்சிகளெல்லாம் பயனில்லாதன ஆயின. இதனால் வானரவீரர்கள் வாலியிடத்தில் எவ்வளவு அன்பும் பற்றும் கொண்டிருந்தனரென்பதும் அவர்கள் சுக்கிரீவனை எவ்வளவு தூரம் வெறுத்தார்களென்பதும்வாலி அன்பும் அறனும் அருளும்கொண்டுசெங்கோலோச்சிய மெய்யரசன் என்பதும் தெளிவாக விளங்குகிறது.

அங்கதன் தான் எவ்வளவு தூரம் சுக்கிரீவனை வெறுத்தான் என்பதை வெளிப்படையாகக் கூறுகின்றனன். அதனால்தான் கிட்கிந்தைக்கு வந்தால் சுக்கிரீவன் கட்டாயம்கொன்று விடுவானென அஞ்சுகின்றனன். சம்பாதியைக் கண்ட பின்னர் அங்கதன் அனுமானிடம், "சடாயு இறந்தனன். அதனால் சுக்கிரீவனுடைய பயத்தினின்றும் நீங்கினோம்" என்று கூறுகிறான். இதனாலும் சுக்கிரீவனுடைய தீக்குணம் வலியுறுகின்றது. மேலும் சுக்கிரீவன் காட்டில் வாழும் உயிர்ப் பிராணிகளை யெல்லாம் துன்புறுத்தி வந்தனனென்ற உண்மையும் புலனாகிறது.

சம்பாதி வானரர்களை யெல்லாம் பிடித்துத் தின்னத்துணிகின்றது. இது சடாயுவினுடைய அண்ணன்; இவர்கள் அருணனுடைய பிள்ளைகளாம்! இவ்வாறு உயிர்க்கொலை சால்புடைத் தென்று திரிந்த பறவைகள் அருளுடைய மக்களினும் அன்போடு நடந்தன எனக்கூறுவது பொய்புரையாவது மன்றி வியப்புரையுமாகின்றது! இனி கம்பருடைய புரளியை வெளிப்படுத்துவோம்:—

கம்பர் தமது இயற்கைக் கொப்ப மேலே கண்டவரலாறு முழுவதையுமே மாற்றி விடுகிறார்.

வானரர் குகையிலிருந்து வெளி வந்தவுடன் தெற்குப் பெருங் கடலை கண்டனரென வால்மீகி கூறுகிறார். கம்பரோ அவர்கள் வெளி வந்த பின் அரக்கனால் தாங்கும்போது எதிர்க்கப்பட்டு பெண்ணைநாடு, விதர்ப்ப நாடு, தண்டகாரணியம், முண்டகத்துறை பாண்டுகிரி இவைகளிலெல்லாம் சீதையைத் தேடிக் காணாமல் கோதாவரியை அடைந்தனரென்றும் பின் சுவரைத் துறை அருந்ததிமலை வேங்கடமலை தொண்டைநாடு சோழநாடு தமிழ் நாடு இவைகளில் எல்லாம் காணாமல் மகேந்திர மலையை அடைந்து கடல் கண்டனரென்றும், அங்கே குகை புகுமுன் பிரிந்தனுப்பிய வானரச் சேனை அவர்களை வந்து சேர்ந்ததென்றும் விரித்து ஆறு செல் படலமெனவே ஒரு படலம் பாடியிருக்கிறார். சுக்கிரீவன் தென் திசை வழிபற்றி விரித்துரைத்ததாக வால்மீகி கூறுவனவற்றை உண்மையில் வானரர் போகவில்லையானாலும் போனதாக வைத்துக் கொண்டு தாம் பாட வேண்டுமென்றும் விருப்பால் பாடினார் கம்பர் என்றாலும் வால்மீகி போக்கில் அவர் போய்த் தமது விருப்பத்தை முன்னேற்ற சுக்கிரீவன் கூறினனென விரித்துரைத்திருக்கலாம் அவ்வாறும் அவர் செய்தாரல்லர். மேலும் கம்பரும் வால்மீகியும் தெற்கு நோக்கிப் போவாருக்குக் கூறியவழிவிவரம் பிழைபாடுடையதாகவே காணப்படுகிறது: ஏனெனில் இராமன் சீதையை இழந்தது பஞ்சவடியிலே. பஞ்சவடியோகோதாவரிநதிக்கரையிலிருந்தது அவ்வாற்றில்இராமன்பலமுறைசீதையுடன்சென்றுநீர் விளையாடினனென்றுமசீதையைப் பிரிந்தபின் இலக்குவன் அவளை அவ்வற்றின்கரையிலெல்லாம் போய்த்தேடிவந்தானென்றும், அதன் பின்னர் இராமனும் இலக்குவனும் சீதையைத் தேடித்தெற்கு நோக்கியே வந்து கிட்கிந்தையை அடைந்தனரெனவும் படித்துளோம். இங்ஙனமிருக்க, கோதாவரிக்குஎவ்வளவோதெற்கேயிருந்தகிட்கிந்தையிலிருந்துகொண்டு சுக்கிரீவன் கோதாவரிக்கும் வெகுதூரம் வடக்கேயிருந்த பல இடங்களையும் கூறி, கோதாவரியையும் கூறிப்பின் தெற்குப்பக்கங்களை விவரித்தனனென வால்மீகி கூறுவதும் கம்பரும்அவ்வாறே விவரிப்பதும் எங்ஙனம் பொருந்தும்? அறிஞர் இதனைச் சிந்திப்பார்களாக. சுக்கிரீவனுடையவெறுக்கத்தக்கதீச்செயல்களை யெல்லாம்விரித்துரைத்து அங்கதன் இறக்கத்துணிந்ததையும்வானரர் சுக்கிரீவனைஇகழ்ந்தமையையும் அனுமான்செய்தசூழ்ச்சிகளையும் பின்னர் அங்கதன் மிக விரிவாகச் சுக்கிரீவனுடையதீயதன்மைகளை எடுத்தோதி இறக்க முன்வந்ததையும், வானரர் அனைவரும் வாலியைப் புகழ்ந்து சுக்கிரீவனை இகழ்ந்து அங்கதனோடு இறக்கத் துணிந்ததையும் கம்பர் முற்றிலும் மறைத்துவிட்டார். சுக்கிரீவனை மிகவும் நல்லவனாகக் காட்டும் நோக்கத்தில் முனைந்து நிற்கும் கம்பர் இவ்வரலாற்றை எவ்வாறு கூறுவார்? அதனால் அவர் இவைகளையெல்லாம் மறைத்ததோடு அங்கதன் முதலியோர் சுக்கிரீவனுடையோரிடம் மெய்யன்புடையவர்போல் நடந்ததாகவும் அவர் புதுக்கதை கட்டுகிறார். அது வருமாறு:—

"சீதையைக் கண்டு பிடித்துத் தம் வாக்குறுதியை நிறைவேற்றாமல் திரும்பிக் கிட்கிந்தை போதவில்லை" என வானரர் தமது உயிரைவிடத் துணிகின்றனர். அங்கதன் அவர்களோடு இசைந்து தன்னுயிரைவிடத் துணிகிறான். (இந்த இடத்தில் கம்பர் அங்கதன் கூறியதாக "எந்தையும் முனியும்" எனக்கூறுகிறார். இது வெறுப்பால் கூறியதாகாமல் உண்மையன்போடும் பற்றுதலோடு இதனைக் கூறியதாகவே கூறுகிறார்). சாம்பவன் அங்கதனைத் தடுத்து தாம் எல்லோரும்உயிர்விட்ட செய்தியைக் கிட்கிந்தையில் சென்று சொல்லும்படி வேண்டுகின்றான். ஆனால் அங்கதனோ "நீங்களெல்லோரும் சாக நான்மட்டும் உயிருடன் போதல் அழகோ? அதனால் நீங்கள் இறப்பதன் முன் நான் இறப்பேன். நான் இறந்த செய்தியை அறிந்தவுடன் சுக்கிரீவனும் தாரையும் உயிர் விடுவார். இராமனும் தம்பியுடன் மடிவான். இதனை அறிந்து அயோத்தியாரும் மடிவர். சீதையால் இத்தனை துன்பம் விளைந்ததே" என அழுதான். சாம்பவனோ, "உன் குலத்துக்கு உன்னைத் தவிர வேறு பிள்ளைகளில்லை. அரசகுலம் அற்றுப்போம். ஆதலின் நீ மடிதல் முறையன்று. அதனால் நீ போய்ச் சீதையைக்காண முடியாமையையும் எமது அழிவையும் கூறு" என்றனன். இதனைக்கேட்ட அனுமான், "நாம் சீதையைக் கண்டு போனால் குறித்த காலவரம்பு கடந்ததோமென அரசன் கூறுவானோ? மாட்டான். ஆதலின் நாம் சீதையைத் தேடி அம்முயற்சியில் மடிவதே வீரம்" என்று கூறினான்.

மேலே கண்டதுவே கம்பர் கூறும் வரலாறு. அறிஞரே! இதனால் கம்பர் எவ்வளவு தூரம் உண்மையை மறைத்துப் பொய்யை மெய்யாகப் பாடியிருக்கிறார் என்பதையும், இதனால் தமிழுலகு எவ்வளவுதூரம் ஏமாந்துபோம் என்பதையும் சிந்திப்பீராக. சம்பாதி வானரரையெல்லாம் தின்று விடுவேனெனக் கூறியதையும், அது கேட்டு அங்கதன் அனுமானிடம் கூறியதையும்கம்பர் மறைத்து விட்டு, அனுமான் "சடாயுவைப் போல நாமும் சீதையைத் தேடுவதில் உயிரைவிடுவோம்" எனக்கூறினனெனவும், அதுகேட்டுச் சம்பாதி வந்தனனெனவும் கூறுகிறார். நடக்கவு முடியாத நிலையிலிருந்த சம்பாதியை அங்கதன் இறக்கிவிட்டனென வால்மீகி கூற, கம்பர் சம்பாதி தானே நடந்து வந்ததெனக்கூறுகிறார். சம்பாதி வானரரைக்கொன்று தின்பேனென்றதைக் கம்பர் கூறுதுமறைத்ததேன்


# தமிழரசு

## ஒரு புதிய அரிய வாரப் பத்திரிகை

### சென்னையினின்று விரைவில் வெளிவரும்.

உலக முழுவதும் நடைபெறும் அரிய இனிய நிகழ்ச்சிகளை உள்ளபடி உணர்த்தும்; அறிவை வளர்க்கும் பெரிய உண்மைகளை அழகிய முறையில் தெள்ளிய செந்தமிழ் நடையில் நன்கு புகட்டும்; அரசியல் துறையில் தனக்குத் தோன்றியவற்றை அவா அச்சமின்றி எடுத்து உரைக்கும்; சமுதாய சீர்திருத்தத்தில் யாவரும் நன்மையடையத்தக்க கொள்கைகளைச் செவ்வனம் விளக்கும்; சமயக் கோட்பாடுகளை ஆராய்ச்சி முறையில் இனிது கூறும்; ஆசார சீர்திருத்தம், தத்துவஞானம், செந்தமிழ் அறிவு இவற்றைப் புதிய வகையில் எளிய நடையில் இனிய அமைப்பில் துலக்கும்; வியாபார நுணுக்கங்களை அவ்வப்போது விரிக்கும். வைத்திய நுட்பதிட்பங்களை வகுத்துக் காட்டித் தெரிக்கும்; இதனைப் படிப்போர் தமிழறிவு, சமயசாத்திர ஞானம், ஆசார சீர்திருத்த உண்மைகள், அரசியல் முறை, உலக நடை முதலியவற்றை ஒழுங்காக உணரலாம்.

இதன் ஆசிரியர் சென்னைப் பச்சையப்பன் கல்லூரித் தமிழாசிரியர் திருவாளர் மணி. திருநாவுக்கரசு முதலியார் அவர்கள் பத்திரிகை உலகத்திலே அரிய பல கட்டுரை வளர்ந்து சிறந்து விளங்கும் டாக்டர் திருவாளர் எம். மாசிலாமணி முதலியார் அவர்களும் தேர்ந்த தமிழ்ப் புலவர்களும் ஆங்கில வித்துவான்களும் பிறரும் ஆராய்ந்து எழுதும் உயர்ந்த கட்டுரைகள் இதன்கண் திகழும்.

முந்துங்கள்! முந்துங்கள்!! முந்துங்கள்!!!

வேண்டுவோர் கீழ்வரும் விலாசத்துக்கு எழுதுவார்களாக.

வருட சந்தா | உள்நாடு ரூ. 3-0-0
| வெளிநாடு ரூ. 4-0-0

'தமிழரசு' காரிய நிலயம்,

31, வைத்தியநாத முதலி வீதி,

சென்னை.

(65)

(3-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

தேர்ச்சியுடையவர்களாக வேண்டுவது ஒரு பக்கமிருக்கட்டும்; புராணப் பண்டிதர்களின் ஆராய்ச்சி அறிவின் வியாபகக் குறைவு ஒரு பக்கமிருக்கட்டும்; இங்கிலீஷ் மூக்குக் கண்ணாடியைப் போட்டுக்கொண்டு பி.ஏ. பி.எல். படித்தும் வக்கீல் தொழிலைவிட கவிகளின் கவித்திறமையை வர்ணிக்கும் யோக்கியதையின் தேர்ச்சி ஒரு பக்கமிருக்கட்டும்; கல்வியிலும் அறிவிலும் தேர்ச்சியடைந்து ஒருவாறு அன்னியருடைய தயவை எதிர்பார்க்காமலிருக்கப்பட்டவருமானமற்றவர்கள் சமய சாத்திரங்களில் சொல்லப்பட்டிருக்கும் பாட்டுகளைபகிரங்கமாகசமூகங்களுக்கு எடுத்துச் சொல்லவேண்டும்.

சாத்திரங்களில் விதித்த விதியை தள்ளியும், விதிக்காததைச் செய்தும் எந்தத் தொழிலையும் பொருளுக்காக இசைந்தவாறு செய்து வரும் பார்ப்பனன் தன்னை பிராமணனென்று நினைத்துக் கொள்ளுகிறான். கல்வியும், செல்வமும் சமயப்பற்றும், சமய ஒழுக்கமுமுடைய தமிழன் தன்னை சூத்திரனாக்கியிருப்பது முன்னால் நின்றாலும் அதை உணர்வதில்லை அவனுடைய குருட்டுப் பக்தி உணர்ச்சி சொல்ல விடுவதில்லை. இவர்களிருவர்களுமிப்படியிருக்க, பார்ப்பனன் கெட்டுப்போனாலும் 'பார்ப்பன ஜாதியில் பிறந்துவிட்டானே; யாராயிருந்தாலும் நல்லெண்ணத்துடன் தானே நாம் தானம் கொடுக்கிறோம். அவன் பாவம் அவனோடு' என்று ஞாயமும் சொல்லுகிறார்கள். தானத்திற்கு அருகதையில்லாதவனுக்கு தானம் ஒருசிறிது கொடுத்தவன் குடும்பம் கூட மேல்நிலைகெட்டு நரகத்தையடைவன் என்றும், பார்ப்பானுக்கு தானம் கொடுக்கவேண்டுமென்றும், சாத்திரம் சொன்னதை நம் பண்டிதர்கள் சனசமூகங்களுக்குச் சொல்லவில்லை தானம் வாங்கிக்கொள்ளவரும் பார்ப்பனன் கொடுப்பவனின் பெருங் குணத்தை மதிக்காமல் இந்த மூடர்களை இனியும் ஏமாற்றலாமென்று நினைக்கிறான். நல்ல குணத்தாலும் எண்ணத்தாலும் சமய பக்தியாலும் ஏமாற்ற வந்தவர்களை ஏமாற்றின வைதீகப் பார்ப்பானும் கோயில் அர்ச்சகர்களும் அவர்களுக்கு அனுகூலமாகவிருக்கும் பார்ப்பன சீமான்தாக்கள் காரியஸ்தர்கள் பிரபுவின் தயாள குணத்தைக்கண்டு மகிழ்வதில்லை. அவர்களுடைய கூட்டத்தில் பிரபுவின் செய்கை மூட்டாள்தனமென்று பரிகாசப் படுத்தப்படுகிறது பிரபுவுக்குமுன்னால் பிரபுத் தன்மையிலும் சமய பக்தியிலும் பிராமண விஸ்வாசத்திலும் கர்மங்களைச் சரிவரச் செய்யச் சொல்லுவதிலும் எந்தப் பண்ணைகளுக்கு சைவ பிள்ளைகளும் உங்களை ஒத்தார் உயர்ந்தார் இல்லை என்பார்கள்.

---

என்றால், இராமனுக்கு வேண்டியவர்களுடைய தீய தன்மைகளை யெல்லாம் மறைத்து நலம் பெறக்காட்டுவதே கம்பருடைய தொழில். அது பற்றியே அதை மறைத்தவராவர். இனி மேற் செல்லுவோம்.

பார்ப்பனருக்கு நமஸ்காரம் செய்தால் ஒரு கையைத் தூக்குவார்கள். அதுவும் இடதுகையைத் தூக்குவார்கள். அதுவும் உச்சி வரையில் சிலருக்கும் உச்சிக்குமேல் சிலருக்கும் மார்புவரையிலும் சிலருக்கும் வாய்வரையில் ஒரு சிலருக்கும் தூக்குவார்கள். இதற்கு ஆசீர்வாதமென்று பெயர். சூத்திரனென்றால் அடிமையானதினால் பார்ப்பனனின் வலதுகையில் அக்கினியிருப்பதால் அதை யெடுத்தால் எரிந்துபோவார்களென்றும் சொல்லுவதை நீங்கள் கேட்டிருப்பீர்கள். சூத்திரன் என்னும் அடிமைக்கு அவ்வளவே போதும். சூத்திரனை க்ஷேமம் விசாரிப்பதாக விருந்தால் உன்னுடைய தேகம் சுகமா என்றே கேட்கவேண்டுமென்பது ஸ்மிருதியின் விதி. கல்வி, செல்வம், புகழ், மேன்மை முதலியவைகளைப்பற்றி சூத்திரனைப் பிராமணன் விசாரிக்கப்படாது. அடிமைகளுக்கு இவையனைத்து மிருக்காதல்லவா! இருக்கவும் சாத்திரமிடம் கொடுக்கவில்லை!! பிராமணனுக்குச் சூத்திரன் ஊழியம் செய்யவேண்டியவன், தேகம் க்ஷேமமாக விருந்தாலல்லவா ஊழியம் செய்ய முடியும்? பாவ தேகமான சூத்திரன் பிராமண ஊழியத்தால் புண்ணிய ஜென்மமெடுக்க வேண்டும். இடுப்பிற்கு மேற்பட்டு இடதுகையைக்கொண்டு எந்த வேலையும் செய்யக்கூடாதென்பது ஸ்மிருதியின் விதி. உயர்ந்த வேலைகள் செய்ய ஏற்பட்ட வலதுகையைக் கொண்டு அடிமையான சூத்திரனுக்கு ஆசீர்வதிப்பது சமயத்திற்கும் கடவுளுக்கும் ஏற்காது. ஆனதால் இழிவான வேலைக்கு ஏற்பட்ட இடதுகையைக்கொண்டே இழிவான சூத்திரர்களுக்கு ஆசீர்வதிப்பதே பிராமண தருமம். (தொடரும்)

## நெல்லூரில் தலைவர்களுக்கு உபசாரப் பத்திரங்கள்



டாக்டர் சுப்பராயன் முனிசிபல் உபசாரப் பத்திரத்துக்குப் பதில் அளித்தல்
(போட்டோ நியூஸ் ஏஜன்ஸி)



திரு. ஏ. இராமசாமி முதலியார் முனிசிபல் உபசாரப் பத்திரத்திற்குப் பதில் அளித்தல்
(போட்டோ நியூஸ் ஏஜன்ஸி)

ஜனங்களுக்குச் சந்தோஷத்தைத் தரும்

## ஜனோபகாரி தைலம்.

இத்தைலமானது 27 வகை வன மூலிகைகளால் செய்யப்பட்டது. அநேக நற்சாட்சிகள் பெற்றது.

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்"
நல்ல குளிர்ந்த வாசனையுள்ள தைலம்.

இத்தைலத்தால் தீரும் வியாதிகள்:—தீராத தலைக்கனம், ஓயாத மண்டையிடி, ஒருதலைக்குத்து, தலையரிப்பு, முடிகழிதல் இவைகளை நீக்கிக் கூந்தலை வளரச்செய்யும் காதிரைச்சல், காதடைப்பு, குத்தல், கண்வலி, எரிவு, கூச்சம், நீர்வடிதல், சிகப்பு விழுதல், நாசியிலிருந்து மஞ்சள்நிறத் தண்ணீர் வடிதல், ஓயாத் தும்மல், சிராபோல் விழுதல், வாய்க்கசப்பு, புளிம்பு, தூர்க்கந்த மடித்தல் முதலிய வியாதிகள்நீங்கி தேகத்திற்குச்சுகம்உண்டாகும். கண்டத்துக்குமேல் ஏற்படக்கூடிய 96 வியாதிகளும் தீரும்.

பெரிய டின் ரூ. 1—12—0 } தபால் சார்ஜ் வேறு.
சிறிய டின் ரூ. 1—0—0 }

## பார்சவாய்வு மருந்து.

விதை வாய்வு, நரம்புத்தடிப்பு, வலி, வீக்கம் முதலிய விதை சம்மந்தமான சகல வியாதிகளுக்கும் இந்த மருந்தை உபயோகியுங்கள். பத்தியம் கிடையாது. பெண்கள் அண்டவாய்வுக்கும் உபயோகிக்கலாம்.

14 வேளை மருந்து ரூபா 1—0—0. தபால் சார்ஜ் வேறு.

சிங்கப்பூர், பினங்கு முதலிய வெளிநாட்டு நேயர்கள் வி. பி. செலவு சேர்த்து முன்பணம் அனுப்பவேண்டும். நீங்கள் கடிதம் எழுதும்போது தெளிவாய் அச்செழுத்தைப்போல இங்கிலீஷிலோ, தமிழிலோ எழுதவேண்டும். சோல் ஏஜண்டுகள் தேவை விவரம் நேரில் எழுதி தெரிந்துகொள்ளவும்.

உ. கா. நாகூர்மீரா அன் பிரதர்,
7-வது தெரு, ஏர்வாடி போஸ்டு,
திருநெல்வேலி ஜில்லா (தென்னிந்தியா.)

(41)

இதுவரையில் வெளிவராத தமிழ் புஸ்தகம்

"மோட்டார்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அநுபோகப் பயிற்சிமுறையும்"



விலை ரூபா 1—8—0
(தபால் சார்ஜ் வேறு)
(1916-ம் வருஷம் ஸ்தாபிக்கப்பட்டது)

அன்னிய நாட்டார் முன் பணம் அனுப்பவேண்டும் தவிர, 3 மாதத்தில் மோட்டார் டிரைவிங் அண்டு மெக்கானிஸம் கற்றுக் கொடுத்து கவர்ன்மெண்ட் லைசென்ஸ் வாங்கிக் கொடுக்கப்படும்.

தென் இந்தியா மோட்டார் இஞ்ஜினீரிங் ஒர்க்ஸ்,
மைலாப்பூர், சென்னை.
(11)

## முன்னேற்றம்

இஃது சுயமரியாதைக் கொள்கையை ஆயுதமாகக் கொண்டு சிங்கப்பூரிலிருந்து வெளியாகும் ஒரு தமிழ் வாரப் பத்திரிகை.
இதன் ஆசிரியர்-வே.சி.நாராயணசாமி
இதன் சந்தா ரூ. 4-0-0 அல்லது $ 2—25.

விலாசம்:—மானேஜர்,
"முன்னேற்றம்"
(எப்) 155, ஸிலிரோட், சிங்கப்பூர்.

## எங்கு சரசமான விலை?

நயம் சரக்கு?

அயல் நாட்டிலிருந்து இவண் வந்து விற்பதற்கு சரியான பெங்கால், கலர், சில்வர், மேச்சஸ்கள், மாவிக்வயர் அடியிற் கண்டவர்களிடம் தேவையானது கிடைக்கும்.

காரியஸ்தர், தீப்பெட்டிகம்பெனி,
(37) பாலக்காடு, (தென்மலபார்.)

## நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்

(1919-ல் பம்பாயில் ஸ்தாபிக்கப்பட்டது)

சேர்மன்:—

சர்: டோராப் ஜே. டாட்டா Kt.

மூலதனம்:

| | | |
|---|---|---|
| அனுமதிக்கப்பட்ட மூலதனம் | ... ரூ. | 6,00,00,000. |
| பதிவு செய்யப்பெற்ற ,, | ... ரூ. | 3,56,05,275. |
| வசூலான ,, | ... ரூ. | 71,21,055. |

இதைப்பற்றி 1929 ஜுன் மாதம் வெளிவந்த "இந்தியன் இன்ஷியூரன்ஸ்" பத்திரிகை பின் வருமாறு கூறுகிறது: "நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி இந்தியாவிலே மிகவும் பெரிய ஜெனரல் இன்ஷியூரன்ஸ் கம்பெனியென்று ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. மூலதனத்தைக் கவனித்தால் அது உலகத்திலுள்ள பெரிய இன்ஷியூரன்ஸ் கம்பெனிகளில் ஒன்றென்று கூறிக்கொள்ள அதற்கு உரிமையுண்டு."

ஏஜெண்டுகள் இல்லாத இடங்களில் உயிர், நெருப்பு, மேரைன், மோட்டார்கார், விபத்து முதலிய பலவித அஷ்யூரன்ஸ்களுக்கும் ஏஜென்சிகள் கிடைக்கும்.

பிராஞ்சு மானேஜர்,
4, முதல் லைன்பீச், சென்னை.

(28)

ரூ. 2-15-0 ரூ. 2-15-0

## பௌண்டன் பேனா

நீங்கள் கனவிலும் நினைக்கமுடியாத குறைந்த விலை!

இங்கிலாந்தில் செய்து மாக்ஷிமை தங்கிய 5-ம் ஜார்ஜ் சக்கரவர்த்தியால் புகழப்பெற்றுப் பிரக்யாதியடைந்த ரிஜிஸ்டர்டு W. B. பவுண்டன் பேனா, தங்கப்ளேட் நிப்பு போட்டது. இதை வாங்குபவர்களுக்கு எக்காலமும் ஓடக்கூடிய மூன்று வருஷம் உத்தரவாதமுள்ள லீவர் பாக்கெட் வாட்சு இனாமாய் அனுப்பப்படும்.



சென்னை இராஜதானியில் இந்தப் பவுண்டன் பேனாவைப் பிரபலப்படுத்துவதற்காக லீவர் பாக்கெட் வாட்சுகளை ஏராளமாகத் தருவித்து ஒவ்வொருவருக்கும் இனாமாக அனுப்பிக்கொண்டு வருகிறோம். ஸ்கூல் உபாத்தியாயர்கள், வக்கீல்கள், வக்கீல் குமாஸ்தாக்கள், இன்னும் ஏனைய உத்தியோகஸ்தர்கள் எல்லோருக்கும் எழுதப்பேனாவும், மணி பார்க்கக் கடியாரமும் இந்த சொற்ப விலையில் கிடைக்கிறது ஆச்சரியமல்லவா?

W. B. பவுண்டன் பென் விலை ரூ. 2-15-0. இதற்கு மேற்சொல்லிய பாக்கெட் வாட்சு இனாம். ஒரே காலத்தில் இரண்டு பேனாக்களுக்கு ஆர்டர் கொடுத்தால், பாக்கெட் வாட்சுக்குப் பதிலாக ரோல்டு கோல்டு ரிஸ்டு வாட்சு எந்த ஷேப் வேண்டுமோ இனாம்.

முக்கிய குறிப்பு:—எங்களிடமிருந்து ½ டஜன், ½ டஜன் இப்படிப் பவுண்டன் பேனாக்களைத் தருவித்துப் பிறகு, பேனாக்களையும், கடியாரங்களையும் தனித்தனியாக அதிக விலைக்கு விற்று லாபம் சம்பாதிக்கவும் வழியுள்ள இத்தருணத்தைக் கைவிடாதீர்கள்.

(30) The Laxmi Trades Co., Sowcarpet, Madras.

சுயமரியாதையே சுகவாழ்வு

அதி நூதனம்! மிக ஆச்சரியம்!!

மாதம் 100 ரூபா முதல்
500 ரூபா வரை
சம்பாதிக்கக்கூடிய
சிறிய சைஸ்
தையல் இயந்திரம்



இது சாதாரண மெஷின்களைப் போலவே மேஜையின் பேரில் முடுக்கி, தையல் வேலை செய்பவர்களும், பெண்களும், குழந்தைகளும், எல்லா தையல் வேலையும், சட்டைகள், கோட்டுகள், துணிகள் முதலியவை தைக்கலாம். இதைச்சேர்ந்த சாமான்களுடன் இதற்குரிய பெட்டியில் பாக்கிங் செய்தனுப்பப்படும்.

5 வருஷ கியாரண்டியுடையது
விலை ரு 8—4—0.

[illegible]

லக்ஷ்மி டிரேட்ஸ் கம்பெனி,
(80) [illegible], மதராஸ்.

வலியுள்ளவர்கள்!
சீக்கிரம் குணமடையும் மருந்துக்கு ஆசைப்படுவோர்கள் அறிவதான்
தேனராகதாமிர்தம்
தீரும் வியாதிகள்

| | | |
|---|---|---|
| தலைவலி | வீக்கம் | கண்டு கடி |
| பிடரிவலி | சுரம் | தேள் கடி |
| முதுகுவலி | சளி | மேக ஊறல் |
| இடுப்புவலி | இருமல் | தேமல் |
| குடைச்சல் | மூக்கடைப்பு | வெட்டுக்காயம் |
| கை கால் பிடிப்பு | மார்சளி | பல்வலி |
| நெஞ்சடைப்பு | ஜன்னி | செவி நோய் |

நிமிடத்தில் குணப்படுத்த ஒரு தனி அமிர்தம் போதுமானது.
ஒருமுறை பரீக்ஷிக்கவும்.

புட்டி 1க்கு விலை ரூ. 1—8—0 (தபால் செலவு வேறு)
நல்ல கமிஷன்; ஏஜண்டுகள் தேவை:—
தேனராகதாமிர்தம் கம்பெனி, அம்மாபேட்டை, சேலம் S. I.

நிபுணர்களிடம் குணமடையாமல் விட்டு ஏன் கவலைப்படுகிறீர்? அபூர்வ சிகிச்சை! இலவசம்—சாதனை செய் ஆச்சரிய விர்த்தி!!

சுவாச காச நிவாரணி.

ஆயிரக்கணக்கான பேர்கள் குணமடைந்திருக்கின்றனர். சுவாச காச ரோகத்தினால் நுரையீரல், சுவாசக்குழல், மார்பு இவைகளில் உண்டாகும் கபம், இருமல், இளைப்பு, சீதளம், மார்ச்சளி, நெஞ்சுவலி, தொண்டையில் உண்டாகும் இரைச்சல், அடைப்பு, கரகரப்பு, எரிச்சல், வலி, புண் முதலியவைகளையும், சாதாரண ஜலதோஷம், தும்மல், பீனிசம், [illegible] நாசியிலும் நீர்வடிதல், குழந்தைகள் மார்ச்சளி முதலியவைகளையும் சமயா சமயமாய் பொடி உபயோகித்த அந்த நிமிஷத்திலேயே நிவர்த்தி செய்வதுடன், இரத்தத்தை சுத்தி செய்தும் கெட்டியான கபத்தை இளகச்செய்தும் கபத்தை வெளியில் தள்ளியும், சுலபமாய் மூச்சு விடும்படியாயும், தாராளமாய்ப்பேசும்படியாயும், பசி தீபனத்துடன் ஆகாரம் உட்கொள்ளும்படியாயும் இராத்திரியில் நன்றாய் அயர்ந்து சுகமாய் நித்திரை செய்யும்படியாயும் செய்கிறது.
48 நாள் ஒரு மண்டலம் உபயோகிக்கக்கூடிய டின் 1க்கு ரூ. 1—4.
தபால் கூலி அணா. 4. ஒரு டஜன் டின் விலை ரூ. 9.
6 டின் விலை ரூ. 5-4. 3 டின் விலை ரூ. 3.
F. M. S. முதலிய ஊர்களுக்கு முன் பணம் ரூ. 2-8. அனுப்பவேண்டும். முன் பணம் இல்லாத ஆர்டர்களை கவனிக்கப்படமாட்டாது.
புரொப்ரைட்டர், திருநாவுக்கரசு வைத்தியசாலை,
அங்காளம்மன் கோவில் தெரு, செவ்வாய்ப்பேட்டை, சேலம். S. I.

பட்டணம்
ரூ. 20 ஆகயிருந்தது ரூ. 5-8-0
தான்
அமெரிக்கன் சிறிய சினிமா
மெஷின்
(நெ. 2. சிறிய சைஸ், எலெக்டிரிக் விளக்கு பாட்டெரியுடன்)
வெகு ஆச்சரியமான இந்த மெஷி



னினால் பெரிய படக்காக்ஷிசாலையில் அநுபவிக்கும் ஆனந்தத்தை உங்கள் வீட்டிலேயே அடையலாம். நாடகங்கள், திரேக்செயல், கார், மோட்டார், ரயில், ஏரோப்ளேன் விபத்துகள், பாரிஸ் மாதர் லீலைகள், மலைகள், ஆறுகள் முதலிய காக்ஷிகள் ஓடுவதும் அசைவதும் நிஜத்தெளிவாகத் தெரியும். பிலிம் டேப் ஒரு ஜஸ்கூட அனுப்பப்படும். உபயோகிக்கும் முறையும் மெஷினுடன் உண்டு.

மெஷின் குறைந்த (அசல்) விலை ரூ. 5 8 0
தனி பிலிம் டேப் 1 கஜம் 0 6 0
3 கஜங்கள் 1 0 0
முந்துங்கள்!
லக்ஷ்மி ட்ரேட்ஸ் கம்பெனி,
173, தங்கசாலை வீதி, சென்னை.
(30)

ஆனந்தபோதினி

இது தமிழில் வெளிவரும் மாதப் பத்திரிகை; தமிழ் நாட்டில் வெளிவரும் மாதப் பத்திரிகைகளில் முதன்மை பெற்றது; 20,000 சந்தாதார்களையுடையது; கல்வியிற் சிறந்தோர் பலரால் எழுதப்பட்டு வரும் உயர்ந்த வியாசங்களைக் கொண்டு வெளிவருவது; எம்மதத்தார்க்கும் சம்மதமான போதனைகளைப் போதிப்பது; 64-பக்கங்கொண்டது; முகப்பு ஆப் டோன் படத்துடனும், பல பிளாக்குகளுடனும் மாதந்தோறும் குறித்த தேதி தவறாமல் வெளியாகிப் பலர்க்கும் ஆனந்தத்தை யூட்டி வருவது; மிகக் குறைந்த சந்தாத் தொகையுள்ளது.

மாதிரி காபி இனாம்.
வருட சந்தா தபால்கூலி யுள்பட
உள்நாடுகளுக்கு ரூபா 1—0—0
வெளிநாடுகளுக்கு ,, 1—4—0
ஆனந்தபோதினி ஆபீஸ்,
தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.
(5)

ரத்த விர்த்தி, தேக பலம், தாது புஷ்டிக்கு
தேத்தாண்விதை லேகியம்
தங்க பஸ்பம் சாப்பிடுங்கள்
பரீக்ஷைக்கும் பலனுக்கும் உத்தரவாத முள்ளது.

எப்படி? ஒரு தொட்டி கலங்கிய ஜலத்தில் ஒரு தேத்தாண் விதையை உரைத்துக் கலக்கினால் உடனே அந்த ஜலம் பூராவும் தெளிந்து சுத்தமாகிவிடும். அதுபோல் உங்கள் ரத்தத்தையும் சுத்தம் செய்து நல்ல ரத்தத்தை ஏராளமாகப் பெருக்கி தேக பலம், தாது புஷ்டி உண்டு பண்ணும். சகலவித உஷ்ணம், வெள்ளை, வெட்டை, நீரழிவு, காசம், க்ஷயம், இருமல்களுக்கு ஒரு மண்டலம் சாப்பிட்டால் போதும். குழந்தை முதல் ஆண் பெண் யாவரும் சாப்பிடலாம். அதிக ருசியுள்ளது. 50 வேளை டின் ரூ 2-8-0. வி. பி. வேறு. உயர்ந்த பலனை விரைவில் அடையவேண்டுவோர் லேகியத்துடன் சேர்த்துச் சாப்பிட 50 வேளை தங்கபஸ்பம் ரூ. 10-0-0. 100 வேளை ரூ. 20-0-0.
ஏஜண்டுகள் தேவை:—
(35) தேண்டபாணி வைத்தியசாலை, பழனி.

குமரன்
காரைக்குடி தனவைசிய நாட்டில் பிராமணரல்லாதார் முன்னேற்றத்திற்காக உழைக்கும் சிறந்த செந்தமிழ்ப்பத்திரிகை,
அடிமை வாழ்வைப் போக்கிக் குருட்டு நம்பிக்கையை நீக்கி, அறிவுடன் சொல்லுதலும், கட்டுரைகளும் தாங்கி வெளிவருகின்றது.
வருடச் சந்தா விவரம்:—
வாரப்பதிப்பு ரூ. 5—0—0
மாதப்பதிப்பு ரூ. 1—8—0
மானேஜர் குமரன், காரைக்குடி
(ஏ)

Beauty For Ladies !
பெண்களுக்கு
அழகான புடவை! உயர்ந்த மஸ்லின் பச்சை, புளூ, வயலெட், கருப்பு, செம்பு, ஆரஞ்சி, ரோஸ், ஸ்காய் கலர்கள். கரைக்கும் முந்திக்கும் பூவேலையினமுள்ள நூதனமான புடவை.
18 முழம் × 2½ அகலம் ரூ. 4- 6.
15 முழம் × 2½ அகலம் ரூ. 3-12.
The Madura Oriental Trading Co.,
Laxmi, Cloth Store, MADURA.
(34)

திரு. ஜே. எஸ். கண்ணப்பர் அவர்களால் சென்னை "திராவிடன்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பட்டு வெளியிடப்பட்டது.